# மொழி ஒப்பியல்

ரா. சீனிவாசன், எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 30.

அணியகம்
சென்னை-30

# மொழி ஒப்பியல்

ரா. சீனிவாசன், எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 30.

அணியகம்
சென்னை-30

முதற் பதிப்பு டிசம்பர் 1969

விலை ரூ. 5-00

கிடைக்குமிடம் :

1. அணியகம்
22, செல்லம்மாள் தெரு,
சென்னை-30.

2. பாரி நிலையம்
59, பிராட்வே,
சென்னை-1.

சுதேசமித்திரன் ஜாப் பிரஸ்
மவுண்ட்ரோட், சென்னை-2

# முன்னுரை

மொழி இயல் என்பது மொழி விளக்க இயல், மொழி ஒப்பியல், மொழி வரலாறு என மூவகைப் படும். இது **மொழி ஒப்பியல்** ஒன்றை மட்டும் விரிவுபடுத்தி விளக்குவது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைச் சுருக்கித் தரும் இந்நூல் அறிஞர் கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கணத்தை அடியொற்றி அமைந்ததாகும்.

இதில் திராவிட மொழிகளின் ஒலியியல், சொல்லியல், தொடரியல் முதலிய ஒப்புமைகளைக் காட்டித் தனித் தனிக் கட்டுரைகளில் ஆற்றொழுக் காகச் செய்திகள் இடம் பெறுகின்றன. பின் இணைப்பாக மொழி வரலாற்றுக் கட்டுரைகளும் ஒரு சில கொடுக்கப்பட்டுள்ளன.

பி. ஏ., எம். ஏ., தேர்வுகளுக்கு அமைந்துள்ள பல்கலைக் கழகப் பாட திட்டத்தை ஒட்டியும் கால்டு வெல் எழுதிய ஒப்பிலக்கண நூல் தலைப்புக்களை யொட்டியும் கட்டுரைகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் முன்முகத் தேர்வு (Service Commission) எழுதுவோருக்கும் சுருக்கமான நூல் ஒன்று தேவைப்படுகிறது. அவர்களுக்கும் தெளிவாக அடிப் படைச் செய்திகளை உணர்ந்துகொள்ள இந்நூல் உதவும்.

**ரா. சீனிவாசன்.**

# உள்ளுறை


1. தமிழ் உயர்தனிச் செம்மொழி ... 1
2. திராவிட மொழிகள் ... 5
3. திராவிட மொழிகளின் ஒலியியல் ... 12
4. திராவிடச் சொற்கள் ... 35
5. பெயர்ச் சொல் ... 46
6. வேற்றுமை ... 56
7. பெயரடைகள் ... 70
8. எண்ணுப் பெயர்கள் ... 75
9. மூவிடப் பெயர் ... 85
10. சுட்டு வினுப் பெயர்கள் ... 89
11. வினைச் சொற்கள் ... 91
12. தன்வினை பிறவினைகள் ... 100
13. தொடரியல் ... 106
14. பின்னிணைப்பு (வரலாற்றியல் கட்டுரைகள்)
    (1) மொழியின் வரலாறு—அறிமுகம் ... 113
    (2) தமிழ்ச் சொல்லமைப்பு ... 117
    (3) ஒலிநிலையில் மாறுதல்கள் ... 122
    (4) சொற்பொருள் மாற்றம் ... 130
    (5) சொல் இலக்கண மாற்றம் ... 134
    (6) மொழிக் கலப்பு ... 137
    (7) எழுத்துக்களின் வரலாறு ... 141

# 1. தமிழ் உயர்தனிச் செம்மொழி

தமிழ் என்ற சொல்லே திராவிடம் என வடமொழியில் வழங்குகிறது என்பர் அறிஞர் கால்டுவெல். தமிழைக் குறிக்க வழங்கிய சொல் திராவிடம் எனினும் திராவிட மொழிகள் அனைத்தையும் குறிக்க ஒரு பொதுச் சொல் தேவைப்படுகிறது. அச்சொல் திராவிடம் என வழங்கியது. எனவே, தமிழ் மொழியைக் குறிக்க வழங்கிய திராவிடம் என்ற சொல் இப்பொழுது இவ்வின மொழிகள் அனைத்தையும் குறிக்கின்றது.

திராவிட மொழிகள் அனைத்திலும் சிறந்த இலக்கிய வளமும் திருந்திய அமைப்பும் கொண்டது தமிழே. மிகச் சிறந்த அடிப்படைச் சொல் வடிவங்களைப் பெற்றிருப்பதோடு மற்ற மொழிகளுக்கும் தரத்தக்க வகையில் ஒன்றுக்கு மேற் பட்ட வடிவங்களையும் தாங்கி இருக்கின்றது.

தமிழர் தொழில் வளமும் ஊக்க மிகுதியும் திரைகடல் ஓடியும் பொருள் தேடும் இயல்பும் படைத்தவர்கள். ஆதலின் மலேயா, ஈழம், ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் தமிழரே ஏனைய திராவிட இனத்தவரினும் மிகுதியாகக் குடி யேறி உள்ளனர். தமிழ்நாட்டின் தலைநகர் 'மதராஸ்' என்பது. மதில் (சுவர்) என்ற பொருளில் கோட்டைச் சுவருடைய நகரைக் குறிக்க இப்பெயர் அமைந்தது என்பர் அறிஞர் கால்டுவெல்.

பாண்டியர், சோழர், சேரர் இம்மூவரைப் பற்றி வட நூல்களிலும், அசோகர் கல்வெட்டுக்களிலும் குறிப்புக்கள் கிடைக்கின்றன. தமிழ் தெலுங்கர்களால் அரவம் எனக் கூறப்படுகிறது. மூச்சொலிகள் (aspirates) அற்ற மொழி

(அ+ரவம்—ஒலியற்றது) என்ற பொருளில் இச் சொல் வழங்கியிருக்கலாம் என்று கால்டுவெல் கருதுவர்.

தமிழ் என்ற சொல்லின் தோற்றம் புலப்படவில்லை. அதேபோலத் தெலுங்கு என்ற சொல்லின் பொருளும் தெளிவு பெறவில்லை என்றே கூறலாம். மலைகள் மிகுந்த பகுதியில் வாழும் மக்கள் மலையாளிகள் என்றும், அவர்கள் மொழி மலையாளம் என்றும் கூறப்படுகின்றன. கருநாடகம் என்ற சொல்லின் திரிபாகக் கன்னடம் மருவி இருக்கலாம். துளு, குடகு இவற்றையும் சேர்த்துத் திருந்திய மொழிகள் ஆறு என்பர். ஏனையவை இலக்கிய வளமற்ற மொழிகளாகும்.

திராவிட மொழிகள் ஓர் இனம் என்று அறியப்படுகிறது. எந்த ஒரு மொழியிலிருந்தும் மற்றவை பிறந்தன என்று கூற முடியாது. ஒவ்வொன்றும் ஒருவகையான திரிந்த வடிவங்களைப் பெற்றுத் தனித்தனி மொழியாகக் கிளைத்துள்ளன. மலையாளம் ஒன்று மட்டும் நேரே தமிழிலிருந்து கிளைத்தது என்று கூற முடியும்.

எனினும், வடமொழியின் தாக்குதலுக்கு மிகுதியாக உட்படாமல் உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது தமிழ் ஒன்றே எனக் கூறலாம். அதனால்தான் இது செந்தமிழ் என்று சிறப்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் கவிஞர்கள் மொழியிலும், உழவர்கள் ஒலியிலும் மொழியின் தொன்மையையும், தூய்மையையும் காண முடியும். இவ்விரு நிலைகளிலும் தமிழ் வடமொழிக் கலப்புப் பெறுமல் இயங்கி வருகிறது.

தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்த மொழிகளுள் ஒன்று; இது திருத்தப்பாடு பெற்ற இலக்கிய வளம் மிக்க மொழியாகும். தெலுங்கும் கன்னடமும் மிகப் பழைய மொழிகளேயாம். எனினும் அவற்றிற்குத் தமிழைப் போலத் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் இல்லை.

தமிழ் உயர்தனிச் செம்மொழி என்று போற்றப்படுவதற்குரிய காரணங்கள்:

(1) ஏனைய திராவிட மொழிகளின் இலக்கிய நூல்கள் மொழியால் பேச்சு நடையோடு முற்றிலும் வேறுபடுகிறது. தமிழ் இலக்கிய மொழி பேச்சு நடையினின்று உருவாகி அப்பேச்சு மொழியே பெரிதும் போற்றப்பட்டு அதற்குத் தலைமையும் சிறப்பும் அளிக்கப்படுகிறது. இவை இரண்டும் இருவேறு இயல்பாகப் பிரியாமல் ஒத்து இயங்கி வருகின்றன.

(2) தமிழ் மொழியின் சொற்களும், இலக்கண வடிவங்களும் மிகுதியாக நின்று அம்மொழியின் தொன்மையை நிலை நாட்டுகின்றன. பிற மொழிகளின் இலக்கணம் இதற்குப் புகுத்தப்படவில்லை. தன்னியல்பால் எழுந்த இலக்கணமே இதற்கு அமைந்துள்ளது.

(3) சிறந்த இலக்கியங்கள் மட்டும் பெற்றிராமல் இலக்கண நூல்களும் தொன்றுதொட்டு வளர்ந்திருக்கின்றன. அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள் அதற்கு முன்னால் இருந்த ஆசிரியர்களையும் கருத்துக்களையும் 'என்பர்' 'என்மனார்' 'என்ப' என்ற தொடர்களால் குறிப்பிடுகின்றன.

(4) தமிழின் சொல் வளத்துக்குக் காரணம் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் தமிழில் வழங்க அவற்றுள் ஒவ்வொன்றும் ஏனைய திராவிட மொழிகளில் தனித்தனிச் சொற்களாக நிலவுகின்றன என்பதாம்.

வீடு, இல், மனை, குடி என்ற சொற்கள் தமிழில் வழங்குகின்றன. 'வீடு' ஒன்றே இப்பொழுது மிகுதியாகத் தமிழில் பேச்சு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் இடம் பெற்றுள்ளது. 'இல்' என்பது தெலுங்கிலும், 'மனை' என்பது கன்னடத்திலும் தனித் தனிச் சொற்களாக வழங்குகின்றன.

(5) இன்றைய தமிழோடு, கன்னடமும், தெலுங்கும் வேறுபட்டு வழங்கினலும் பழந்தமிழ் வடிவங்களோடு இவை தமக்குள் ஒத்திருப்பது தமிழின் தொன்மையைப் புலப் படுத்தும்.

(6) தமிழின் வேர்ச்சொற்கள் பல தெலுங்கு மொழியில் **ஒலியிடம் பெயரல்** (Metathesis) என்ற விதியின்படி மாறி யுள்ளன. சிறப்பாகச் சுட்டுப் பெயர்களும், மூவிடப் பெயர் களும் இத்தகைய மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

அது ; அதனை - தானி

அவன் - வாடு ; அவர் - வாரு.

(7) தமிழில் வழங்கும் வடசொற்கள் மிகுதியாக மருவி உருமாறி விளங்குகின்றன. இதுவும் இதன் தொன்மைக்கு ஒரு சான்ருகும்.

(8) மக்கள் அரசியல் வாழ்வும் செய்திகளும் கல்வெட் டுக்களில் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் கன்னடப் பகுதியிலும் தெலுங்குப் பகுதியிலும் அச் செய்திகள் சமஸ் கிருதத்தில் விளங்கத் தமிழ்நாட்டுப் பழங் கல்வெட்டுக்கள் தமிழில் வரையப் பெற்றுள்ளன.

எனவே, தமிழ் உயர்தனிச் செம்மொழியாக விளங்குவ தோடு தொன்மை மிக்க வழக்காறு பெற்று விளங்கியது என்பது புலனுகின்றது. பிற மொழித் தாக்குதல் குறைவாக வும் தொடர்ந்த இலக்கிய வழக்காறு பெற்றதாகவும் இது வழங்கி மொழி ஆராய்ச்சிக்கு மிகுதியும் உதவுகிறது ; திராவிட இன மொழிகளின் தொல்வடிவங்களைக் காட்டும் பொதிப் பொருளாக இது விளங்குகிறது.

# 2. திராவிட மொழிகள்

அறிஞர் கால்டுவெல் திருந்திய மொழிகள் ஆறு திருந்தா மொழிகள் ஆறு எனப் பன்னிரண்டு மொழிகளை மட்டும் திராவிடமொழிகள் எனக்குறிப்பிடுவர். இப்பொழுது அவை இருபதுக்கு மேற்பட்டவை என அறியப்படுகின்றன. அவை பின்வருமாறு :

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குருக், கூ அல்லது குவி, கோந்த், படகா, குடகு, கதபா, இருளா, கொலாமி, குறவா, மால்தோ, பர்ஜி, கோயா, கொண்டா, நயிக்காடி, நாக்கிபோடி, கோதம், துதம் முதலியன என்பர்.*

இவற்றுள் தெலுங்கு மொழியே மிகுதியாகப் பேசப்படுகிறது. தமிழ் மொழி தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழம், மலேயா, தென் ஆப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்களால் பேசப்படுகிறது. இந்தியாவில் தென்னகத்திலும் ஈழத்து வடபகுதியிலும் தமிழ் மிகுதியாகப் பேசப்படுகிறது. தெலுங்கு ஆந்திரப்பிரதேசத்திலும், கன்னடம் மைசூர்ப் பகுதியிலும், மலையாளம் கேரளப் பகுதியிலும், துளு மங்களூர்ப் பகுதியிலும், குடகு கூர்க்கிலும், கோதம், துதவம், படகா நீலகிரி மலைப்பகுதிகளிலும் பேசப்படுகின்றன. கொலாமி மத்திய பிரதேசத்திலும் ஹைதிராபாத்திலும் பேசப்படுகிறது. ஏனைய மொழிகள் பெரும்பாலும் வடஇந்திய மலைப்பகுதிகளில் பேசப்படுகின்றன.

பழைய திராவிட மொழிகளை மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் காண்பர். வடநாட்டு மலைப்பகுதிகளில் பேசப்படும் திராவிட மொழிகளை வடதிராவிடம் என ஓர் இன

* History of Tamil Language Professor T. P. Meenakshisundaram பக்கம் 16.

மாகவும் தென்னகத்துத் திராவிட மொழிகளைத் தென் திராவிடம் என மற்றோர் இனமாகவும் மத்திய பிரதேசத்தில் பேசப்படும் மொழிகளை மத்திய திராவிட இனம் என்றும் பகுத்துக் காண்பர். இவற்றுள் தெலுங்கு மொழியை மத்திய திராவிட மொழியோடு மிகுதியும் தொடர்புபடுத்திக் காண்பர். இகரவிகுதி அஃறிணை ஒருமைக்கும் பெண்பாலுக்கும் பொதுவாகத் தெலுங்கு மொழியில் வழங்குகிறது. இது மத்திய திராவிட மொழியின் வழக்காறு எனக் கருதப்படுகிறது.[1]

பிராஹுயி மொழி இந்திய நாட்டுக்கு வெளியே பலுசிஸ்தானத்து மலைப்பகுதிகளில் பேசப்படுகிறது. இதைக்கொண்டு திராவிட மொழிகள் இந்தியாவுக்கு அப்பால் மத்திய ஆசியா வரை பரவி இருந்தது என அறியப்படுகிறது.

திராவிட மொழிகள் மிகவும் பழமை வாய்ந்தவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தியாகும். சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய குறிப்புக்கள் அசோகர் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

## திராவிட மொழிகளின் பிரிவுகள்[2]

**இலக்கிய மொழிகள் :** தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்.

**இலக்கியம் பெறாத மொழிகள் :**

(1) தென்னகம் - துளு, கூர்க், தோதம், கோதம்.

(2) மத்திய திராவிடம் - (அ) கொலாமி—நாயிகி.
(ஆ) பர்ஜி, ஒல்லாரி, போயா.
(இ) கோண்டி, கொண்டா.
(ஈ) கூஇ - கூவி.

1. A History of Tamil Language P. 24. Professor T. P. Meenakshi sundaram.

2. Professor T. Burrow. The Sanskrit Language Page 376.

(3) வட திராவிடம் (அ) கூர்க், மால்டோ.
(ஆ) பிராஹூ.

## திராவிட மொழிகளும் வட மொழியும்

திராவிட மொழிகள் வட மொழியினின்று முற்றிலும் வேறுபட்டவை என்பதற்கு அறிஞர் கால்டுவெல் கீழ்வரும் காரணங்களைக் குறிப்பிடுவர்.*

(1) தமிழ் மொழியில் வடசொற்கள் மிகவும் குறைவு. இம்மொழியில் இயற் சொற்கள் மிகுதியாக வழங்குகின்றன.

(2) மொழிக்கு அடிப்படையான மூவிடப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், பெயர் வினைகள், கால விகுதிகள், தொடர் அமைப்பு முறை முதலியவை முற்றிலும் வேறுபட்டு இயங்குகின்றன.

(3) பிறமொழிச் சொற்களைத் தனித்துப் பிரித்து உணர்ந்து அவற்றைத் திசைச் சொற்கள் எனவும் வட சொற்கள் எனவும் பிரித்து ஒதுக்கி வந்துள்ளனர்.

(4) மக்கள் பேச்சு வழக்கிலும் கவிஞர்களின் செய்யுள் வழக்கிலும் வடசொற்கள் குறைவாக வழங்கி வருகின்றன.

(5) திராவிட அடிப்படைச் சொற்களும் அவற்றின் அடிச் சொற்களும் வடமொழிச் சொற்களோடு முற்றிலும் மாறுபட்டு இயங்குகின்றன.

(6) இலக்கண அமைப்பில் திராவிட மொழிகளும் வட மொழியும் முற்றிலும் வேறுபட்டு விளங்குகின்றன.

## அடிப்படை இலக்கண வேறுபாடுகள் :

(1) பொருள் நோக்கில் திராவிட மொழிகளில் பால் திணை பாகுபாடுகள் அமைந்துள்ளன. சொல்நோக்கில் வட மொழியில் பால் பாகுபாடு அமைந்துள்ளது.

---

* கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக்கம் 41.

(2) திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள் பன்மை விகுதிகளை ஏற்ற பிறகே வேற்றுமை உருபுகளை ஏற்கும். வடமொழியில் இதற்கு மாறுபட்ட முறையே உள்ளது. ஒருமைக்கும் பன்மைக்கும் தனித்தனி வேற்றுமை முடிபுகள் கூறப்படுகின்றன. மேலும் தமிழில் இவ்வுருபுகள் ஒட்டு நிலையாகப் பெயர்ச் சொற்களோடு சேர்ந்து எளிதில் பிரித்தறியும் நிலையில் உள்ளன.

(3) திராவிட அஃறிணைப் பெயர்கள் பன்மையில் பெரும்பாலும் வழங்குவதில்லை. ஒருமை வடிவே வழங்கப் படுகிறது.

(4) நான்கன் உருபாகிய கு, கி அல்லது கெ (ge) வட மொழி உருபோடு ஒத்து அமையவில்லை. இது சித்திய மொழியோடு ஒத்து இயங்குகிறது.

(5) இலக்கண உருபுகள் முந்துநிலைகளாக (prepositions) வடமொழியில் அமையத் திராவிட மொழிகளில் பிந்து நிலைகளே (postpositions) அமைகின்றன.

(6) பெயரடைக்கும் பெயருக்கும் வடமொழியில் பால் திணை இயைபு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அமைப்புத் திராவிட மொழிகளில் இல்லை.

நல்ல பையன், நல்ல பெண், நல்ல மாடு.

அச்சா லட்கா, அச்சி லட்கி (இந்தி மொழி வடமொழியின் அமைப்பைப் பெற்றுள்ளது.)

(7) பெயரடையாகப் பண்புச் சொற்கள் வருமிடங்களில் தமிழ்மொழியில் பெயரெச்சங்கள் வருகின்றன. பண்புச் சொற்களை வினைவடிவாக அமைத்து அடையாக நிறுத்துகின்றன.

நல்ல பையன்.

(8) தன்மைப் பன்மையில் முன்னிலையாரை உளப்படுத்தலும் பிரித்துக் கூறலும் ஆகிய இரு அமைப்புக்கள் திராவிட

மொழியில் உள்ளன. ஐரோப்பிய மொழிகளிலும் வட மொழியிலும் இவ்வாறு இருவகை இல்லை.

(9) வடமொழியைப் போல் செயப்பாட்டு வினைக்கு எனத் தனி விகுதிகள் திராவிடமொழியில் இல்லை. படு, உண் முதலிய துணை வினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகள் அமைகின்றன.

(10) இணைப்பு இடைச்சொற்களுக்கு (conjunctive particles) மாறாக எச்ச வினைகளைத் திராவிட மொழிகள் அமைத்துக் கொள்கின்றன.

He came and saw.

அவன் வந்து பார்த்தான்.

(11) உடன்பாடு, எதிர்மறை வினைகள் எனத் தனி வினைகள் திராவிட மொழிகளில் உள்ளமை சிறப்பியல்பாகும்.

(12) இணைப்பு இடப்பெயருக்கு மாறாகப் பெயர் எச்ச வினைகளைத் திராவிட மொழிகள் பயன்படுத்துகின்றன.

This is the boy **who** came.

**வந்த** பையன்.

(13) திராவிட வாக்கிய அமைப்பும் சொற்கள் தொடர்ந்து ஒன்றை ஒன்று தழுவும் முறையும் எச்சம் முற்று முதலிய அமைப்புகளும் திராவிட மொழிக்கே உரிய தனி இயல்புகளாம்.

## திராவிட மொழியில் வடசொற்கள்

பல வடசொற்கள் திராவிட மொழிகளில் புகுந்துள்ளன. அவற்றை மாற்றாமல் அப்படியே ஏற்றுக்கொண்டும், அவ் ஒலிகளைத் திராவிட மொழிகளின் இயல்புக்கேற்ப மாற்றி அமைத்தும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இரண்டு மொழி

களிலும் காணப்படும் ஒருசில சொற்களைத் திராவிட மொழிக்கே உரிய தனிச் சொற்கள் என்பதை அறிஞர் கால்டுவெல் காட்டியுள்ளார்.

திராவிட மொழிகளில் அவை இன்றியமையாதனவாக இருப்பனவும், அடிச் சொற்கள் தெளிவாக அமைவனவும் திராவிட மொழியையே சாரும் என்பது அறிஞர் கால்டுவெல் கருத்து ஆகும்.

## வடமொழியில் திராவிடச் சொற்கள்

வட மொழியும் திராவிட மொழியும் ஒப்பக் கற்று ஆராய்ந்து முடிவுகள் கண்ட பேராசிரியர் பர்ரோ (Burrow) என்பவர் வட மொழியில் காணப்படும் வட சொற்கள் அல்லாத சொற்கள் பல திராவிடச் சொற்களே என்று அறுதியிட்டுக் காட்டியுள்ளார். எனவே, திராவிட மொழி களில் வட சொற்கள் பிற்காலத்தில் இடம் பெற்றமை போலவே பழங்காலத்தில் வட மொழியில் பல திராவிடச் சொற்கள் கலந்து புகுந்துள்ளன என்பது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மையாகும். அக்கா, அத்தா (அத்தை), அடவி, அணி, அம்பா (அம்மா), ஆலி (தெலுங்கில் மனைவி என்ற பொருள் உள்ளது), கடுக (கடுகு), காவேரி, குடி, குணி, கூல (குளம்), கோட்ட (கோட்டை), நீர, பள்ளி (ஊர்), மீன, வளையம், சவ (சாவு), சாய (மாலைப்பொழுது; சாய்தல்-தமிழ்) முதலிய சொற்கள் திராவிட மொழியினின்று வட மொழி பெற்றவை என்பர் அறிஞர் கால்டுவெல்.*

டாக்டர் குண்டெர்ட் என்பவர் கீழ்வரும் சொற்களைத் திராவிடச் சொற்கள் என்பர்.

குண்டா -- தமிழ் - குண்டு; தெலுங்கு - குண்டா.
கன் - குணி; தமிழ் - குழி.

---

காலடுவெல் ஒப்பிலக்கணம் பக்கம் 567 முதல் 575 வரை.

| | | |
|---|---|---|
| கோகில | — | திராவிடம் குயில். |
| கோடா | — | தெலுங்கு, குர்ரம்; குதிரை (தமிழ்). |
| நாரங்க | — | திரா. நார் (மணம்), மலே (நாரங்ங) நாரங்காய். |
| பல (phala) | — | பழம் (தமிழ்) |
| மருத்த | — | தமிழ் மருந்து, |
| ஹெரம்பா | — | தமிழ் - எருமை. |
| முக்தா | — | முத்து (தமிழ்) |
| ராத்திரி | — | இரவு. |
| விரல | — | விரல் (தமிழ்), விரி (அடிச் சொல்). |

# 3. திராவிட மொழிகளின் ஒலியியல்

வடமொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் ஒலிகளுள் ஒற்றுமையும் உள்ளது. வேறுபாடும் உள்ளது. வர்க்க எழுத்துக்களில் தமிழில் முதல் வரிசை எழுத்து k மட்டும் உள்ளது. ஒலிப்பு ஒலியும் (g) மூச்சொலி கலந்த ஒலிப்பில் ஒலியும் (kh) மூச்சொலி கலந்த ஒலிப்பு ஒலியும் (gh) தமிழில் இல்லை. இவற்றுள் ஒலிப்பு ஒலி மொழியில் வழங்கு கிறது. ஆனால் அவற்றிற்கு எழுத்து வடிவங்கள் இல்லை.

| | |
|---|---|
| பின்னண்ண | வடமொழி - க, kh, g, gh; nasal—ங |
| வல்லொலிகள் | தமிழ் - க — — — ,, — ங |

இவ்வாறே ச, ட, த, ப வுக்கும் அமைத்துக் காண்க.

C Ch Ja Jh; t th; d, dha.

t th da dh; p, ph, b, bha.

வடமொழியில் உள்ள ஸ ஷ ஹ முதலிய உரசு ஒலிகள் (fricatives) தமிழில் இல்லை.

ற, ழ, ன தமிழுக்கே உரிய சிறப்பு மெய்யெழுத்துக்களாம். எ. ஒ, குறில் வடிவங்கள் தமிழில் உள்ளன; வட மொழியில் நெடில் வடிவங்களே உள்ளன.

**திராவிட உயிர் ஒலிகள் : (Vowels)**

அ, ஆ — இதழ் குவியா உயிர்கள்.

இ, ஈ, எ, ஏ — இதழ் குவியா முன்னண்ண உயிர்கள்,

உ, ஊ, ஒ, ஓ, ஔ — இதழ் குவி பின்னண்ண உயிர்கள் எனப்படும்.

ஐ — கூட்டு ஒலி; அ இ; அய்.

ஔ — கூட்டு ஒலி; அ உ; அவ்.

**மெய் யொலிகள் : (Consonants)**

க — பின்னண்ணத் தடை ஒலி (Velar stops)

ங — பின்னண்ண மெல்லொலி (Velar nasal)

ச — அண்ணத் தடையொலி (Palatal stop)

ஞ — அண்ண மெல்லொலி (Palatal nasal)

ட — வளைநாத் தடையொலி (Retroflex stop)

ண — வளைநா மெல்லொலி (Retroflex nasal)

த — பல்லினத் தடையொலி (Dental stop)

ந — பல்லின மெல்லொலி (Dental nasal)

ப — இதழ்த் தடையொலி (Bilabial stop)

ம — இதழ் மெல்லொலி (Bilabial nasal)

ய, வ — அரை உயிர்கள் (Semi vowels) எனப்படும்

ர — அண்பல் வருடொலி (Alveolar flap)

ல, ள — பிரிவிளி ஒலிகள் (Laterals)

ழ — வளைநா வருடொளி (Retroflex flap)

ற — அண்பல் உரப்பு ஒலி (Alveolar trill)

ன — அண்பல் மெல்லொலி (Alveolar nasal)

தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் k, kh g, gh என நான்கு வருக்கங்களுக்கும் தனித்தனி எழுத்துக்கள் உள்ளன. தமிழைவிட இம் மொழிகளில் வடமொழித் தாக்குதலும் பிறமொழித் தாக்குதல்களும் மிகுதி

எனலாம். தமிழ், மலையாளம் இவை இரண்டும் எல்லா வகையிலும் மிகவும் நெருங்கிய மொழிகளாகும்; கன்னடமும் தெலுங்கும் தனித்தனிப் போக்கு உடையன எனலாம்.

**ஒலிகளின் பிறப்பியல்** : *(மெய்யொலிகள்.)*

உள்ளிருந்து எழும் காற்று, குரல்வளை வழியாக மேல் எழுகிறது. குரல்வளையில் இரண்டு தசைநார்கள் சேர்ந்தும் பிரிந்தும் ஓசையில் தடைகள் ஏற்படுத்துகின்றன. அங்கே ஒருவகை அசைவு (Vibration) ஏற்படுத்தி ஒலிப்பு (Voice) உண்டாக்கினால் அதனை ஒலிப்பு ஒலி (Voiced sound) என்றும் ஒலிப்பு ஏற்படுத்தாமல் எழுப்பும் ஒலிக்கு ஒலிப்பில் ஒலி (Voiceless sound) என்றும் கூறுவர். மெய்யொலிகள் :—

K, C t (ட), t (த), P — ஒலிப்பில் ஒலிகளாம்.

g, J, d (ட), d (த): b —ஒலிப்பு ஒலிகளாம்.

இவற்றை அறிஞர் கால்டுவெல் வல்லொலி (surd), மெல்லொலி (sonant) என்று பிரித்துக் கூறுவர்.

மேல்வாய்ப் பகுதியில் (oral cavity) இவை நா தொடும் இடம் நோக்கியும் முயற்சி வேறுபாடு நோக்கியும் பல்வேறு ஒலிகளாக மாறுகின்றன.

**தடையொலி** : (Stops).

நாவும் இதழும் மேலே பல், அண்பல், அண்ணம் முதலிய உறுப்புக்களில் பொருந்தி விலகுவதால் பிறக்கும் ஒலிகளைத் தடை ஒலிகள் என்பர். இவற்றை வெடி ஒலிகள் (plosives) என்றும் கூறுவர். இதே இடத்தில் இவ்வுறுப்புக்கள் பொருந்தி மூக்கு வழியாக ஒலி சென்றால் மெல்லொலிகள் (nasals) பிறக்கும் என்பர். ங, ஞ, ண, ந, ம, ன, மெல்லொலிகள் ஆம்.

கங — பின்னண்ண ஒலிகள் (Velar sounds)

சஞ — இடையண்ண ஒலிகள் (Palatal sounds)

த,ந — பல்லின ஒலிகள் (Dental sounds)

ப,ம — இதழ் இயை ஒலிகள் (Labial sounds)

ந,ன — அண்பல் ஒலிகள் (Alveolar sounds)

ட,ண — நாமுயற்சி பற்றி இவற்றிற்குப் பெயர் இடப் பெற்றுள்ளன. இவற்றை வளைநா ஒலிகள் (Retroflex sounds) என்பர்.

## அரையுயிர்கள் அல்லது தொடரொலிகள் :

ய, வ, இவற்றை அரையுயிர்கள் (semi vowels) என்பர். இவை தொடர்ந்து ஒலித்தல் பற்றி முறையே யகரத்தை முன்னண்ணத் தொடர் ஒலி (palatal continuant), என்றும் வகரத்தை இதழ்த் தொடர் ஒலி (labial Continuant) என் றும் கூறுவர்.

வருடொலி: ரகரத்தை வருடொலி (flap) என்பர். இதனை அண்பல் வருடொலி (Alveolar flap) என்று பிறக்கும் இடம் நோக்கி அழைப்பர்.

**உரப்பொலி**: றகரத்தை trill என்பர். இது அண்பல் லில் பிறக்கிறது. எனவே இதனை அண்பல் உரப்பொலி என்பர்.

**பிரிவளி ஒலி**: ல, ள, ழ இம்மூன்றையும் பிரிவளி ஒலிகள் என்பர். லகரத்தை அண்பல் பிரிவளி (Alveolar lateral) என்றும், ளகரத்தை அண்ணப் பிரிவளி (palatal lateral) என்றும், ழகரத்தை அண்ணப் பிரிவளித் தொடர் ஒலி (palatal lateral Continuant) அல்லது வருடொலி (flap) என்றும் கூறுவர். ள, ழ இவற்றின் நா முயற்சி நோக்கி வளை நா ஒலிகள் என்றும் இவற்றைக் கூறுவர்.

## உயிர் ஒலிகள் :

உயிர் ஒலிகள் குரல்வளையில் ஒலிப்பைப் (voice) பெறு கின்றன. இவை நாவின் முயற்சியும், இதழ் முயற்சியும்

ஒட்டிப் பிரித்து அறியப்படுகின்றன. நாவின் உயரம், எழுச்சி இவற்றை ஒட்டியும் இதழ் குவிவும் குவியாமை முயற்சி பற்றியும் இவை பிரித்து உணரப்படுகின்றன. நா முன்னோக்கி எழுதலும் பின்னோக்கி எழுதலும் என இருவகைப் படும். நா மேல் இடை கீழ் என்ற மூன்று நிலைகளில் அதன் உயர்வு தாழ்வு நிலைகள் உணரப்படுகின்றன.




எனவே, **இகரம்** முன்னோக்கி எழும் உயர்வு உயிர் ஒலி (Front High Vowel)

**உகரம்** பின்னோக்கி எழும் உயர்வு உயிர் ஒலி (Back High Vowel)

**எகரம்** முன்னோக்கி எழும் இடை உயிர் ஒலி ((Front Mid Vowel)

**ஒகரம்** பின்னோக்கி எழும் இடை உயிர் ஒலி (Back Mid Vowel)

**அகரம்** நடுநோக்கி அமையும் கீழ் உயிர் ஒலி (Central low Vowel)

என்று பிரித்து உணரப்படுகின்றன.

உ, ஒ — இதழ் குவி உயிர் ஒலிகள்
(Lip Rounding Vowels)

இ, எ, அ — இதழ் குவியா உயிர் ஒலிகள் (Non-lip Rounding) என இதழ் குவி முயற்சி பற்றிப் பிரித்து உணரப்படுகின்றன.

**வளைநா ஒலிகள் :** (Retroflex sounds , ட(t), ட(d) ண இவை மூன்றும் வடமொழியிலும் தமிழிலும் உள்ளன. இவை திராவிட மொழிகட்கே உரிய ஒலிகள் என்றும், இவற்றினின்று வடமொழி ஏற்றுத் தம்மொழிச் சொற்களில் புகுத்தியுள்ளன என்றும் கூறுவர் அறிஞர் கால்டுவெல்.* அவர் காட்டும் காரணங்கள் பின்வருமாறு;

(1) திராவிட அடிச் சொற்களின் பொருள் உணர்ச்சிக்கு இவ்வொலிகள் அடிப்படையானவை. த வுக்கும், ட வுக்கும், ல வுக்கும், ள வுக்கும், ன வுக்கும், ண வுக்கும் இம்மொழிகளில் வேறுபாடு மிகவும் தேவையாகிறது.

| | | |
|---|---|---|
| த, ட: | குதி — குடி<br>புதை — புடை | வெவ்வேறு பொருளின |
| ன, ண: | மனை — மணை<br>என் — எண் | ,, |

(2) வடமொழியோடு தொடர்புடைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளான கிரேக்கம், லத்தீன், கோத்திக், லித்துவேனியம், பாரசீகம் முதலிய எந்த மொழிகளும் இவற்றைப் பெற்றிருக்கவில்லை. எனவே, ஆரியர்கள் திராவிடர்களோடு தொடர்புகொண்ட பிறகே இவற்றை ஏற்றிருக்க வேண்டும்; சிறப்பாக எழுத்து இலக்கியமாகிய வடமொழியைவிடப் பேச்சு மொழிகளான பிராகிருதத்திலேயே இவை மிகுதியாக இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

* கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக். 148.

(3) வடமொழியினின்று பெறும் சொற்களைத் தமிழ் ஒலி மரபுக்கு ஏற்ப மாற்றும் இயல்பு உள்ளது. ஷ, ஸ, ஹ முதலியவற்றைத் தமிழ் ஒலிகளாக மாற்றக் காண்கிறோம். இவை வடமொழிக்கே உரியன என்றால் இவற்றையும் தமிழ் மொழி மாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு மாற்றவில்லை என்பதே இவை திராவிட மொழிகளுக்கு உரிய ஒலிகள் என் பதைக் காட்டுகிறது.

(4) தெலுங்கு மொழியே வடமொழியோடு நெருங்கிய தொடர்புகொண்டு அச் சொற்களை ஏற்று வருவது என்றாலும் தமிழ் மொழியிலேயே இவ்வொலிகள் பயிலும் சொற்கள் மிகுதியாக உள்ளன. எனவே வடமொழியின் தாக்குதலாக இவ்வொலிகள் இருக்கமுடியாது.

(5) வடமொழியில் இவ்வொலிகளை நீக்கி எழுதினால் பொருள் பிறழ்ச்சியோ கேடோ உண்டாகாது. தமிழில் இவ் வொலிகளை நீக்கி விட்டால் பல கருத்துக்களைச் சொல்லச் சொற்களே இல்லாமல் போகும். மேலும் மொழி தன் வளம் இழந்து விடும்.

எனவே வடமொழியே திராவிட மொழிகளினின்று இவ் வளைநா ஒலிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பர்.

**வல்லொலி மெல்லொலி இடமியதி (Convertibility of surds and sonants).**

தமிழில் க (k) வுக்கும் க (g) வுக்கும் தனித்தனி எழுத்துக் கள் பெற்றிருக்க வில்லை. இடம் நோக்கியே அதன் ஒலித் தன்மை உணரப்படுகிறது. மொழிக்கு முதலிலும் இரட்டிப் புப் பெறும் இடத்திலும் வல்லொலியும் (ஒலிப்பில் ஒலியும்) இடையில் மெல்லொலியும் (ஒலிப்பு ஒலியும்) அமைகின்றன. இஃது இந்த மொழியின் அடிப்படை ஒலி இயல்பாகும்.

இவை தமிழ் மலையாளத்தில் மட்டும் ஒழுங்காகக் கடை பிடிக்கப் படுகின்றன. ஏனைய தெலுங்கு, கன்னட மொழி

களில் முழுவதும் பின்பற்றப் படவில்லை. பல சொற்கள் மெல்லொலி (ஒலிப்பு ஒலி) கொண்டே சொற்களைத் தொடங்குகின்றன. இதற்குக் காரணம் வடதிராவிட மொழிகளின் தாக்குதலாக இருக்கக்கூடும் எனக் கருதுகின்றனர். தமிழில் இல்லாத பல சொற்கள் தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ளன. இவை பிற திராவிடச் சொற்களின் தாக்குதலாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. வடதிராவிட மொழிகளிலும் மத்திய திராவிட மொழிகளிலும் உள்ள பல சொற்கள் தெலுங்கிலும் கன்னடத்திலும் காணப்படுகின்றன. இவை தனித்து வளர்ந்த வரலாற்றை இச் செய்தி காட்டுகிறது.

தமிழில் வழங்கும் பல வட சொற்கள் இவ் ஒலி நியதியைப் பெற்று அமைகின்றன.

danta (சம்ஸ்) — தந்தம் (tandam) தமிழில்.

bhagya( ,, ) — பாக்கிய (pakkiam).* ,,

மொழிக்கு முதலில் வல்லொலியும் ஏனைய இடங்களில் மெல்லொலியும் அமைதல் தமிழுக்கே உரிய சிறப்பு விதியாகும். ஏனைய திராவிட மொழிகளில் இவ்விதி போற்றப் படுவதில்லை. அதற்குக் காரணம் தமிழ் ஒன்றுதான் பழைய தென் திராவிட மொழிக் கூறுகளைத் தாங்கியுள்ளது.

ஏனைய திராவிட மொழிகளிலும் இவ்விதியே அடிப்படை எனினும் பிற மொழிக் கலப்பாலும் ஏனைய திராவிடப் பகுதிகளின் சாயலாலும் இவ்வமைப்புக்கு மாறாக மொழிக்கு முதலில் மெல்லொலி தொடங்குதலும் உண்டு.

(1) பல தெலுங்குச் சொற்களும் கன்னடச் சொற்களும் தனித் தன்மை வாய்ந்தனவாக உள்ளன. அவற்றிற்கு நிகரான தமிழ்ச் சொற்கள் இல்லை.

---

* கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக்கம் 140.

(2) இம்மொழிகளில் பல சொற்கள் கடன் வாங்கியவை.

(3) வேறு சில திராவிடப் பொதுச் சொற்களும் மெல்லொலியாக இசைத்தல் பிற்காலத்தில் ஏற்பட்ட திரிபுகள் என்பர்.

எனவே தமிழ் விதி முறையாகிய வல்லொலி முதலில் ஒலித்தலும் ஏனைய இடங்களில் மெல்லொலி ஒலித்தலும் தென் திராவிட மொழியின் பழைய இயல்பு என்பது வற்புறுத்தப்படுகிறது. ஏனைய வட திராவிட மொழிகளில் பிற மொழித் தாக்குதல் மிகுதியாகிப் பழைய திராவிட இயல்பு மாற்றப் பட்டுள்ளது என்பர்.*

**மூச் சொலிகள் :** (aspirates).

'ஹ' இது மூச்சொலி (aspirate) எனப்படும். செறிவாக மூச்சு வெளிப்படுத்தித் தள்ளும் பொழுது இவ்வொலி உண்டாகிறது. இம் மூச்சொலிகள் கலந்த வல்லொலிகளை மூச்சொலி கலந்த வல்லொலிகள் (aspirated stops) என்பர்.

k —kh ; g —gh

c —ch ; j —jh

t (ட) —th ; d —dh

t (த) —th ; d —dh

p (ப) —ph ; b —bh

இரண்டாம் வருக்க ஒலியும் நான்காம் வருக்க ஒலியும் மூச்சுத் தடை ஒலிகளாம்.

**இணைப் பொலிகள் :** (clusters).

இரண்டு மெய்யொலிகள் சேர்ந்து இயைந்தால் அவற்றை இணைப் பொலிகள் என்பர். இவை வடமொழியில் மிகுதி.

* Collected papers Prof. T. Burrow. P. 17.

த்யாகம் (தய்) ப்ரகாச் (ப்ர்) முதலியன காண்க. போன்ம்; மருண்ம்—ன்ம்; ண்ம் தமிழில் இணைப்பொலியாக அமைந்துள்ளன. இப்பொழுது பேச்சு மொழியில் இவ்வொலிகள் இடம் பெறுகின்றன. சட்னி; வீட்லே.

**சந்தியக்கரம் :** (diphthong) இரண்டு உயிர் ஒலிகள் சந்தித்து இயைந்தால் அவற்றைச் சந்தியக்கரம் அல்லது கூட்டொலி என்பர். யகரமு வகரமும் அரை உயிர்கள் ஆதலின் அவை சேர்ந்த கூட்டொலியும் இதன்பாற் படும்.

அஇ ; அய் — ஐ.

அஉ ; அவ் — ஔ.

இவை இரண்டும் சந்தியக்கரங்கள் எனப்படும். இவற்றுள் ஐகாரம் தன்னியல்பால் அமைந்தது என்றும் ஔகாரம் வடமொழியை ஒட்டி அமைந்தது என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன. ஔகாரத்தில் தொடங்கும் தமிழ்ச் சொற்கள் மிகவுங் குறைவாகும்.

**ஒலியழுத்தம் :** *(accent)*

திராவிட மொழிகளில் ஒலியழுத்தம் உண்டு. இதனை எடுத்தல், படுத்தல், நலிதல் என்பார். பொதுவாக உயிர் அசைகளில் இவ்வழுத்தம் ஏற்படுகிறது.

(1) ஒலியழுத்தத்தால் தன் வினை பிறவினை வேறுபாடு அமைகின்றது.

சேர்கிறேன் — சேர்க்கிறேன்.

(2) சொற்களில் மரூஉ முடிவுகள் பொருட் பகுதிகளைப் போற்றிக் காக்கின்றன. 'எனவே பகுதிகளில் ஒலியழுத்தம் நிலை பெறுகிறது'

மலைநாடு — மலாடு

அருமருந்தன்ன — அருமருந்த

(3) செப்பு வாக்கியம் வினா வாக்கியமாகவும், ஐய வாக்கியமாகவும் அமைக்க முடிகிறது.

அவன் வந்தான் — செப்பு

அவன் வந்தான்? — வினா

அவன் வந்தான்! — ஐயம்

**ஒலி ஒப்பியல் :**

திராவிட மொழிகளுள் உள்ள சொற்கள் வெவ்வேறு என ஒரு சில காணப்பட்டாலும் சில ஒலி நியதிகளின்படி அவை மாற்றம் பெற்றிருக்கின்றன என்பது உணரப்படுகிறது.

(1) **இ—எ.** தமிழ் மலையாளத்தில் இகரம் தெலுங்கு கன்னடத்தில் எகரமாக மாறுகிறது.

| **தமிழ்** | — | **மலையாளம்** | — | **தெலுங்கு** | — | **கன்னடம்** |
|---|---|---|---|---|---|---|
| இலை | — | இல | — | — | — | எலெ |
| நினை (வு) | — | நினயு | — | — | — | நெனெ |
| விளங்கு | — | — | — | வெலுகு | — | பெலகு |

(2) **உகரம் ஒகாரமாதல் :** தமிழ் மலையாளத்தில் உகரம் தெலுங்கு கன்னடத்தில் ஒகாரமாக மாறுகிறது.

| **தமிழ்** | — | **மலையாளம்** | — | **தெலுங்கு** | — | **கன்னடம்** |
|---|---|---|---|---|---|---|
| குடை | — | குட | — | கொடுகு | — | கொடெ |
| உடல் | — | உடல் | — | ஒடலு | — | ஒடலு |
| உரல் | — | உரலு | — | ரோலு | — | — |

தமிழ் மொழியிலும் இவ்வொலி மாறுதல்களால் பல புதிய சொற்கள் கிளைத்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| சிவப்பு | — | செம்மை ; | இ > எ. ஆதல் |
| பிணை; பிணவு; | — | பெண் ; | இ > எ. |
| பிடி | — | பெடை ; | இ > எ. |
| பிற(த்தல்) | — | பெறு ; | இ > எ. |
| விள் (விளக்கு) | — | வெள் — (வெள்ளை ; வெள்ளி) | |
| உடன் (3-ம் உருபு) | — | ஒடு ; ஓடு. | உ > ஒ ஆதல் |
| உளவு | — | ஒளிதல் | |
| குழந்தை | — | கொழுந்து | |
| துளை | — | தொள் (தோண்டு) | |
| முயங்கு | — | மொய்த்தல் | |
| முழங்கு | — | மொழி[1]. | |

ஒரு சில சொற்களில் எகரமும் இகரமும் ஆதல் உண்டு.

வெயர்வை (வெம்மை) — வியர்வை

(3) **ககரம் சகரமாக மாறுகிறது :** ககரம் மிகப் பழையது; இது கன்னடத்தில் மிகுதியாக நிலைபெறுகிறது. ககரத்தின் பின்வரும் இகரம் நோக்கி இது சகரமாகத் திரிகிறது; இதனை அண்ண மெய்யாதல் (Palatalisation) என்பர்.[2]

---

[1] Collected papers P. 24.

[2] ஒரினமாதல் (assimilation) என்னும் பிரிவில் இது அடங்கும்; இகரம் முன்னோக்கி எழும் அண்ண ஒலி; ககரம் பின்னண்ணத்தில் எழும் ஒலி; அது முன்னோக்கிச் சென்று இகரத்தின் சார்பால் ககரமாகிறது.

| **தமிழ்** | **மலையாளம்** | **தெலுங்கு** | **கன்னடம்** |
|---|---|---|---|
| சின்ன | சின்ன | சின்ன | கின்ன |
| செவி | செவி | செவி<br>செவ்வு | கெவி |
| கெடு | கெடு | செடு | கெடு |
| கை | கை | செய் | கையி |
| செம்(மை) | செம் | கெம்(பு) | கெம் |
| சிரி | சிரி | — | கிரி |
| சில | சில | சிலுவ | கெலவு |

*(4) தமிழ், மலையாளத்தில் ழகரம் கன்னடத்தில் ளகரமாகவும் தெலுங்கில் டகரமாகவும் மாறுகிறது.*

| **தமிழ்** | **மலையாளம்** | **தெலுங்கு** | **கன்னடம்** |
|---|---|---|---|
| கோழி | கோழி | கோடி | கோளி |
| ஏழு | ஏழு | ஏடு | ஏளு |
| கழுவு | கழுவு | கடுகு | களுவு |
| கூழு | — | கூடு | கூளு |

**(5) பகரம் ஹகரமாக மாறல்**

| **தமிழ்** | **கன்னடம்** |
|---|---|
| பாம்பு | ஹாவு |
| பத்து | ஹத்து |
| பணம் | ஹண |

**(6) தகரம் சகரம் ஆதல்**

| இலக்கியத்தமிழ் | தமிழ் (பேச்சு) | மலையாளம் |
| --- | --- | --- |
| பெரிது | — பெரிசு | — |
| வயது | — வயசு | — |
| ஐந்து | — அஞ்சி | — அஞ்சு |
| சிரித்த | — சிரிச்ச | — சிரிச்ச |

**(7) மொழி முதற்கண் சகரம் கெடல்**

இது தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்பு ஆகும். சிறப்பாகத் தமிழ் மலையாளத்தில் இம்மாறுதல் மிகுதி.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
| --- | --- | --- | --- |
| அக்குள் | — | — | சக்கிலி |
| அந்தம் | | — | சந்தம் |
| இப்பி | சிப்பி | — சிப்பு | — சிப்பு |

தமிழ்ச் சொற்களுள்ளே இவ்விரு வடிவங்கள் உள்ளன.

| | |
| --- | --- |
| சூழ்வினை | — ஊழ்வினை |
| சாய் | — ஆய் |
| சான்றோர் | — ஆன்றோர் |
| சிறப்பு | — இறப்பு |
| சிறகு | — இறகு |
| சுருள் | — உருள் |
| சுலவு | — உலவு |

சகரத்தில் தொடங்கும் பல சொற்கள் சகரத்தை இழந்து மொழியில் வழங்குகின்றன.

**(8) வல்லினம் மிகுதல்** (Euphonic permutation of consonants.)

தமிழ்ச் சொற்களில் வல்லினம் மிகும் இடம் மிகா இடம் எனத் தொடர்ச் சொற்களில் விதிகள் கூறப்படுகின்றன. பொதுவாக வேற்றுமையில் மிகுதலும் அல்வழியில் மிகாமையும் காணப்படுகின்றன.

புலி + தோல் — புலித்தோல். (வேற்றுமை)

புலி + பாய்ந்தது — புலி பாய்ந்தது. (அல்வழி)

இதை வல்லினம் மிகுதல் என்பர். ஏனைய திராவிட மொழிகளில் இவ்விதி ஏற்கப்படுவது இல்லை. கன்னடத்தில் இதற்கு மாறான நிலைமையே உள்ளது.

huli togalu — huli dogalu

என இரட்டிப்பதற்கு மாறாக வல்லொலி மெல்லொலியாக இயங்குகிறது. t—d. தனிச் சொற்களிலும் இவ்வொலி மிகல் இடம் பெறுகிறது. அடிச் சொல்லோடு ஆக்க விகுதி சேரும்பொழுதும் இலக்கண விகுதி சேரும்பொழுதும் இவ்வொலி சேர்ந்து இரட்டிப்பைப் பெறுகிறது. பிறவினை விகுதிகளில் இது மிகுதி.

சேர் + கை — சேர்க்கை

நட — நட + து — நடத்து.

**மெல்லினம் மிகுதல்** : இதனை மெல்லினச் சாயல் பெறல் (Nasalisation or euphonic nunnation) என்பர் அறிஞர் கால்டுவெல். இது சிறப்பாகத் தமிழிலும் தெலுங்கிலும் போற்றப்படுகிறது. தெலுங்கில் அர்த்தானுஸ்வாரம் என்ற பாதி மெல்லொலியும் சேர்க்கப்படுகிறது. தமிழில் முழு மெல்லொலி சேர்க்கப்படுகிறது.

(1) **ஆக்க விகுதி துணை ஒலி பெறுதல் :** இது தமிழில் மிகுதியாக வழங்குகிறது. பிறவினையில் வல்லினம் வரும் இடங்களில் தன்வினையில் மெல்லினம் வருகின்றது.

| **பிறவினை** | — | **தன்வினை** |
|---|---|---|
| சேர்த்தேன் | — | சேர்ந்தேன். |
| அடக்கு | — | அடங்கு. |
| திருத்து | — | திருந்து. |
| திருப்பு | — | திரும்பு. |

(2) சுட்டு அடிச் சொற்களோடு ஆக்க விகுதி சேரும் பொழுது இம் மெல்லொலி இடம்பெறுகிறது.

அ, இ, எ, யா } + கு — அங்கு, இங்கு, எங்கு, யாங்கு.

(3) தமிழில் ங வரும் இடத்தில் தெலுங்கில் ஞகரம் வருகிறது.

பகு — பங்கு ; பஞ்சு.

(4) சொற்புணர்ச்சிகளில் மெல்லெழுத்து வருகிறது.

பூ + செடி — பூஞ்செடி.

(5) மகரம் திரிந்து ங, ஞவாக அமைகின்றது.

செம்பவளம் ; செஞ்சாந்து

செங்காய் ; செந்தார்.

இவ்வாறே தெலுங்கு கன்னட மொழிகளிலும் அமைகிறது.

*(6) பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் பெறும் வல்லொலியும் மெல்லொலியும் ஒரு சில இடங்களில் பகுதியின் ஈற்று எழுத்துக்களின் திரிபாகவும் அமைகின்றன.*

*சார் + து — சாத்து.*

*நீர் + து — நீந்து ; நீத்து.*

*மழ் + கு — மங்கு ; மக்கு.*

*(7) ஒரு சில இடங்களில் விகுதியின் ஆற்றலாலும் மெல்லினம் வல்லினம் அமைகின்றன.*

*சேர் + து — சேர்ந்து; சேர்த்து.*

*ஆழ் + து — ஆழ்ந்து; ஆழ்த்து.*

**(9) விட்டிசையைத் தடுக்கும் உடம்படுமெய்கள்:**

## தமிழ் :

*உயிர் இறு சொல்லும் உயிர் முதற் சொல்லும் சேர்ந்து இசைக்கும்பொழுது உடம்படு மெய்யாக யகரமும் வகரமும் வருதல் தமிழ் வழக்கு.*

*மணி + அழகு — மணியழகு.*

*நிலா + அழகு — நிலாவழகு.*

*கோ + இல் — கோயில் ; கோவில்.*

*(நிலைமொழி நோக்கி வகரமும் வருமொழி நோக்கி யகரமும் வந்தன,)*

*ஒரு சில சொற்களில் இவ்விதி போற்றப்படுவதில்லை.*

*பரு + அரை — பராரை*

*குமர + ஈசன் — குமரேசன்*

*மட + அதிபதி— மடாதிபதி.*

## தெலுங்கு :

தெலுங்கில் யகரம் அல்லது னகரம் உடம்படு மெய்களாகின்றன. னகரமே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. னகரம் தனக்கென வேறு பொருள் உணர்த்தப் பொருள் பிறழ்வு ஏற்படும் என்ற நிலையில் யகரம் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்பர் அறிஞர் கால்டுவெல். மகரமே முதலில் இருந்திருக்க வேண்டும் என்றும் அதன் திரிபே யகரமும் னகரமும் என்பர்.

தின்னகா + ஏகேனு — தின்னகானேகுனு.

நிகநிக + அனி — நிகநிக மனி.

ஒக + ஒக — ஒகஒெக.

தெலுங்கில் னகரத்திற்கு மாருக ஹகரம் ஒரு சில இடங்களில் இடம் பெறுகின்றது.

பதி + ஏனு — பதிஹேனு — ஹ.

பதி + ஆறு — பதிஹாறு — ஹ.

ரகரம் தெலுங்கில் உடம்படு மெய்யாக இயங்குகிறது,
பொத + இல்லு—பொதரில்லு.

வகரத்திற்கு மாருகக் ககரம் தெலுங்கில் இடம் பெறுகிறது.

பத + ஒண்டு—பதகொண்டு.

நாயுடு + வாரு—நாயுடுகாரு.

**(10) ஓரினமாதல் : (Assimilation).**

**மெய்திரிதல் :** ஒரு மெய்யொலி மற்ரெருரு மெய்யொலியைத் தன்னினமாக மாற்றும். இதனை ஓரினமாதல் (Assimilation) என்பர்.

நல் + சேர்க்கை — நற்சேர்க்கை (சகரம் நோக்கி லகரம் வல்லினமாக மாறியது)

பொருள் + மொழி — பொருண்மொழி

பொன் + நாண் — பொன்னாண்

கல் + தூண் — கற்றூண் (ல் > த்; த் > ற்).

இவை வருமொழி நோக்கித் திரிவனவும் நிலைமொழி நோக்கித் திரிவனவும் ஒன்றை ஒன்று நோக்கி இருவழியும் திரிவனவும் என மூவகைப்படும்.

**உயிர் திரிதல் :** உயிர் ஒலிகளுள்ளும் ஓர் ஒலி மற்றோர் உயிர் ஒலியைத் தன்னனிமாக்கி மாற்றி விடுதல் உண்டு. இதனை உயிர் ஒலி இயைபு (vowel harmony) என்பர். அறிஞர் கால்டுவெல் இதனை ஒலி நயம் பற்றித் தொடர்தல் (harmonic sequence of vowels) என்பர். இவ்வடிப்படையில் பல சொற்கள் தெலுங்கில் மாற்றம் பெற்றுள்ளன. இதுவும் ஓரினமாதல் ஆகும்.

தமிழ் நான்கன் உருபு 'கு' தெலுங்கில் இகரம் நோக்கி 'கி' ஆக மாறியுள்ளது.

பிட்ட (குழந்தை) + கு — பிட்டகு.

தல்லி (தாய்) + கி — தல்லிகி (நிலைமொழி இகரம் நோக்கி உகரம் திரிந்தது).

குகரம் கிகரமாக மாறியது காண்க.

கத்தி + கி — கத்திகி (ஒருமை (கத்தி) இகரம் நோக்கி 'கி' வந்தது.

கத்துலு + கு — கத்துலுகு (பன்மை).
கத்துலு—லு—'லு' கரம் நோக்கிக் 'கு' கரம் வந்தது.

### (11) ஒலி இடம் பெயரல் (Metathesis)

உயிரும் மெய்யும் இடம் பெயர்தல் உண்டு. இது தெலுங்குச் சொற்களில் காணப்படும் ஒலி நியதியாகும்.

**மெய்யொலிகள் பிறழ்ச்சி :**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|
| கொப்புள் | பொக்கிலி | — |
| படர் | — | பரடு. |

**உயிர் ஒலிகள் பிறழ்ச்சி** : இது மூவிடப் பெயர்களுள் பல தெலுங்குச் சொற்களின் அமைப்பை உணர்த்தும். முதல் உயிர் அடுத்த மெய்யின் பின் தொடர்ந்து நிற்கிறது.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| அவர் | வாரு |
| இவர் | வீரு. |
| அதனை | தானி. |
| உரல்(ஒரலு) | ரோலு (உ ஒவாகி மாறிப் பிறகு இடம் பெயர்ந்தது). |
| ஆகாது | காது. |
| இலது | லேது. (இ - எ மாறி பிறகு இடம் பெயர்ந்தது). |
| உள் | லோ. |
| எழுபது | டெப்பை (ழகரம் டகரமாகியது) (எகரம் இடம் பெயர்ந்தது). |

ஏனைய சில சொற்களிலும் இடம் மாற்றம் உண்டு. இவற்றைத் தமிழ் நூலார் இலக்கணப் போலி என்பர்.

மர நுனி — நுனி மரம்

கண்ணுதல் — நுதற்கண்

| | | |
|---|---|---|
| கால்வாய் | — | வாய்க்கால் |
| புறநகர் | — | நகர்ப்புறம் |
| இல்முன் | — | முன்றில் |

இது தமிழுக்கும் தெலுங்குக்கும் உள்ள உறவுமுறையைக் காட்டும்.

(12) **ஒலி இடையில் கெடுதல்** (Syncope) ஒலி இடம் பெயர்தல் மேலே காட்டப்பட்டது. ர ழ ஆகிய ஒலிகள் கெட்டுப் பல சொற்கள் அமைகின்றன. பல தமிழ்ச் சொற்கள் தெலுங்கிலும் கன்னடத்திலும் இவ்வாறு மாறி அமைந்துள்ளன.

| தமிழ் | தெலுங்கு | | கன்னடம் |
|---|---|---|---|
| நெருப்பு | நிப்பு | | |
| எலும்பு | எம்மு | | |
| உடல் (ஒடல்) | ஒள்ளு | | |
| பொழுது | பொத்து | | |
| எருது | எத்து | | |
| மருந்து | மந்து | — | மத்து |
| எழுபது | டெப்பை | — | எப்பத்து |
| கொழுப்பு | | | கொப்பு (Kobbu) |
| எருமை | | | எம்மெ. |

(13) **திராவிட மொழிகளின் ஒலியசை முறை** (principles of syllabation)

**தமிழ் ஒலியசை முறையில் சிறப்பியல்கள்.**

School, start; strength - இதுபோல் தமிழ்ச் சொற்கள் அமைவதில்லை. இவ்வாறு அமையும் வடசொற்கள் தமிழில்

இடையில் துணை ஒலிபெற்றுத் தமிழ் ஒலி மரபைப் பெறு கின்றன.

சிநேகம் ; பிரகாசம்; கிருட்டினன்

(2) ர, ல மொழி முதற்கண் தமிழில் தொடங்குவதில்லை. தமிழில் ஒலித்துணை பெற்று அச்சொற்கள் வழங்கு கின்றன,

ரங்கன் — அரங்கன்.

லஷ்மன் — இலக்குவன்.

(3) அடிச் சொற்களிலும் விகுதிகளிலும் ஒலிநயம் கருதி உயிர் ஒலிகள் சேர்கின்றன, அதனால் சொற்கள் நீண்டு அமைகின்றன. சில இடத்துச் சாரியைகளும் அமைந்து நீள் கின்றன.

பெர்—பெரு + கு — பெருகு — பெருகுகிறது.

வருகின்றனன் — அன் சாரியை.

மரத்தை — அத்துச் சாரியை.

(4) சொற்களின் ஈற்றில் வல்லெழுத்துக்கள் அமைவது இல்லை. துணையாகக் குற்றியல் உகரம் மட்டும் சேர்கின்றது,

பாக்—பாக்கு; வாக்கு; பாட்டு

(5) தெலுங்கிலும் கன்னடத்திலும் சொற்கள் எல்லா மெய்யீறுகளும் உகரத்தில் இறுகின்றன. தமிழ்ப் பேச்சு மொழியிலும் இவ்வியல்பு மிகுந்து வருகிறது.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|
| கண் | கன்னு | கண்ணு |
| கால் | காலு | காலு |
| மண் | மன்னு | மண்ணு |

| தமிழ் | | பேச்சுமொழி |
|---|---|---|
| சொல் | — | சொல்லு. |
| கேள் | — | கேளு. |
| ஊர் | — | ஊரு. |
| பேர் | — | பேரு. |

(6) மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் சில குறிப்பிட்ட எழுத்துக்கள் தாம் வரும் என்று தமிழ் இலக்கண நூல்கள் காட்டும். காலந்தோறும் இதில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. இடையில் மயங்கும் மயக்கத்தை உடனிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம் மயக்கம் என இலக்கண நூல்கள் காட்டும்.

(விரிவு நன்னூலும் தொல்காப்பியமும் காண்க).

# 4. திராவிடச் சொற்கள்: சொல்லாக்கம்

## சொற்களின் அமைப்பு:

*(1) சொல்லாக்கம் ஒட்டிச் சொற்களை மூவகையாகப் பிரித்துக் காண்பர். அடிச்சொல்லே தனித்து நின்று சொல்லாதல் உண்டு. இதனைத் தனிநிலை மொழி*(**isolative language**) *என்பர். சீன மொழியில் இவ்வமைப்பு மிகுதியாக உளது என்பர்.*

*கல், மண், பார், தீ—முதலியன தனிநிலைச் சொற்களாம்.*

*(2) அடிச் சொல்லும் விகுதியும் சேர்ந்து எளிதில் பிரித்து அறியக்கூடிய நிலையில் சொற்கள் அமைதல் உண்டு. இதனை ஒட்டு நிலை மொழி* (**agglutinative language**) *என்பர். திராவிடச் சொற்கள் மிகுதியாக இவ்வமைப்புக் கொண்டனவேயாம். எனவே திராவிட மொழிகளை ஒட்டுநிலை மொழிகள் என்பர்.*

*பார்த்தான்; கல்லை, தீயினால்.*

*பார் + த் + த் + ஆன்; கல் (ல்) + ஐ;*

*தீ (ய்) இன் + ஆல்.*

*இவ்வாறு எளிதில் பிரித்து அறியமுடியும்.*

*(3) அடிச்சொல்லும் விகுதியுமே அன்றி மற்றோர் அடிச்சொல்லும் சேர்ந்து பிணைந்து நின்று பிரித்து அறிய முடியாத நிலையில் உள்ள மொழியை உட்பிணைப்பு மொழி* (**inflectional**

language) என்பர். வடமொழியும் இந்தோ ஐரோப்பிய மொழியும் இந்நிலையில் உள்ளன என்பர்.

தமிழிலும் ஒரு சில சொற்கள் காட்டமுடியும்.

கொணு / கொண்டா —கொண்டு வா என்பதன் பிணைப்பு.

காமரு —காமம் வரு என்பதன் பிணைப்பு.

அலமரு —அலம் + வரு.

பல பேச்சுச் சொற்கள் இவ்வாறு மருவி அமைந்துள்ளன.

கீது — இருக்கிறது என்பதன் மரூஉ.

ஆந்தை — ஆதன் தந்தை என்பதன் மரூஉ.

(4) திராவிடச் சொற்கள் இரண்டாம் நிலையாகிய **ஒட்டு நிலையைச்** சார்ந்தவையாகும். எனவே சொற்களை அடிச்சொல் எனவும் விகுதிகள் எனவும் எளிதில் பிரித்து அறிய முடிகிறது. அடிச்சொல் என்பது பொருள் உணர்த்தும் பகுதியாகும். விகுதி என்பது இலக்கணமும் சொல்லாக்கச் சிறப்பும் உணர்த்தும் சேர்க்கைகள் ஆகும்.

## 2. அடிச் சொற்கள்

(1) தமிழில் பல அடிச் சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக நிற்கும் என்பர்.

பூ — பெயர்; பூத்தது - வினை.

அடி — பெயர்; அடித்தான் - வினை.

பெயரா வினையா என்பது அது வாக்கியத்தில் பெறும் இடம் நோக்கியும் காலம் வேற்றுமை உணர்த்தும் விகுதிகள் நோக்கியும் உணரப்படும்.

(2) வினை அடிச் சொற்களை இருவகையாகப் பிரிக்கலாம். பண்பு அடிச் சொல் (Quality root) என்வும் செயல் அடிச்சொல் (action root) எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.

செய்தான் — செய் — செயல் அடிச்சொல்.
நல்லன் — நல் — பண்பு அடிச்சொல்.

(3) எந்தச் சொல்லும் பெயரா வினையா என்பது அடிச் சொல்லைக் கொண்டு நிறுவமுடியாது. அது விகுதிகள் பெற்ற பிறகே பெயர் அடிச் சொல்லா வினை அடிச் சொல்லா என்பது முடிவு செய்ய முடியும்.

செய்கை — பெயரடிச் சொல்.
செய்தான் — வினையடிச் சொல்.

(4) எனவே பெயர் அடிச்சொல், வினை அடிச்சொல் என்று பிரிப்பதை விட பொருள் உணர்த்தும் பகுதிகளாகவும் விகுதிகள் ஏற நிற்கும் அடிப்படை முதல் நிலைகளாகவும் இருப்பவற்றை அடிச்சொல் எனப் பொதுப்படையாகக் கூறல் தகும்.

(5) பகுதி என்பது (Stem) விகுதி இடைநிலை முதலியன ஒழிய நிற்பது எனலாம்.

வருகிறான். வரு + கிறு + ஆன்.

வரு என்பது பகுதியாம். இதனை அடிச் சொல் எனவும் கூறலாம். எனினும் வரு என்பதை வர்+உ எனப் பிரித்து அறிய முடிகிறது. உகரம் ஒலிநயச் சேர்க்கையாகக் கொள்வர். எனவே 'வர்' என்பது அடிச் சொல்லாகும்.

நிலைத்தான் — நிலை — பகுதி.
நின்றான் — நில் — பகுதி.

நிலை, நில் இவற்றை நோக்க.

நிலை — நில் + ஐ — நில் அடிச் சொல். ஐ ஆக்க விகுதி எனக் கொளல் தகும்.

எனவே, பகுதி (stem) என்பது ஒரு குறிப்பிட்ட சொல்லைப் பிரித்து இடைநிலை, விகுதி முதலியன ஒழிய முதல் நிலையாக நிற்பது எனவும் அடிச் சொல் என்பது பல பகுதிகளை ஒப்பிட்டு ஆக்க விகுதிகளையும், ஒலித்துணைகளையும் நீக்கிக் காண்பது எனவும் கொள்ளலாம். நன்னூலார் பகுதி என்று பிரித்துக் காண்பது இந்த அடிப்படையில்தான் எனக் கொள்ளலாம். அறிஞர் கால்டுவெல் அடிச்சொல் என்று காண்பது ஒலித்துணைகளும், ஆக்க விகுதிகளும் நீங்க நிற்கும் முதல்நிலைகளை எனலாம்.

(6) நன்னூல் வினைப் பகுதிகள் எனவும், பண்புப் பகுதிகள் எனவும் இருவகையாகப் பிரித்துக் காண்கிறது.

நட, வா, மடி, விடு முதலியன வினைப் பகுதிகளாம். செம்மை, கருமை, வெண்மை முதலியன பண்புப் பகுதிகளாம்.

தெரிநிலை வினையின் பகுதிகள் செயல் வினைப்பகுதிகளாகவும், குறிப்பு வினையின் பகுதிகள் பண்பும் பெயருமாகவும் விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

**செய்**தான் — தெரிநிலைவினை.

**கரியன்** — குறிப்பு வினை.

**நிலத்தன்** — ,,

இப்பாகுபாடு தமிழ் வினைச் சொற்களை அறிய உதவுகிறது. வினைத் தொகை, பண்புத் தொகை முதலிய தொடர் நிலைகளும் இவ்வடிப்படையிலேயே அமைந்துள்ளன.

**கொல்** யானை — வினையடி (வினைத்தொகை)

**செந்** தாமரை — பண்பு அடி (பண்புத் தொகை)

(7) **ஒலிநயச் சேர்க்கை**

பெர் — பெர் + உ — பெரு

அர் — அர் + உ — அரு

— அர் + இ — அரி

கர் — கர் + உ — கரு

— கர் + இ — கரி

அழ் (அழி); அழ் (அழு); விள் (விள) (விளை); நில் (நில) (நிலவு).

எனவே உ, இ. அ முதலிய உயிர் ஒலிகள் சேர்ந்து ஒலி நயச் சேர்க்கைகளாக அமைகின்றன என்று அறிஞர் கால்டுவெல் கருதுவர்.

## 3. ஆக்க விகுதிகள் (Formative Suffixes):

(1) ஒலிநய விகுதிகள் சேர்ந்தோ தனித்தோ அமையும் அடிச் சொற்கள் சொற்களின் முதல் நிலைகளாக நின்று ஆக்க விகுதிகள் சேர்வதால் சொற்கள் அமைகின்றன.

பெரு + கு — பெருகு

நில + வு — நிலவு

நில் + அம் — நிலம்

நிழ் + அல் — நிழல்

இன் + பு + அம் — இன்பு; இன்பம்

மல் + அர் — மலர்.

(2) இல்வாறு கு, சு, டு, து, று முதலிய விகுதிகளோ அம், அல், அர், அழ், இழ், அள், இள் முதலிய இணை ஒலி

விகுதிகளோ சேர்ந்து சொற்கள் அமைகின்றன. இவ் விகுதிகளை ஆக்க விகுதிகள் என்பர்.

இன் + பு — இன்பு

இன்பு + அம் — இன்பம்.

(3) தனி ஒரு விகுதியோ விகுதிக்கு மேல் விகுதியோ சேர்ந்து சொற்கள் அமைதல் உண்டு.

துய் — துயில் (இல்)

தூங் + கு — தூங்கு + அம் — தூக்கம்

துடை + பு — துடைப்பு + அம் — துடைப்பம்.

(4) விகுதிகள் கு சு டு து பு று தனித்தோ மெல்லின ஒலிகள் இடையில் பெற்றோ வரும் என்பர். இரட்டிப்பும் பெறல் உண்டு.

அழு + கு — அழுகு

அழு + ங்கு — அழுங்கு

அழு + க்கு — அழுக்கு

எழு + து — எழுது

எழு + ச்சி + — எழுச்சி

அழு + ந்து — அழுந்து

இவ்வாறே எல்லாச் சொற்களையும் பிரித்துக் காணலாம்.

## 4. சிறப்பு விகுதிகள்: (Particles of Specialisation)

பொதுவாகத் திராவிட அடிச் சொற்கள் ஓரசை வாய்ந்தவை (Mono syllabic) என்பர். இவற்றோடு சேரும் ஆக்க விகுதிகள் பொருட் சிறப்புக்கேற்ப அமையும்.

நில் + ஐ — நிலை

நில் + அம் — நிலம்

| | | | | |
|---|---|---|---|---|
| அழ் | + | இ | — | அழி |
| அழ் | + | ஐ | — | அழை |
| அழ் | + | உ | — | அழு |
| எழு | + | து | — | எழுது |
| எழு | + | த்து | — | எழுத்து |

எனவே பொருட் சிறப்பை நோக்கி ஆக்க விகுதிகள் சேர்ந்து சொற்கள் அமைகின்றன. இவற்றைப் பொருட் சிறப்பு விகுதிகள் ஏன்று அறிஞர் கால்டுவெல் காட்டுவர்.

எனவே, ஓர் அடிச் சொல்லைக் கொண்டே பல சொற்கள் அமைக்க முடிகிறது.

| | | |
|---|---|---|
| அட் | — | அடு ; அடங்கு ; அடக்கு. |
| அடர் | — | அடுக்கு. |
| அண் | — | அணி, அணை, அணவு, அண்மை. |

இவை பெயர் வினைக்கு எனப் பிரித்துக் காணமுடியாது. பொதுவாக இவற்றைச் சொல்லாக்க விகுதிகள் என்றே கூற வேண்டும்

| | வினை | பெயர் |
|---|---|---|
| அர் | வளர் | சுடர் |
| இர் | துளி | துளிர் |
| அழ் | புகழ் | இதழ் |
| அறு | இடறு | கிணறு |
| இறு | | ஞாயிறு |
| அல் | சுழல் | ஈரல் |
| இல் | குயில் | வெய்யில் |

| | | |
|---|---|---|
| இல் | | மதில் |
| அள் | துவள் | திங்கள்; |
| உள் | உருள் | இருள் |

## 5. இலக்கண விகுதிகள் (Grammatical sufixes or additions)

அடிச் சொல்லோடு இலக்கண விகுதிகள் சேர்ந்து வினையாக இருந்தால் காலம், திணை, பால், எண், இடம் உணர்த்துகிறது. பெயராக இருந்தால் திணைபால் எண் இடம் வேற்றுமையை உணர்த்துகிறது.

செய்+த்+ஆன்—செய்தான்.

த்—காலம் உணர்த்தியது
ஆன்—திணை, பால், எண்,
இடம் உணர்த்தியது.

இறை+வ்+அன்—(வ்—சந்தி)

அன்—திணை, பால், எண், இடம்
உணர்த்தியது.

இறைவன் + ஐ —இறைவனை

ஐ வேற்றுமை உருபு.

அடிச்சொல் அல்லாத சேர்க்கை உருபுகளை விகுதிகள் (affixes) என்பர். அவை முன்னால் சேர்ந்தால் முந்து உருபுகள் (preafixes) என்றும் பின்னால் சேர்ந்தால் பிந்து உருபுகள் (suffixes) என்றும் கூறுவர்.

இச்சேர்க்கை உருபுகள் இலக்கணச் சிறப்பை உணர்த்திப் பெயர்வினை அமைப்புக்குக் காரணமாக அமைகின்றன. திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் இவற்றை உணர்த்தி நிற்கின்றன. தொழிற்பெயர், பண்புப் பெயர்

முதலிய பெயர்களின் விகுதிகளாக தல், அல், இ, கை, மை, பு முதலியன சேர்கின்றன. 'ஆ' எதிர்மறை விகுதியாக அமைகிறது. இவ்விலக்கண விகுதிகளையே நன்னூல் விளக்கிக் கூறுகின்றன.

## 6. சொல்லாக்கம்

*(1)* அடிச் சொற்களோடு ஆக்க விகுதிகள் சேர்ந்து சொற்கள் ஆகின்றன.

நில் + அம் — நிலம்

நிழ் + அல் — நிழல்

*(2)* அடிச் சொற்களோடும் ஏனைய பகுதிகளோடும் இலக்கணச் சிறப்பு விகுதிகள் சேர்ந்து சொற்கள் அமைகின்றன.

செம்+மை—செம்மை—பண்புப் பெயர்.

செய்+கை—செய்கை—தொழிற் பெயர்.

கெடு+தி —கெடுதி — ,,

செடு+பு —செடுபு — ,, (தெலுங்கு)

செய்+த்+ஆன்—செய்தான் — முற்றுவினை.

மரம் + அத்து + ஐ—மரத்தை—வேற்றுமை உருபு ஏற்ற பெயர்.

*(3)* அடிச் சொற்களின் உயிர்களில் ஏற்படும் மாற்றங்களால் புதிய அமைப்புக்கள் ஏற்படல்.

**ஆதி நீடல்** (வெறும் ஒலிநய மாறுதல்).

பெயர் —பேர் —பெசர் (கன்னடம்)

தொகுப்பு—தோப்பு

தொகலு (கன்னடம்)—தோல் (தமிழ்).

**(4) அடிச்சொற்கள் குறுகல்: இலக்கண நயம் பற்றியது.**

எழுவாய் வேற்றுமையில் யான் நான் என்பன ஏனைய வேற்றுமையில் 'என்' ஆதல். இவ்வாறே ஏனைய இடப் பெயர்களிலும் எண்ணுப் பெயர்களிலும் நெடில் குறுகல் வடிவங்கள் என இருவடிவங்கள் காணப்படுகின்றன.

| **தமிழ்** | **தமிழ்** | **தெலுங்கு** |
|---|---|---|
| நான் | என் | |
| நீ | நின் | நின்னு |
| நீர் | நும் | |

எண்ணுப் பெயர்களில் அடையாக வரும்பொழுது குறுகல் வடிவமும் தனித்து வரும்பொழுது நெடில் வடிவமும் அமைகின்றன.

ஒன்று — ஓரிரண்டு
இரண்டு — ஈரிரண்டு
மூன்று — முப்பது
நான்கு — நவ்வாலு
ஆறு — அறுபது
ஏழு — எழுபது

**மாறி அமைதலும் உண்டு.**

ஒன்று — ஒவ்வொன்று; ஒருபது
இரண்டு — இவ்விரண்டு; இருபது
நான்கு — நாற்பது
ஐந்து — ஐம்பது
எட்டு — எண்பது

(5) **ஒலிநயம் பற்றிய மாறுதல்** : வருமொழி உயிர் முதல் மொழியாக இருந்தால் நெடில் வடிவமும், மெய்ம் முதலாக இருந்தால் குறுகல் வடிவமும் அமைகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| கரு | + | நிறம் | — | கருநிறம் |
| கரு | + | இருள் | — | கார்இருள் |
| அரு | + | நெறி | — | அருநெறி |
| அரு | + | இடை | — | ஆரிடை |
| கொழு | + | மீன் | — | கொழு மீன் |
| கொழு | + | இலை | — | கோழ் இலை |

(6) **இலக்கணம் பற்றிய மாறுதல்.**

| | | |
|---|---|---|
| கண் | — | காண். |
| வரு | — | வா ; (தெலுங்கு) |
| தரு | — | தா. |
| நொய் | — | நோவு. |
| கெடு | — | கேடு. |
| மின் | — | மீன். |
| கொல் | — | கோல். |
| வெல் | — | வேல். |

# 5. பெயர்ச்சொல்

## பெயரும் வினையும் :

பெயரும் வினையும் திணை, பால், எண், இடம் உணர்த்தும். வேற்றுமை ஏற்பது பெயர் காலம் உணர்த்துவது வினை என்ற அடிப்படையில் பெயர் வினை என்ற அமைப்புகள் சிறந்து நிற்கின்றன.

## பால் உணர்த்தல் :

(1) இந்து ஐரோப்பிய மொழிகள் பால், எண்—சொல் வடிவை ஒட்டி உணர்த்துகின்றன. பால் பொருள் நோக்கால் ஏற்படவில்லை. அஃறிணைப் பொருள்களுள் உயிரற்ற பொருள்களுக்கும் ஆண், பெண், பால் பகுப்புக் கற்பிக்கின்றன; ஆண், பெண், பால் விகுதிகளை ஏற்று இவை இயங்குகின்றன.

(2) திராவிடப் பெயாகள் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடுகளைப் பெற்று இயங்குகின்றன. தெலுங்கு இலக்கணம் இவற்றை முறையே **மஹத், அமஹத்** எனப் பிரித்துக் காட்டும். மக்கள் தேவர், நரகர் உயாதிணை. ஏனைய உயிா உள்ளனவும் இல்லனவும் அஃறிணை எனப்படும்.

(3) பொதுவாகப் பெயர்கள் பால் ஈறுகள் பெறுமல் இயங்குகின்றன. ஞாயிறு, நிலவு, திங்கள், பொழுது முதலியன காண்க. ஒரு சில மட்டும் பால் ஈறுகள் பெற்று அமைந்துள்ளன.

இறை, வேந்து, குழவி — ஈறு அற்றது.
இறைவன் — பால் ஈறு பெற்றது.

## இகர ஈறு :

(4) தமிழ்ப் பெயர்ச்சொல்லில் மட்டும் இகர ஈறு பெண்பாலை உணர்த்துகிறது. அது பெண்பாலுக்கும் ஒன்றன் பாலுக்கும் பொதுவாக அமைந்துள்ளது.

மனைவி, ஒருத்தி — பெண்பால்.

மண்வெட்டி, நாற்காலி— ஒன்றன்பால்.

## பால் ஈறுகள் :

(5) பால் ஈறுகளாக அமையும் என், ஏன், எம், ஏம், ஓம், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று முதலியன மூவிடப் பெயர்களின் ஈற்று நிலைகளாம் எனலாம்.

யான் — ஏன் — செய்வேன் — தன்மை ஒருமை.

யாம் — ஏம் — செய்வேம் — பன்மை.

அவன் — ஆன்— வந்தான் — ஆண்பால் ஒருமை.

அவள் — ஆள்— வந்தாள் — பெண்பால் ஒருமை.

அது — து — செய்தது — ஒன்றன்பால்.

று — போயிற்று — ,,

த — ற வாக மாறியது.

அவர் — ஆர் — செய்தார் —பலர்பால்.

## தெலுங்கு மொழியின் தனி அமைப்பு :

(6) தெலுங்கு மொழியில் ஒரு தனி அமைப்பு உள்ளது. பெயரிலும் வினையிலும் இகர விகுதி பெண்பால் உணர்த்துகிறது. மேலும் ஒரே வடிவம் பெண்பாலுக்கும் ஒன்றன்பாலுக்கும் பொதுவாக வழங்குகிறது.

அதி வச்சினதி — அவள் வந்தாள்.

— அது வந்தது.

இது மத்திய திராவிட மொழியின் இயல்பு என்று கருதப்படுகிறது.

நீலகிரி வாழ் துதவரும் கோதவரும் அதம் இதம் என்ற இரண்டு வடிவங்களை முறையே சேய்மைச் சுட்டாகவும் அண்மைச் சுட்டாகவும் ஆண், பெண், ஒன்றன் பால்களுக்குப் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

## பால் ஈறு அற்ற நிலையே பழைய நிலையாம் :

(7) மலையாளம், பைதல் என்ற சொல்லை ஆணுக்கும் பெண்ணுக்கும் பயன்படுத்துகிறது.

ஆண் பைதல் — பையன்.

பெண் பைதல் — பெண்.

தமிழிலும் ஆம்பிளை (ஆண் பிள்ளை) பொம்பளை (பெண் பிள்ளை) என்றும் வழக்கு உள்ளது. பிள்ளை என்பது தனித்து இரு பாலுக்கும் வழங்குகிறது.

## எண் உணர்த்தல் :

திராவிட மொழிகள் ஒருமை. **பன்மை** என இரண்டு எண்களையே ஏற்றுள்ளன. **இருமை** (dual) என்ற வடமொழி பகுப்பு இங்கு இல்லை.

(1) **ஆண்பால் ஒருமை.**

**ஆண்பால் ஒருமை விகுதி** அன், ஆன் அல்லது ஒன்.

இவை சுட்டுப் பெயர்களின் ஈற்று விகுதிகளும் அவற்றின் திரிந்த வடிவங்களும் ஆம். நுண்பொருள் உணர்த்தும்

பண்புச் சொல்லோடும் பருப்பொருள் உணர்த்தும் ஒன்றன் பால் அஃறிணைச் சொல்லோடும் பால் விகுதிகள் சேர்ப்பதால் ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொற்கள் அமைகின்றன.

அன்பு + அன் — அன்பன்

மலை + அன் — மலையன்.

தமிழ் + அன் — தமிழன்.

பண்புச் சொற்களோடும் அஃறிணைப் பெயர்ச் சொற்களோடும் பால் விகுதிகள் சேர்ப்பதால் வினைக் குறிப்புக்கள் அமைகின்றன.

கரி + அன் — கரியன்.

நிலம் + அன் — நிலத்தன்.

ஊர் + அன் — ஊரன்.

பால் விகுதிகளே அன்றி முழுச் சுட்டுப் பெயர்களும் சேர்வதால் பால் உணர்த்தும் பெயர்ச்சொற்கள் அமைகின்றன.

வில் + அன் — வில்லன்.

வில் + அவன் — வில்லவன்.

வில் + ஓன் — வில்லோன்.

தமிழ் பால் விகுதியாகிய 'அன்' என்பதற்கு நிகராகப் புதுக் கன்னடத்தில் 'அனு' என்ற விகுதி அமைகிறது. பழங் கன்னடத்தில் 'அம்' என்பது பால் விகுதியாக இருந்தது. மலையாளம் 'அன்' விகுதியைப் பெற்றுள்ளது.

தெலுங்கு டு; ன்டு; அடு; அன்டு.

தமிழ் — மகன் — தெலுங்கு மகன்டு (கணவன்)

னகரம் அரை மெல்லினம் ஆகும்.

மகன் என்பதற்குப் பழங்காலத்தில் கணவன் என்னும் பொருளும் இருந்தது.

(தமிழ்) சின்ன + அவன் — (தெலுங்கு) சின்ன வான்டு.

எனவே, அவன் என்பது வான்டு என ஆயிற்று எனலாம்.

தெலுங்கிலும் அன் அல்லது அனு என்பது ஆண்பால் விகுதியாக ஒருகாலத்தில் இருந்திருக்க வேண்டும். வேற்றுமை ஏற்கும் வடிவில் இவ்வுண்மை புலப்படுகிறது.

அவன் + கு — அவனுக்கு (தமிழ்)
வானிகி (தெலுங்கு)

அவன் என்பது ஒலியிடம் பெயரல் (Metathesis) என்னும் விதியின்படி 'வான்) என மாறியுள்ளது.

அவருக்கு — வாரிகி (தெலுங்கு)

ஒப்பிட்டுப் பார்த்தால் 'னி' என்பது ஆண்பால் விகுதி என்பது புலப்படும்.

**பெண்பால் விகுதி**: தெலுங்கு மொழியும், கோந்து மொழியும் ஒன்றன்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான விகுதி பயன்படுத்துகிறது. எனினும், ஏனைய திராவிட மொழிகள் தனித்தனி விகுதிகளைக் கொண்டுள்ளன.

அவள் — அள் — ஆள் (தமிழ்)

— மகள் — இல்லாள் (அள்—ஆள்)

ஒன்றன்பாலுக்கும் பெண்பாலுக்கும் உள்ள பொது விகுதியாக இகரம் உளது என்றாலும் பெயர்ச்சொல்லில் ஒருசில இடத்துத் தமிழ் 'அள்' என்பதன் திரிந்த வடிவமாக 'ஆலு' என்பது பெண்பால் விகுதியாக வழங்குகிறது.

## தெலுங்கு

மனமராலு — (பெயர்த்தி)

கோடலு — மருமகள்

'அதி' என்ற விகுதி பெண்பாலுக்கும் ஒன்றன்பாலுக்கும் தெலுங்கிலும் அமைகிறது. இகர விகுதி சேர்ந்து தமிழிலும் பெண்பால் அமைகிறது.

புலைத் + த் + இ — புலைத்தி — புலைச்சி.

வெள் + ஆள் + த் + இ — வெள்ளாட்டி

மனை + ஆள் + த் + இ — மனையாட்டி

பெண் + ஆள் + தி — பெண்டாட்டி

ஒரு + த் + இ — ஒருத்தி

அரசதி (கன்னடம்) ராசாத்தி (தமிழ்)

மால + அதி — மாலதி (தெலுங்கு) (புலைத்தி)

சின்ன + அதி — சின்னதி (தெலுங்கு) (சின்னவள்)

எனவே 'த் இ'—தி சேர்ந்து பெண்பால் அமைதல் ஒரு வகை, வெறும் இகரம் சேர்ந்து அமையும் பெயர்கள் பல உள்ளன. மனைவி, தலைவி, தோழி முதலியன—தமிழ்.

### பெயர் ஒருமை கொள்ளல் :

பால் விகுதிகள் சேராத சொற்கள் ஒன்றன் பாலிலேயே திராவிட மொழிகளில் வழங்குகின்றன. சுட்டுப் பெயராக வருவது. அது (தமிழ், மலையாளம், கன்னடம்); அதி (தெலுங்கு); அத் (கோந்து); இதன் 'து' விகுதியே பெயரிலும் வினையிலும் சேர்ந்து ஒன்றன்பாலை உணர்த்துகிறது.

நல்லது (பெயர்), வருகிறது (வினை).

தகரம் ற கரமாகவும் டகரமாகவும் மாறும் இயல்பினது. இந்த 'து' விகுதி தமிழ் எண்ணுப் பெயர்களின் ஈற்றில் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒன் + து — ஒன்று; இரண் + து — இரண்டு; மூன் + து — மூன்று, ஐந் + — ஐந்து; ஆ + று— ஆறு; எண் + து — எட்டு; பவ் + து — பத்து.

தெலுங்கில் 'தி' ஒன்றன்பாலையும் பெண் ஒருமையையும் உணர்த்தும்-

**பெயர் பன்மை கொளல் :**

(1) தமிழில் அஃறிணைப் பெயர்ச் சொற்கள் பன்மைப் படுத்துவது இல்லை.

நாலு மாடு மேய்கிறது — பேச்சுத் தமிழ்

நான்கு மாடுகள் மேய்கின்றன — புலவர் தமிழ்.

தெலுங்கில் அஃறிணைப் பெயர்ச் சொற்கள் பன்மை உருபுகள் பெறுகின்றன.

தமிழில் முன் நிற்கும் எண்ணுப் பெயரடை பன்மையை உணர்த்துகிறது.

பத்து மாடு — மாடு பன்மை என்பது.

(2) இந்து ஐரோப்பிய மொழிகளில் பன்மைக்கு ஏற்ப வேற்றுமை உருபுகள் மாறும். தமிழில் ஒருமைக்கும் பன்மைக்கும் ஒரே வகை வேற்றுமை உருபு வரும்.

(3) அவர் வந்தார் என்ற ஒரே வடிவம் ஆண் பெண் பொதுப் பன்மையாகவும், ஆண் பன்மையாகவும் பெண் பன்மையாகவும் அமைகிறது. இது திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும்.

(4) பொதுவாக ரகர ஈறு பாற்பொதுமைப் பன்மைப் பாலாக எல்லாத் திராவிட மொழிகளிலும் அமைந்துள்ளது.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|
| அவர் | அவர் | வாரு | அவரு |

தெலுங்கில் ஒரு சிறப்பு வழக்கு உள்ளது. கள் என்பதற்கு இணையாக 'லு' என்பது வழங்குகிறது. இது உயர் திணையில் ரகரத்திற்கு மாருக வந்துள்ளது சிறப்பு வழக்காகும்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| மகன் | மகண்ட்லு |
| அல்லுடு (மருமகன்) | அல்லுண்ட்லு |

அவன் வாரு ; வாண்ட்லு (பேச்சுத் தெலுங்கு). கள் விகுதி தமிழிலும் உயர் திணைக்கு விளங்குகிறது.

மக்கள் — உயர்திணை (மகவு + கள்)

குரு (ஆசிரியர்) — குருக்கள் (தமிழ்), குருகுலு (கன்னடம்).

தமிழில் ரகர விகுதிக்குமேல் மற்ெருரு கள் விகுதி ஏறிப் பலர் பாலே உணர்த்துகிறது.

அவர்கள் வந்தார்கள்

நீங்கள் (நீர்கள்) வந்தீர்கள்.

இவை கன்னடத்திலும் புதிய வழக்காக இடம் பெற்றுள்ளது.

தெலுங்கிலும் இரட்டைப் பன்மை உருபுகள் ஏறிய வழக்கு உள்ளது.

வாரு — வாரலு — அவர்கள்.

மீரு — மீரலு — நீங்கள்.

வாரு என்பது காரு எனவும் தெலுங்கில் வழங்குகிறது.

துரை அவர்கள் — தொரகாரு.

## பலர்பால் உருபுகள் :

*ரகரம் பல்வேறு வடிவங்களில் திராவிட மொழிகளில் வழங்குகிறது.*

| **தமிழ், மலையாளம்** | **தெலுங்கும் கன்னடமும்** |
|---|---|
| *அர், ஆர், ஓர்; இா, ஈர்* | *அரு, ஆரு, ஆரா, ஏரு. ரி, ரு.* |

## மார் விகுதி :

*செய்யுமார் * என வினைச் சொல்லில் பழைய வழக்கு உள்ளது. என்மர் — இதில் மர் என்ற வழக்கு உள்ளது. ஆசிரியன்மார், கணவன்மார்; தாய் தகப்பன்மார்; தாய் மார்; தகப்பன்மார் என்று பொதுப் பொருளில் வழங்குகின்றன. உயர்ந்தவர்களுக்கு இவ்வழக்குத் தமிழில் உள்ளது.*

*'கள்ளன்மார்' என்ற வழக்கு மலையாளத்தில் உள்ளது.*

*நால்வர் — எண்மர். ஒலி நயம்பற்றி வர், மர் என மாறி வந்திருக்கலாம் எனக்கருதுவர்.*

## பலவின் பால் விகுதி :

*(1) 'கள்' விகுதி பலவின் பால் விகுதியாகும்.*

| **தமிழ்** | **மலை** | **தெலுங்கு** | **கன்னடம்** |
|---|---|---|---|
| *கள்* | *கள், ங்ங* | *லு* | *கள் (gal); களு* |

*தமிழ் — வீடுகள் (gal) | கற்கள் (kal) | ஒலி மாறுகிறது.*

*கன்னடம் களு — தெலுங்கு லு.*

---

*** செய்யும் + ஆர் என்பது செய்யுமார் என மாறியிருக்கலாம்.***

ணகரம் கெட்டு லகரம் இடம்பெற்று மரியாதைப் பெயர்களாக ஒரு சில 'உ' வொடு இறுகின்றன.

கேசவன் — கேசவலு.

ராமன் — ராமுலு.

(2) கள் என்பதோடு அகரமும் பன்மை உருபாக வந்துள்ளது.

ஆகுல நீர பிற (குறள்) - அகரம்.

பன்மை உணர்த்தல் காண்க.

சில, பல (அகரம் பன்மை உருபு).

(3) வ்' பன்மை உணர்த்தல்.

அவ், இவ், எவ், உவ் - பன்மை உணர்த்தும். அற்றுச் சாரியை பன்மை வடிவங்களாதல் பற்றி இச் சுட்டுக்களில் வருகின்றன.

அர் + து — அற்று.

அவை, இவை — பன்மை வடிவம்.

அவி, இவி — தெலுங்கு வழக்குகள்.

அவு, இவு — கன்னடம்.

# 6. வேற்றுமை

*(1)* வேற்றுமை உருபுகள் பிந்து நிலைகளாக (Post positions) அமைகின்றன. வேற்றுமை உருபுகள் தனிச் சொற்களின் திரிபுகள் என்பது அறிஞர் கால்டுவெல்லின் கருத்தாகும். எல்லா வேற்றுமை உருபுகளையும் இவ்வாறு கொள்ளுவதற்கு இல்லை என்பது ஆராய்ச்சியால் கொள்ளப்படுகிறது.. ஒரு சில சொற்களின் ஈறுகளாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றன.

*(2)* இந்தோ ஐரோப்பிய மொழிகளைப்போல பன்மைக்கு ஒருவகை வேற்றுமை உருபும் ஒருமைக்கு ஒருவகை உருபும் என்ற நியதி திராவிட மொழிகளில் இல்லை. பன்மை உருபு சேர்ந்த பிறகே வேற்றுமை உருபு இடம் கொள்ளும்.

*(3)* வடமொழியை ஒட்டி முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை என எண் கொடுத்தும் அதே முறையமைப்பை மேற்கொண்டும் வேற்றுமை அமைக்கப்பட்டுள்ளது என்பது கால்டுவெல் கருத்தாகும்.

பொருள்பற்றி வகுத்தாலும் உருபுபற்றி வகுத்தாலும் அளவுக்கு உட்படாது பெருகும் என்று கூறும் அவ்வறிஞர் எண் முறையில் அமைத்தது ஒருவகையில் சுருக்கமாகவும் கட்டுக்கு அடங்கியதாகவும் உள்ளது என்று தெரிவிக்கின்றார்.

**முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை:**

*(1)* இதனை வேற்றுமை என்று கூறுவதற்கு இல்லை. திராவிட மொழிகளைப் பொறுத்தவரையில் எழுவாய் வேற்றுமை திரிபில் பெயராகும். உருபுகள் ஏற்பது இல்லை. வடமொழியில் முதல் வேற்றுமையும் உருபு ஏற்று நிற்கும். வட

மொழியில் 'அம்' என்பது முதல் வேற்றுமை உருபாகும். தமிழில் மரம், நிலம் முதலிய சொற்களில் 'அம்' சொல்லாக்க விகுதியாகும்.

*(2)* எல்லாத் திராவிட மொழிகளிலும் மூவிடப் பெயர்கள் எழுவாயில் ஒருவகை வடிவும் ஏனைய வேற்றுமை உருபு ஏற்கத் திரிந்த பெயர்கள் ஒருவகை வடிவும் பெற்றுள்ளன.

*நாம் — நம்; யான் — என்; நீ — நின்*

*தான் — தன்; தாம் — தம்*

எழுவாயில் பொதுவாக நெடில் வடிவும், ஏனைய உருபுகளில் குறுகிய வடிவமும் உள்ளன.

**கன்னடம் :**

*நானு — நன்ன ; நீனு — நின்ன*

*தானு — தன்ன*

இரண்டாம் வேற்றுமையில் மட்டும் குறுகல் வடிவம் பெற்றுள்ளது. ஏனைய வேற்றுமைகளில் நெடில் வடிவமே உள்ளது.

**தெலுங்கு :**

*நேனு — நன்னு; நீவு — நின்னு; தானு — தன்னு.*

**இரண்டாம் வேற்றுமை :** *(செயப்படு பொருள் வேற்றுமை)*

திராவிட ஒன்றன்பால் ஈற்றுச் சொல்லின் ஈற்று ஆக்க விகுதியாகிய அம் என்பதே இரண்டன் உருபாக வடிவு எடுத்திருக்க வேண்டும் என்று அறிஞர் கால்டுவெல் கருதுவர்.

*நிலம்; மரம்; பணம்; கலம்.*

பழங்கன்னட மொழியில் 'அம்' என்பது இரண்டன் உருபாக விளங்குதல் காண்க.

பனம்காய் — பனய் மரம் (பனய் — அம் > அய்)

எனவே, அம் என்பதே அய் எனத் திரிந்து இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

பொருள் தெளிவாக உணரும் இடங்களில் தமிழிலும் மலையாளத்திலும் இரண்டன் உருபு இல்லாத் தொகைநிலைத் தொடர்களே மிகுதியாக வழங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் உயர்திணையில் 'ஐ' உருபு வெளிப்படுவது இல்லை. அஃறிணையிலேயே வழக்காறு பெற்று இருந்தது.

உருபுகள் ; தமிழில் ஐ; மலையாளம்—எ. பழமலையாளம் —அ ; புதுக்கன்னடத்தில் 'அ' அல்லது 'அன்னு' ; பழங் கன்னடம்—அம் ; தெலுங்கு 'னி'.

பழங்கன்னடம் — அவளம் ;

புதுக்கன்னடம் — அவளன்னு.

**தெலுங்கு :** இகரம் வரும்பொழுது 'னி' வரும். ஏனைய இடங்களில் 'னு' வரும். *1

பிட்டனு ((biddanu)—குழந்தையை.

இன்டினி (intini) —வீட்டை.

**மூன்றன் உருபுகள் :** (கருவி வேற்றுமை)

**தெலுங்கு :** சே (che) அல்லது சேத (cheta) என்ற சொல்லுருபு சேர்ப்பதால் கருவிப் பொருளை உண்டாக்கு கிறது. இது சேயி (கை) என்ற சொல்லின் திரிபாகும்.

நிப்பு சேத (நெருப்பால்).

---

*1 உயிர் ஒலி இயைபு என்ற விதியின்படி இம்மாற்றம் நிகழ்கிறது. நான்கன் உருபும் 'கு'—'கி' என மாறிவரும் என முன்னர்க் காட் டப்பட்டுள்ளது.

'தோ' என்பது உடன் நிகழ்ச்சிச் சொல்லுருபாகும். அதுவும் கருவிப் பொருளில் வருகிறது. *2

கத்திதோ — கத்தியால்.

**பழங் கன்னடம் :** 'இம்'—இது தமிழ் 'இன்' என்பதன் மாற்று வடிவம் என அறிஞர் கால்டுவெல் கருதுவர்.

**புதுக் கன்னடம் ;** இந்த (inda) இது 'இன்' என்பதன் திரிந்த வடிவமாக இருக்கலாம்.

**தமிழ் மலையாளம்**—ஆல்; பழந்தமிழ் வழக்கு 'ஆன்'.

'ஆன்' என்பது இடச்சுட்டைக் குறிக்கும் சொல்லாக இருந்து பின்னர் மூன்றன் உருபாக இடம் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கொண்டு என்பது சொல்லுருபாக வழங்குகிறது.
கத்தியைக்கொண்டு.

(2) உடனிகழ்ச்சிப் பொருள். **உருபுகள்.**

தமிழ், மலையாளம்; ஒடு, ஒடு, உடன்.

தெலுங்கு 'தோடு'—சொல்லுருபு மருவிய வடிவமாக 'தோ' என்பதும் வழங்குகிறது. தோழமை என்ற தமிழ்ச் சொல்லுக்கும் 'தோடு' என்ற தெலுங்குச் சொல்லுக்கும் தொடர்பு உள்ளது. தமிழ் ழகரம் தெலுங்கில் டகரமாகும் என்பது முன்னர்க் காட்டப்பட்டது (பக்-24).

**நான்கன் உருபு :** (கொடைப் பொருள் வேற்றுமை).

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|
| கு, க்கு | க்கு | கு அல்லது கி | கெ(ge) அல்லது கெ(ke) |

*2 ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்—ஒடு என்பது கருவிப்பொருளில் தமிழிலும் வழங்குதல் காண்க.

பெஹிஸ்தன் அட்டவணையில் (Scythian tablets of Behistan) 'இக்கி' அல்லது இக்க என்னும் வடிவம் உளது. இதைக் கொண்டு திராவிட மொழிகளுக்கும் மத்திய ஆசிய மொழிகளான இந்திய மொழிகளுக்கும் தொடர்பு உளது என்று காட்டுவர்.

மலையாளம் 'க்கு' என்ற உருபோடு இன்னு னு அல்லது உகரம் நான்கன் உருபாக ஒரு சில இடங்களில் வழங்குகிறது. 'இன்னு என்பது' 'இன்+கு' இன்கு என்னும் கூட்டுருபின் திரிபாகும். இன் தமிழில் வழங்கும் சாரியை யாகும் அதனோடு 'கு' சேர்ந்துள்ளது.

**ஐந்தன் உருபு:** (நீக்கப் பொருள் வேற்றுமை)

**தமிழ் — மலையாளம்**

இல் — இன்

இன் என்பது உவம உருபாக வழங்கிய ஒன்று ஐந்தன் உருபாக இடம் பெற்றுள்ளது.

**பழங் கன்னடம்:** 'இம்' என்பது ஐந்தன் உருபாகும்.

**புதுக் கன்னடம்:** 'அல்லிந்த' அல்லது 'இல்லிந்த' இது இல் இருந்து அல்லது இல் நின்று என்பதோடு தொடர்பு கொண்டு விளங்குகிறது.

**தெலுங்கு:** உருபு 'ன' இது தமிழ் இன் என்பதோடு உறவுடையது.

'னுண்டி' அல்லது 'னுஞ்சி' என்ற சொல்லுருபும் தெலுங்கில் வழங்குகிறது. இது தமிழ் 'இருந்து' என்பதற்கு இணையானதாகும்.

னுண்டி — ன் + உண்டி

னகரம் இன் என்பதோடு தொடர்புடையது.

பரலோகமு + ன் + உண்டி வச்சினுடு

(பரலோகத்திலிருந்து வந்தான்) உண்டி என்பது இருந்து நின்று என்பதுபோன்ற வழக்கமாகும். 'உள்' என்பது இதன் அடிச் சொல்லாகும்.

உள் — உண் + த் + இ — உண்டி.

உண்டி என்பதன் திரிந்த வடிவம் உஞ்சி என்பதாம்.

**ஆறன் உருபுகள்:** (உடைமைப் பொருள் வேற்றுமை).

**குறுக்கல் வடிவமும் ஆறன் பொருளும்:**

யான் - என்; நீ - உன்; நின், நீர் - நும். குறுக்கல் வடிவங்கள். ஆறன் பொருளாகிய உரிமைக் கிழமைப் பொருளைத் தாங்கியுள்ளன. வேறு உருபுகள் சேராமலேயே இவ்வடிவங்களே நின்று உடைமைப் பொருளைத் தருகின்றன. தொகைப் பொருளில் சேர்த்துக் கூறும்பொழுது அடுத்த சொல்லின் பிணைப்பு முதற்சொல்லின் வடிவைக் குறைத்து விடுகின்றது.

யான் கை — என் கை

நீன் கை — நின் கை

எண்ணுத் தொகைகளிலும் அவ்வமைப்பு உளது. இது தொகைச் சொல்லின் வருமொழியாற்றல் என்று கூறலாம்.

ஆறுபது — அறுபது

ஏழுபது — எழுபது

'அத்து' என்பது ஆறன் பொருளிலும் ஏழன் பொருளிலும் வரும்.

குளத்து மீன் - குளத்தில் உள்ள மீன்; குளத்துக்கு உரிய மீன். அதுவே மீனுக்குப் பண்பு அடையாக நிற்கிறது. எனவே குளத்து மீன் என்பதில் குளத்து என்பது பண்பு அடையாகவும், இடப்பொருளாகவும், உடமைப் பொருளாகவும் வந்துள்ளது. வேற்றுமைப் பொருளில் இரண்டு சொற்கள் சேரும்பொழுது முதற் சொல் இரட்டிக்கும் பண்பு உள்ளது.

மருந்து + பை — மருத்துப்பை

கயிறு + ஊசல்— கயிற்றூசல்

இதேபோல 'மரது' + கிளை — மரத்துக்கிளை என்று ஆகியிருக்கலாம் என்பர் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்.*2

**அது என் உருபும் ஆறன் பொருளும் :**

தமிழில் 'அது' என்பது சொல்லுருபாகும். இது அஃறிணை ஒன்றன்பாலுக்கு முன்பு மட்டு வரும். அது என்பது சுட்டுச் சொல்லாக இருந்த ஒன்று ஆறன் உருபாக வழங்கிவிட்டது என்பர் அறிஞர் கால்டுவல்.

என் அது — என்னுடைய அந்தப்பொருள்.

என் அது வீடு — என்னுடைய அந்தப்பொருள் வீடாகும். இதைச் சேர்த்துக் கூறும்பொழுது அது அடையாக நின்று உடைமைப் பொருளைத் தருகிறது.

அத்துசாரியை பெற்றுப் பிறகு வருதல் உண்டு.

மரத்தினது.

எனது வீடு — ஆறன் உருபில் வந்தது.

வீடு எனது — (குறிப்பு வினையாயிற்று).

மலையாளம் கன்னடம் — 'அது' — தெலுங்கு 'அதி.

**அகர உருபு :** பன்மையில் இலக்கியத்தமிழ் அகர உருபு ஏற்கிறது, வருமொழி பன்மையாக இருந்தால் அகரம் உருபாக வரும்.

தன கைகள்

---

*1 நீன் என்பதன் திரிபே நீ எனக் கருதப்படுகிறது. அதன் குறுக்கல் வடிவம் 'நின்' என்பதாம்.

*2 History of Tamil P. 98 கன்னடத்தில் 'மரத' என்ற சொல் மரம் என்ற பொருளில் வந்துள்ளது.

T3840



**இன்சாரியை ஆறன் உருபாக வரல் :**

தமிழில் 'இன்' தெலுங்கில் 'னி' சாரியையாக அமைந்து அவையே ஆறன் உருபு பொருளைத் தருகின்றன.

தமிழில் இன் எல்லாச் சொற்களோடும் சேர்ந்து ஆறன் பொருளைத் தருகிறது. அத்து ஒன்றன்பால் பெயரோடு மட்டும் சேரும். அற்று பன்மைச் சொல்லோடு மட்டும் சேரும். மலையாளத்திலும் இதைப்போன்ற வழக்கே உள்ளது. கன்னடத்தில் இன் சாரியையாக மட்டும் வருகிறது. அது தனித்து வருவதில்லை. அதன் பின்னர் 'அ' ஆறன் உருபாக அமைந்து இன (இன்+அ) வேற்றுமைப் பொருள் தருகிறது. தெலுங்கில் ன அல்லது னி ஆறன் பொருளில் உருபாக வருகிறது. தமிழில் 'இன்' தனித்தும், 'அது' 'உடைய' முதலிய உருபுகள் சேர்ந்தும் வரும். தமிழில் 'இன்' சாரியை எனக் கொள்ளப்படாவிட்டாலும் அது ஆறன் பொருளில் மிகுதியாக இடம் பெற்று அப்பொருளை உணர்த்துகிறது.

அகரம் இது அநேகமாக திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் வழங்குகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் வழங்குகிறது.

**தமிழ் :** என கைகள் என் அது கை.

**கன்னடம் :** குருவ (குருவின்); மரத (மரத்து); நன்ன (என்னுடைய).

**தெலுங்கு :** ஊரகவி.

தமிழ் 'அகரம்' பழைய இலக்கிய வழக்காகும்.

'நுன சீர் அடி'—சிந்தாமணி.

**மலையாளம் :** ரெ அல்லது தெ (de), இது தமிழ் 'அது' என்பதனோடு தொடர்பு கொண்டிருக்கலாம்.

என் தெ; என் ரெ — எனது,

என்னுடெ — என்னுடைய.

உடைய என்ற சொல்லுருபு மலையாளத்தில் 'உடெ' என வழங்குகிறது.

**துணைச் சொல்லுருபுகள் :**

**தெலுங்கில்** யொக்க; யொக — ஆறன் வடிவோடு இது சேர்க்கப்படுகிறது.

நாயொக்க — (என்னுடைய).

தமிழ் — உடைய; என்னுடைய வீடு.

**மலையாளம்** — உடைய என்பது உடெ எனத் திரிந்து வழங்குகிறது.

**புத்ரீடே** — மகளுடைய.

தமிழில் நான்கன் உருபாகிய 'கு' ஆறன் பொருளில் வருகிறது.

எனக்கு மகன்.

**ஏழன் உருபு :**

இடப் பொருள் உணர்த்தும் எந்தச் சொல்லும் திராவிட மொழிகளில் ஏழன் உருபாக அமைகிறது. எனினும் ஒரு சில சொற்கள் உருபுகளாகவே வழங்குகின்றன.

தமிழில் கண் என்பது இடப்பொருள் உணர்த்தும் உருபு ஆகும். 'கண் அகல் ஞாலம்' கண் என்பதற்கு இடப்பொருள் இருத்தல் காண்க.

தமிழில் 'இல்' மிகுதியான வழக்குடையது. இது 'இன்' என்பதன் திரிபாக இருக்கலாம்.

பழங் கன்னடம் 'ஒள்' (தமிழில் 'உள்'ளோடு தொடர்புடையது) உருபாக வந்துள்ளது. புதுக் கன்னடம் 'அல்லி' அல்லது 'இல்லி' வழங்குகிறது (இல் என்பதோடு தொடர்புடையது).

தெலுங்கு 'லோ' (உள்; உயிர் இடம் பெயரல் விதியின் படி 'லோ' என மாறியது. தமிழ் ள் தெலுங்கில் லகரம் ஆகியது); அந்து (andu) என்பது சுட்டு அடியாகப் பிறந்த மற்றோர் உருபாகும்.

'ன்' என்ற சாரியைக்கு நிகராகத் தெலுங்கில் 'ன' அல்லது 'னி' வழங்குகிறது.

**சில பொது உருபுகள் : அத்து** என்பது சாரியையாக வழங்குகிறது. அதுவே ஆறன் பொருளிலும் ஏழன் பொருளி லும் வழங்குகிறது.

மரத்தினது இருள்; மரத்துக் கிளை; குளத்து மீன்.

'**இன்**' - இது உவம உருபாக வழங்குவதோடு ஐந்தன் உருபாகவும். ஏழன் உருபாகவும் சாரியையாகவும் வழங்கு கிறது.

'ஆன்' இது சாரியையாகவும், மூன்றன் உருபாகவும், சுட்டு நீண்ட பழைய வடிவமாகவும் வழங்குகிறது.

அடுத்து வரும் சொற்களால் இவற்றின் நிலைகள் நிறுவப் படுகின்றன.

**எட்டன் உருபுகள் :** இதற்குத் தனி உருபுகள் திராவிட மொழிகளில் இல்லை. ஈற்று நிலையை ஒலியழுத்தம் செய்வ தாலும், நீட்டிப்பதாலும். ஈற்றயல் குன்றுவதாலும், ஏ, ஓ முதலிய உயிர்கள் சேர்ப்பதாலும் விளித் தன்மையை ஏற்று முடிகிறது.

**தெலுங்கில்** அர அல்லது அரா பலர்பால் சொற்களில் சேர்கின்றன. தமிழ் ஈர் போல்.

**கன்னடம் :** இறுதி உயிரை 'ஆ'வாக நீட்டிப்பதாலும் அல்லது 'ஆ' சேர்ப்பதாலும் அமைகிறது. பலர்பால் எ

5

அல்லது ஏ சேர்ப்பதால் மட்டுமல்லாமல் இர அல்லது இரா (தெலுங்கைப்போல்) சேர்ப்பதாலும் அமைகிறது.

**சாரியைகள் :** வேற்றுமைத் தொடர்களுள் உருபுகள் சேரும்பொழுது பெயருக்கும் வினைக்கும் இடையில் வெற்றுருபன்களாகச் சாரியைகள் அமைகின்றன.

(1) தமிழ் — இன், தெலுங்கு ன அல்லது னி.

**கன்னடம்** — இன்

(2) கன்னடம் — அத், அர்

மரத (மர் + அத் + அ)

இதரல்லி (இத்+அர் + அல்லி)

அத் என்பது தமிழ் அத்து என்பதோடு தொடர்புடையதாகும்.

அத், அர் இவையிரண்டும் ஒன்றன்பாலுக்கு மட்டும் வரும் சாரியைகளாகும். அர் என்பதன் தோற்றம் விளங்கிலது.

**தெலுங்கு :** டி (ti) அல்லது தி-ஒன்றன்பால் பெயருக்குச் சாரியை ஆகும். தமிழில் அத்து வரும் இடத்தில் டி அல்லது தி தெலுங்கில் வருகிறது. இது முதலில் 'தி'யாகத்தான் இருக்க வேண்டும் என்றும், இதன் திரிபே 'டி' என்றும் கால்டுவெல் கருதுவர்.

வாகிலி — வாகிடி

வாயு — (வாய்) வாதி

சே — (கை) சேதி

**தமிழ்:** அத்து. அற்று - இவை ஏனைய கன்னட மொழியில் உள்ள 'அத்', தெலுங்கு 'தி' இவற்றோடு தொடர்புடையது என அறிய முடிகிறது.

தமிழ் - மரம் - மரது என இரு வடிவங்கள் இருந்திருக்க வேண்டும். மரது என்பது அடையாக வருங்கால் மரத்து என்று ஆகிறது. மருந்து + பை — மருத்துப்பை என ஆதல் காண்க, எருது — எருத்துக்கால்.

ஒன்றன்பால் ஆக்க விகுதியாகிய 'அது' என்பதே அத்து என ஆகியிருக்க வேண்டும் எனக் கருதுவர். மரத என்ற கன்னட வடிவம் மரம் என்பதற்கு நிகரானது.

தமிழ் அத்துக்கும் கன்னட 'அத்' என்பதற்கும் நெருங்கிய உறவு உள்ளது.

பூர்வத்தில் (தமிழ்) — பூர்வத்தில் (கன்னடம்)

ஆயிரத்தொன்று (தமிழ் — சாவிர தொன்து).

அற்று என்பது அர் + து சேர்ந்த ஒன்றுகும். அர் பன்மை விகுதியாகும். எனவே, அற்று அல்லது வற்று என்பது பன்மைச் சொற்களோடு மட்டும் சேர்கிறது.

சிலவற்றை, பலவற்றை, அவற்றை, இவற்றை, எல்லாவற்றையும்

தமிழ் 'அவற்றை' என்பது தெலுங்கில் 'வாடி' (t) என வந்துள்ளது. எனவே அற்று என்பதன் மாற்று வடிவமே 'டி' என்பது பெறப்படுகிறது, அவற்றை - அவடி. வாடி (இடம் பெயரல்) 'டி'.

இல் - இண்டிலோ (டி) வீட்டில்)

தெலுங்கில் 'டி' ஒருமைக்கும் பன்மைக்கும் வழங்குகிறது.

இல் + பசு — இண் டி ஆவு (வீட்டுப் பசு)

**இரட்டித்து வேற்றுமை காட்டல் :**

தமிழ்ப் பெயர்ச் சொற்கள் வேற்றுமைத் தொகையில் வல்லினத்தில் இறும் சொற்கள் இரட்டிப்பைப் பெறுகின்றன.

காடு + பசு — காட்டுப் பசு.

ஈற்றில் அடுத்த சொல்லோடு இணைக்கும் பொழுது சொல்லழுத்தம் உண்டாகி இரட்டிக்கிறது.

வீடு + நாய் — வீட்டு நாய்.

கயிறு + ஊசல் — கயிற்றூசல்.

மருந்து + பை — மருத்துப் பை.

ஆறு + நீர் — ஆற்று நீா,

மரது + கிளை — மரத்துக் கிளை.

(மரம்—அம் ஈற்றுச் சொல். 'து' ஈற்றுச் சொல்லாக மரது என்ற சொல் பழைய வடிவமாக இருந்து இருக்கவேண்டும். அது கன்னட மரத என்ற சொல்லுக்கு நிகராக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது).

ஈற்று அழுத்தத்தாலும் சேர்த்து இசைத்தலாலும் ஈற்றில் பொதுவாக வல்லினம் மிகுதல் ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது.

மரம் + கிளை — மரக்கிளை.

பொன் + காசு — பொற்காசு.

**சாரியைகள் சொற்களின் ஈற்று நிலைகள் :**

மரது போன்ற சொற்கள் இரட்டிப்புப் பெற்றதால் மரத்து என்று ஆகியிருக்கவேண்டும் என்றும் அந்த மரத்து என்பதன் ஈற்று நிலையே அத்து என்ற சாரியையாகப் பிற்காலத்தில் கொள்ளப் பட்டிருக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

மேலும், குன்றம் என்ற சொல்லே குன்று என மருவி இருக்க வேண்டும். ஆலம், வேலம், புளியம் முதலிய மரப் பெயர்கள் ஆல், வேல், புளி என மருவி இருக்க வேண்டும். எனவே, அம் என்பதும் சொல்லீறுதல் காண்க. இவ்வாறே சாரியைகள் சொல்லீறுகளாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.[1]

'ஆ மா கோ ன அணையவும் பெறுமே' என்பர் நன்னூலார். ஆன், மான், கோன் பழைய வடிவங்களாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆன், இன், ஒன், 'இ', 'அ' முதலியவும் இவ்வாறே சொல்லீறுகளாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

**கூட்டு உருபுகள் :** ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகள் உடன் சேர்ந்து நிற்றல் உண்டு.

**வீட்டுக்குள்** — கு, உள் - என இரண்டு உருபுகள் உடனிற்றல் காண்க.

**ஊரிலிருந்து** — இல், இருந்து.

அவனதற்கு<br>வீட்டதற்கு } — அது, கு.

கண் என்ற வேற்றுமை உருபை கு + அண் எனப் பிரித்துக் காண்பர். *[2] அண் என்பது அவண், இரண்(டு) என்பவற்றில் உள்ள சொல்லாக்க உருபாம் என்பர்.

---

[1] A History of the Tamil Language T. P. M. Page 98.

[2] A History of the Tamil Language Page-102

# 7. பெயரடைகள்

(1) பெயர்களே நின்று அடையாக மற்ெறாரு பெயரைச் சிறப்பித்தல் உண்டு.

பொன் வளையல்

பொற் சிகரம்

காட்டுப் பசு

ஈற்று நிலைகள் இரட்டிப்பையோ வல்லினமாக மாறுவதோ இடத்திற்கேற்பப் பெறுகிறது.

(2) பண்பு அடிச் சொற்கள் நின்று அடையாக வருகின்றன.

நல்வழி; செம்பளவம்; நன்னூல்; பன்மலர்.

(3) அம் ஈற்றுச் சொற்கள் மகரம் கெட்டுப் புணர்கின்றன.

சுபம் + தினம் – சுபதினம்.

தெலுங்கில் அமு என்று இறுவனவும் இந்நியதியே பெறுகிறது.

(4) அம் ஈற்றுப் பெயர்கள் அடையாகும் பொழுது 'அத்து' என மாறுகிறது.

குளம் மீன் — குளத்து மீன்.

புறநகர் — புறத்து நகர்.

(5) மகர ஈற்றுப் பெயர்களோடு தமிழில் 'ஆன' என்ற துணைச் சொல்லும் அமு என்பதோடு தெலுங்கில் 'ஆயன' என்ற துணைச் சொல்லும் கன்னடத்தில் 'ஆத' என்ற துணைச் சொல்லும் பெற்றுப் பெயரெச்ச வடிவு பெறும்.

(6) கு, சு, டு, ண்டு, ம்பு, ந்து, து. று என்னும் ஈற்றுப் பெயர்கள் அடையாகுங்கால் வேற்றுமைத் தொகையாக வரும்பொழுது மெய்கள் இரட்டிப்பைப் பெறுகின்றன.

நாடு – நாட்டு வழக்கம்.

இரும்பு – கோல் — இருப்புக் கோல்.

மருந்து + பை — மருத்துப்பை.

எருது + பொதி — எருத்துப் பொதி.

குரங்கு + படை — குரக்குப் படை.

(7) பெயர்ச் சொற்கள் பெயரடையாகுங்கால் அத்து, இன், தமிழிலும் 'னி'யும், 'டி'யும் 'தி'யும் தெலுங்கிலும் சாரியைகளாக அமைதல் உண்டு.

(8) வினை அடிச் சொல்லை முதற்சொல்லாக அமைத்து வினைத்தொகையாகவும் கால உருபுகள் பெற்ற நிலையில் பெயரெச்சமாகவும் அமைந்து பெயரடைகள் நிலவும்.

உயர் மனிதன் — வினைத்தொகை.

உயர்ந்த மனிதன் — பெயரெச்சத் தொடர்.

(9) கீழ் என்ற பொருளில் 'கிந்த' என்ற தெலுங்குச் சொல் வழங்குகிறது. அதன் இறந்தகால வினையெச்சம் 'கிந்தி' என்பதாகும்.

கிந்தி இல்லு — கீழ் வீடு.

எனவே இறந்த கால இகர விகுதி சேர்ந்த வினையெச்ச வடிவு ஈண்டுப் பெயரடையாகி உள்ளது.

(10) அடிப்படை வேர்ச் சொற்களோடு காலக் கிளவி யல்லாத விகுதிகள் சேர்ந்து பெயரெச்சங்களாக அமைந்து பெயரடைகளாகும்.

பெரு – பெரிய பையன் — 'இய' சேர்ந்து.

சிறு – சிறிய பையன் — 'இய' சேர்ந்தது.

இய சேர்ந்த வழக்கே பெயரடை என்ற இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்துவதாகிறது என்பர் அறிஞர் கால்டுவெல். இதனைக் குறிப்புப் பெயரெச்சசம் என இலக்கண நூல்கள் கூறும்.

(11) அகர ஈற்றுப் பெயரெச்சமும் உம் ஈற்றுப் பெயரெச்சமும் பெயரடைகளாக அமைகின்றன. நிகழ்காலப் பெயரெச்சமாக 'செய்கிற' என்ற வாய்பாடும் உள்ளது.

செய்த பையன்.

செய்யும் வேலை.

செய்கிற வேலை.

(12) இய சேராமல் அகரம் சேர்ந்தே பல குறிப்புப் பெயரெச்சங்கள் அமைகின்றன.

நல்ல பையன்.

பெத்த பில்ல (பெரிய பெண்) தெலுங்கு.

இந்த அகரம் முழுப் பெயர்களோடும் இணைந்து பெயரடைகள் ஆகின்றன.

மலைய, அனைய, தீய

பெயரெச்ச அகரமும் ஆறன் உருபு அகரமும் நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பது பெறப்படுகிறது.

(13) பல், சில், என்ற அடிப்படை வேர்ச் சொற்களோடு அகரம் சேர்ந்து பல, சில என ஆகிப் பெயரடைகளாகியிருக்கின்றன.

(14) பெர் என்ற அடிச் சொல்லோடு 'உம்' சேர்ந்து காலம் உணர்த்தும் சொல்லாக அமையலாம். பண்பு அடிப் பெயராக அமைந்து பெயரடை ஆகின்றது.

'பெரும் புலவன்' இவ்வாறே மை கெட்டு ஒலிச் சூழ் நிலைக் கேற்ப மாறும் பண்புஅடிச் சொற்கள் பெயரடையாக வருதல் காண்க.

செம்பவளம்; செங்காந்தள்;

செஞ்சாந்து; வெற்றிலை; சேவடி.

(15) திராவிடச் சொற்கள் 'ஆகும்' அல்லது 'ஆதல்' என்பதன் மாற்று வடிவங்களைத் துணை உருபுகளாகப் பெற்றுப் பெயரடையாதல் உண்டு.

**தமிழ்** — ஆன்; ஆகும், உள்ள முதலியன.

**தெலுங்கு** — அடு, அயின முதலியன.

**கன்னடம்** — ஆத.

உயர்வான மனிதன்

உயர்வுள்ள பண்பு

## ஒப்புமை அடைகளும் உயர்வு அடைகளும்

(1) இல் அல்லது இன் என்ற உருபு பெறல்.

அவற்றில் இது நல்லது.

(2) 'இல்' ஒடு 'உம்' சேர்தல்.

மேலும் சிறப்பிக்க வேண்டுமானல் – 'இல்' என்பதோடு **'உம்'** சேர்தல் உண்டு

*அவற்றிலும் இது நல்லது.*

*(3) பார்க்க, காட்ட, விட முதலி வினையெச்சங்கள் அமைதல்.*

*அதைப் பார்க்கிலும் இது நல்லது.*

*அவனைக் காட்டிலும் இவன் நல்லவன்.*

*அவனை விட இவன் நல்லவன்.*

*(4) ஏகாரம் அல்லது தான் என்ற சொல் ஒப்பீட்டுப் பொருளில் வருதல் உண்டு.*

*இதுவே நல்லது; இதுதான் நல்லது.*

*(5) மிக, மிக்க. மிகவும் முதலிய மிகுதிப் பொருள் தரும் சொற்களை முன் வைத்தல்.*

*மிகநல்லது; மிகவும் நல்லது; மிக்க நல்லது.*

*(6) அடுக்கியும் வருதல் உண்டு.*

*மிக மிக நல்லது.*

*(7) உறழ்ச்சியைச் சிறப்பிக்க 'எல்லாம்' என்ற அடைமொழி ஒப்பிடப்படும் பெயருக்கு முன்னல் சேர்தல் உண்டு.*

*எல்லா விலங்குகளிலும் வேங்கை கொடிது.*

# 8. எண்ணுப் பெயர்கள்

தமிழ் எண்ணுப் பெயர்களின் அடிச்சொற்கள் தனித்து நிற்கும் பொழுது ஒருவகை வடிவும் அடையாகுங்கால் மற்றொரு வடிவும் பெறுகின்றன. அடையாகும் பொழுது குறுகிய வடிவும் தனித்து வரும்பொழுது நெடில் வடிவும் அமைகின்றன. சூழ்நிலை ஒட்டி வடிவங்கள் இவ்வாறு மாறி வருதல் மொழிகளின் இயற்கையாகும். மூவிடப் பெயர் களிலும் இரண்டு வடிவங்கள் சூழ்நிலைக் கேற்ப மாறி வருதல் காண்க.

யான்-என்; நீ-நின்; நாம்-நம், மூவிடப் பெயர்கள்.

ஆறு-அறுபது; ஏழு-எழுபது.

எனவே எண்ணுப் பெயர்களின் ஒப்பியலில் இவ்விருவகை வடிவங்களையும் உடன் சேர்த்தே ஒப்பிட வேண்டியுள்ளது. திராவிட மொழிகளுள் எண்ணுப் பெயர்களுள் ஒற்றுமை நிலவுகின்றன. இவற்றின் பழைய வடிவு யாதாக இருக்கும் என்று ஆராய்வது இயலாததாகின்றது. அது மொழி வரலாற்றியலின் பால் அமையும். எண்ணுப் பெயர்கள் மிகப் பழையன ஆகலில் அவற்றின் தோற்றத்தைக் காண்பது மிகவும் அரிய செயலாகும். எனினும் மாற்று வடிவங்களை ஒப்பிட்டுக் காண்பதால் எண்ணுப் பெயர்களின் பல்வேறு வடிவங்கள் நமக்குப் புலன் ஆகின்றன.

**தமிழ்** : ஒன்று என்பது எண்ணுப் பெயராகும். அஃது ஒண்ணு, ஒன்னு எனப் பேச்சு வழக்கில் திரிந்து வழங்குகிறது.

ஒரு; ஓர் என்பன அடையாகும் வடிவங்களாகும். பால் ஏற நிற்கும் அடிச் சொற்களும் இவையாம்; **ஒருவன்; ஒருவள்;**

**ஒருத்தி**; அடையாகுங்கால் 'ஒற்றை' என வருதலும் உண்டு. ஒவ்வொன்று, ஒன்பது என்பதில் ஒன் அடையாகும்.

**மலையாளம்** : ஒன்று என்பதன் திரிந்த வடிவமே ஒன்னு என எண்ணுப் பெயராக வழங்குகிறது. ஒரு ஓர் என்பனவே அடைப் பெயர்களாம்.

**தெலுங்கு** : 'ஒகடி' என்பது ஒன்றை உணர்த்துகிறது. அடையாகுங்கால் 'ஒக' என்பது அமைகிறது. பால் விகுதி ஏற்கும் வடிவும் இதுவேயாகும். ஒகடு (ஒருவன்)' ஒகதி (ஒருத்தி) ஒண்டு என்ற வடிவமும் உள்ளது. அடை 'ஒன்டி' என அமைகிறது. 'ஒன்டி வாடு'

**கன்னடம்** : ஒன்து;

தமிழ் ஒருவன் (கன்னடம் – ஓர்பனு; ஒப்பனு; ஒப்பளு) (ர் பகரமாகத் திரிந்தது).

ஒரு, ஓர், ஒன், ஒக என்பன திராவிட மொழிகளில் மாறி வரும் வடிவங்கள்—எனக் கூறலாம். எனவே ஒரு, ஓர், ஒன், ஒக, ஒள், ஒற் என்பன அடிச் சொற்களாம்.

ஒரு, ஒக என்பன எண்ணுப் பொருளில் அல்லாமல் வெறும் அடையாகவும் வழங்கப்படுகின்றன.

**இரண்டு** :

தமிழ்—இரண்டு; கன்னடம்—எரடு; தெலுங்கு—ரெண்டு மலையாளம்—ரெண்டு.

**அடைவடிவங்கள்** : தமிழ் — இர் — ஈர். கன்னடம், தெலுங்கு இர் என்பது; ஓரினமாதல் விதியின்படி இடத்திற்கு ஏற்றவாறு மாற்றம் பெற்றுள்ளது.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| இருவர் | இப்பரு | இத்தரு |
| இருபது | இப்பத்து | இரவை |
| இருநூறு | இந்நூறு | இந்நூறு. |

தமிழ் 'இரண்டு' என்பதில் 'அண்து' அண்—ஆக்க—விகுதி; து—ஏனைய எண்ணுப் பெயர்களுள் உள்ளது போல் ஒன்றன் பால் விகுதியாகும்.

எனவே இர் என்பது தெளிந்த அடிச் சொல்லாகும். இர், எர், ரெ என்பன இரண்டு என்னும் எண்ணின் அடிச் சொற்களாகக் கொள்ளலாம்.

'எரடு' என்பது இர் என்பதன் திரிபாகக் கொள்வர். இ எ ஆதல் இயல்பு.

தெலுங்கு 'ரெண்டு' என்பது ஒலியிடம் பெயர்தல் என்ற விதியின் படி அமைந்திருக்கலாம்.

தமிழ் பேச்சு வழக்கு 'ரெண்டு' என்பது தெலுங்கி லிருந்து வந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. உயிர் இடம் பெயர்தல் என்ற விதி தமிழுக்கு வருவதில்லை என்பர். அது தெலுங்குக்கே உரிய விதியாகும்.

மூன்று :

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு | மலையாளம் |
|---|---|---|---|
| மூன்று | மூறு | மூடு | மூன்னு |

**பெயரடைகள் :** மூ, மு என்பன மூன்று மனிதர் என நெடில் வடிவமும் அடையாக வந்துள்ளது.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| முப்பது | மூவர் | |

| | | |
|---|---|---|
| மும்மூன்று | மூவரு | முக்கரு |
| | மூவரு | |
| முப்பது | மூவத்து | முப்பை |
| முந்நூறு | முந்நூறு | முந்நூறு. |

மூன்று என்பதன் அடிச் சொற்களாக மூ, மு என்பவற்றைக் கொள்ளலாம். று, டு, னு, து, முதலியன ஆக்க விகுதிகளாம். 'ன்' என்பது றகரத்தை அடுத்து வரும் மெல்லொலி ஆகும்.

**நான்கு : எண்ணுப் பெயர்கள் :**

| **தமிழ்** | **கன்னடம்** | **தெலுங்கு** | **மலையாளம்** |
|---|---|---|---|
| நான்கு | | | |
| நாலு | நான்கு | நாலுகு | நால் |
| நான்கு | | | |

**பெயரடைகள் :**

தமிழ் — **நன்** ஞன்கு; நாற்பது (40).

தெலுங்கு — நன்னூறு; நலுபை (40).

**கன்னடம்** — நால்வத்து (40) நானூறு (400).

மலையாளம் — நால்பது.

எனவே நல், நால், நான், நாற் என்பன அடிச் சொற்களாகக் கொளல் தகும்.

நல் பழையதா நன் பழையதா என்று கூறவியலாது. தொல்காப்பியத்தில் இரண்டு அடிச்சொற்களும் கூறப்படுகின்றன.

**ஐந்து : எண்ணுப் பெயர்கள்**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாள |
| --- | --- | --- | --- |
| ஐந்து | அய்து | அய்து | அஞ்ஜ |
| அஞ்சு | ஏனு | | ஐந்து |
| அஞ்சி | | | |

பதஹேனு (15) என்னும் சொல்லும் தெலுங்கில் உள்ளது. எனவே 'ஏனு' என்ற சொல்லும் வழங்கல் காண்க.

**பெயரடைகள் :**

தமிழ் — ஐம்பது
கன்னடம் — ஐவத்து
தெலுங்கு — ஏபை; ஐந்நூறு

இரட்டிப்பில் ஐயைந்து எனவரும். எனவே ஐ, ஏ, ஐந், ஐம், ஏனு முதலியன அடிச்சொற்களாகக் கொளல் தகும்,

**ஆறு : எண்ணுப் பெயர்கள்**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
| --- | --- | --- | --- |
| ஆறு | ஆறு | ஆறு | ஆறு |

**பெயரடைகள் :**

| | | | |
| --- | --- | --- | --- |
| தமிழ் — | ஆறுபேர் | அறுவர் | அறுபது |
| தெலுங்கு — | | அறுகுரு | அறுவை |

அறு, ஆறு என்பன அடிச் சொற்களாம்.

**ஏழு : எண்ணுப் பெயர்கள் :**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
| --- | --- | --- | --- |
| ஏழு | ஏடு | ஏளு | ஏழு |

தமிழில் ழகரம் முறையே தெலுங்கில் டகரமாகவும், கன்னடத்தில் ளகரமாகவும் மாறும்.

**பெயர் அடைகள்:**

| | | |
|---|---|---|
| தமிழ் | — | எழுபது; எழுநூறு |
| தெலுங்கு | — | டெப்பை; ஏடுநூறு |
| கன்னடம் | — | எளுபது ஏள்நூறு<br>எப்பத்து |
| மலையாளம் | — | எழுபது எழுநூறு |

(எழுபை) எடுபை என்பது உயிர் ஒலி இடம் மாறி (metathesis) டெப்பை என ஆகியது.

எனவே எழு, ஏழ், டெ, ஏள், என்பன அடிச்சொற்களாகக் கொள்ளக் கிடக்கின்றன.

**எட்டு: எண்ணுப் பெயர்கள்:**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| எட்டு | எனிமிதி | எண்டு | எட்டு |

**பெயர் அடை:** எண்; என.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| எண்பது | என பை | எண்டுநூறு | எம்பது |

எனவே அடிச் சொற்கள் எண், ஏன், என்பனவாம். தமிழ் 'ண'கரம் தெலுங்கில் 'ன'கரமாக ஒலித்தல் மரபு (மண் - மன்னு, கண் - கன்னு).

**ஒன்பது: எண்ணுப் பெயர்கள்**

தெலுங்கில் 'எனிமிதி' என்பது கூட்டுச் சொல்லாகும். பது என்பதன் திரிபு மிதி என்று கருதுவர். அதேபோல 'ஒன்பது' என்பதும் கூட்டுச் சொல்லாகும். ஒன் + பது என அமைந்ததாகும்.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| ஒன்பது | தொம்மிதி | ஒப்பத்து | ஒம்பது |

தமிழ் : ஒன்பது, ஒன்பான் என்பன; தொண்டு என்ற பழைய வழக்கம் உள்ளது.

தெலுங்கில் தொம்ம நூறு (90) என்ற தொடரிலும் தொம் இருத்தல் காண்க.

எனவே கூட்டு அடிச் சொற்களே இவற்றின் அடிச் சொற்களாகக் கொளல் தகும். முதல் அடிச் சொற்கள் ஒன், தொம், ஒம், தொண் என்பனவாம்.

**பத்து : எண்ணுப் பெயர்கள்**

| **தமிழ்** | **தெலுங்கு** | **கன்னடம்** | **மலையாளம்** |
|---|---|---|---|
| பத்து | பதி | ஹத்து | பத்து |
| பது | மிதி | பத்து | |
| பான் | பை | | |
| | வை | | |

**பெயர் அடைகள் :**

| **தமிழ்** | **தெலுங்கு** | **கன்னடம்** | **மலையாளம்** |
|---|---|---|---|
| பத்துபேர் | பதிமந்தி | பன்னெரடு | பந்தரெண்டு |
| பன்னிரண்டு | பன்தொம்மீதி | | |

பத்து என்பதன் மாற்று வடிவமாகப் பஃது எனவும் வழங்குகிறது. அவ்+து — அஃது ஆதல் போல; பவ் + து— பஃது என ஆயிற்று. பல் + து — பஃது ஆயிற்று என்றும் கொள்ளலாம். பல் + துளி — பஃறுளி என ஆகும். அதே போல பல் + து — பஃறு என்றே ஆகும். எனவே பவ்து என பிரித்தல் இதைவிடச் சிறப்பாகும்.

பன், பத், மிதி, பான், பவ் (பஃ) அடிச் சொற்களாகக் கொள்ளலாம்

**நூறு :**

நீறு என்பதன் மாற்று வடிவமாகிய நூறு (துகள்) பல என்னும் பொருளில் இவ்வெண்ணுப் பெயர் வழங்குகிறது. 'வந்த' என்ற தனிச் சொல் தெலுங்கில் உள்ளது.

**ஆயிரம் :**

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| ஆயிரம் | வேலு<br>வெய்யி | சாவுர<br>சாவர | ஆயிரம் |

தெலுங்கிலேயே பழைய திராவிடச் சொற்கள் உள்ளன. சஹஸ்ரம் என்பதன் திரிபாக ஆயிரம் என்பதைக் கொள்வர்.

**தொண்ணூறு : தொள்ளாயிரம்**

தொண், தொள் என்பவை மாற்று வடிவங்களாம். ஒன்பது தொம்மிதி என்பதில் 'தொம் என்ற வடிவு காணப்படுகிறது. எனவே இவையும் கூட்டுச் சொற்களாம். முதற்சொல்லின் அடிச் சொற்கள் **தொண், தொள்** என்பனவாம். 'தொண்டு' என்பது ஒன்பதைக் குறித்த பழைய சொல்லாகும்.

**நன்னூலும் தொல்காப்பியமும் தரும் விளக்கங்கள்:**

எல்லாச் சொற்களுக்கும் வரலாற்றியல் கிடைத்துவிடும் என்று கூறுவதற்கு இல்லை. வரலாற்று உண்மை கிடைக்காததால் அறிஞர் கால்டுவெல் தொல்நூறு; தொள்ளாயிரம் எனப் பிரித்து நூற்றுக்கு முற்பட்டது, ஆயிரத்துக்கு முற்பட்டது என்ற கற்பனைக் காரணங்களைக் காட்டுவர்.

நன்னூலும் தொல்காப்பியமும் மொழிவிளக்க நூல்கள் (dcscriptive grammers) ஆகலின் மொழியியல் விளக்க விதியின்படி இவற்றை விளக்கி இருக்கின்றனர். இரண்டு மாற்று வடிவங்கள் மொழியில் வழங்கினால் ஒன்றை அடிப்படை வடிவமாகக் (Basic form) கொண்டு ஏனையதை அதன் மாற்று வடிவமாகக் காட்டுதல் மொழி விளக்க முறையாகும்.

**உதாரணம் :**

செம்மை — செம்.

வா — வந், வர், வார்.

செம்மை என்பதன் மை கெட்டு செம் ஆயிற்று என்பர். வா என்பது திரிந்து வார், வர், வந் ஆயிற்று என்பர். இது மொழி விளக்க இயல் முறையாகும். அதேபோல ஒன்பது பத்து என்ற வடிவும் தொண்ணூறு என்ற வடிவும் மொழியில் வழங்குகின்றன. ஒன்பது நூறு என்ற வடிவும் தொள்ளா யிரம் என்ற வடிவும் மொழியில் வழங்குகின்றன. ஒன்பது பத்து என்பதை அடிப்படை வடிவமாகக் கொண்டு தொண் ணூறு என்பதை அதன் மாற்று வடிவமாகக் கொண்டு தொண்ணூறு என்பதை அதன் மாற்று வடிவமாகக் காட்டுவர். ஒன்பது நூறு என்பதை அடிப்படை வடிவமாகக் கொண்டு தொள்ளாயிரம் என்பதை மாற்று வடிவமாகக் காட்டுவர். அதற்கு ஏற்பத் திரிபு விதிகளைக் கூறுவர். இந் நூல்கள் வரலாற்று இயலை விளக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

இவ்வெண்ணுப் பெயர்களுக்கு ஒப்பியல் வடிவங்களே ஈண்டுக் காட்டப்பட்டது. வரலாற்றியல் அறியத்தக்க அளவில் இன்னும் வரலாற்றுச் சான்றுகள் சரியாகக் கிடைக்கவில்லை எனக் கொள்ளல் பொருந்தும். அறிஞர் கால்டுவெல் சில காரணங்களை அடிச்சொற்களுக்குக் கூறுவர்.

ஒன்று, ஓர், ஒக என்பவை ஒன்றுபடுதல் என்னும் பொரு ளின என்றும், ஈர் - பிளத்தல் என்னும் பொருளினது என்றும், மூ—மூத்தல், வளர்தல் என்றும் நல் - மிகுதி என் னும் பொருளினது என்றும் கை என்பதன் திரிபு ஐ என்றும் அது புது வழி அறுத்துல் என்னும் பொருளினது என்றும் எழு எழுச்சி என்னும் பொருளினது என்றும், எண் - உயர்ந்த எண்

என்னும் பொருளினது என்றும், தொல் முந்தியது என்னும் பொருளினது என்றும் பல் என்னும் பொருளில் பண், பத்து வழங்கி இருக்க வேண்டும் என்றும் பலவாறாக விளக்குவர். இவை முழுவதும் பொருந்தும் என்று கூறுவதற்கு இல்லை. 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' என்னும் தொல்காப்பியர் கூற்று இவ்வெண்ணுப் பெயர்களின் அடிச் சொற்களுக்குப் பொருந்தும் எனக் கூறலாம்.

# 9. மூவிடப் பெயர்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூவிடப் பெயராகும், திராவிட மொழிகளுள் மூவிடப்பெயர்களுள் பெரிதும் ஒற்றுமை நிலவுகிறது.

யான் வந்தேன் — தன்மை

நீ வந்தாய் — முன்னிலை

தாம் வந்தார் — படர்க்கை

சுட்டுச் சொற்களும் படர்க்கையிடத்தில் வருகின்றன.

அவர் வந்தார் — படர்க்கை

எண்ணுப் பெயர்களுள் எழுவாய் வடிவும் பெயரடையும் இருவகை வடிவங்களாக நிலவுதல் போல மூவிடப் பெயர்களும் இவ்விருவகை வடிவங்களைப் பெற்றிருக்கின்றன.

யான் — என்

யாம் — எம்

நாம் — நம்

நீ — நின்

நீர் — நும்

தான், தாம் — தம்

ஏனைய திராவிட மொழிகளிலும் இவ்வாறு இருவகை வடிவங்கள் உள்ளன.

## தன்மை ஒருமை :

**தெலுங்கில்** ஏனு நேனு எழுவாய் வடிவங்களாகும். உருபு ஏற்கத் திரிந்த வடிவம் நா என்பது.

**கன்னடத்தில் ஆன் நான்** என்ற இரு வடிவங்கள் உள்ளன. உருபு ஏற்கத் திரிந்த வடிவம் **என் நன்** என்பன.

**மலையாளத்தில் ஞான்** என்பது எழுவாய் வடிவம்; உருபேற்கத் திரிந்த வடிவம் **என்** என்பது.

## தன்மைப் பன்மை :

**தெலுங்கு :** ஏமு, மனமு, மேமு — எழுவாய்த் தொடர்கள்.

மா, மம், மன — உருபு ஏற்கத் திரிந்த வடிவம்.

இவ்வாறே கன்னடத்திலும் மலையாளத்திலும் இருவகை வடிவங்கள் உள்ளன.

**முன்னிலை:**

முன்னிலையில் ஏனைய மொழிகளில் வழங்கும் வடிவங்கள்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| **தெலுங்கு** | நீவு; ஈவு; நின்; நீ | மீரு; மீரலு; மிம், மீ. |
| **கன்னடம்** | நீன்; நின் | நீம்; நீவு; நிம் |
| **மலையாளம்** | நீ; நின் | நீங்கள்; நீம். நிங்கள்; நீம் |

தான்; தன்; தாம் தம் என்பன எல்லா மொழிகளிலும் மிகுதியும் வேறுபாடு பெறாமல் வழங்குகின்றன.

மூவிடப் பெயர்களின் வினைமுற்றுக்கள் தனித்தனி விகுதிகள் பெற்று முடிகின்றன. மூவிடப் பெயர்களுள் தன்மை முன்னிலைப் பெயர்களின் ஈற்று நிலைகளும் வினை விகுதிகளாக அமைகின்றன.

யான் என்ற தன்மை ஒருமை வடிவம் மிகப்பழமை யானது; நான் பிற்காலத்தது என்பது விளங்குகிறது. தொல்காப்பியத்தில் யான் என்பது மட்டும் கூறப்படுகிறது. நான் நன்னூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மூவிடப் பெயர்களை ஒப்பிட்டு ஆராயும்பொழுது ன் ஒருமையையும் ம் பன்மையையும் உணர்த்துகின்றன என்பது அறிய முடிகிறது. மகரமேயன்றி ரகரமும் பன்மையை உணர்த்துகிறது.

## உளப்பாட்டுத் தன்மைப் பன்மை :

தன்மைப் பன்மையில் இரு வடிவங்கள் உள்ளன. யாம் என்பது முன்னிலையை உளப்படுத்தாது; நாம் என்பது உளப்படுத்தும். தெலுங்கிலும் மேமு, மனமு என இரு வடிவங்கள் உள்ளன.

**கள் ஈறு :**

இது பிற்காலத்தில் மூவிடப் பெயர்களோடு சேர்ந்து பன்மையும் மரியாதை ஒருமையையும் உணர்த்துகிறது. கள் ஈறு மலையாளத்தில் மிகுதியாக வழங்கப்படுகிறது.

## படர்க்கைப் பெயர் :

தான் தாம் என்பன படர்க்கைப் பெயர்களாகும். சுட்டுப் பெயர்கள் அவன் அவள் அவர் அது அவை இவன் இவள் இவர் இது இவை ஆகிய இவையும் படர்க்கைப் பெயர்களாக வருகின்றன. தான் தாம் என்பன முறையே ஒருமை பன்மை மட்டும் காட்டும். சுட்டுப் பெயர்கள் சிறப்புப் பால்களையும் அண்மையையும் சேய்மையையும் காட்டும். எனவே இவை செல்வாக்குப் பெற்று முன்னவற்றை வழக்கிழக்கும்படி செய்துவிட்டது.

தான் தாம் என்பன வெறும் துணை தற்சுட்டுப் பெயராக எல்லா இடங்களிலும் இடம்பெற ஆரம்பித்தன.

நான் தான் வந்தேன்.

நீர் தாம் வந்தீர்.

அவன் தான் வந்தான்.

சில இடங்களில் ஒருமை பன்மை வேறுபாடு இல்லாமல் வெறும் இடை சொல்லாகத் 'தான்' வழங்குகிறது.

செய்யத்தான் வந்தான்.
வரத்தான் சொன்னான்.

## படர்க்கைச் சொற்களின் முதல்நிலை :

யாய், ஞாய், தாய் இவை முறையே தன்மை, முன்னிலை படர்க்கைக்கு வருவன என்பர். தம்பி, தங்கை, தந்தை முதலிய சொற்கள் படர்க்கைச் சொற்களாக நின்று பிறகு உறவு உணர்த்தும் முழுச்சொற்களாக அமைந்துவிட்டன. இவை பிற்காலத்தில் எல்லா இடத்துக்கும் உரிய பொதுச் சொற்களாகிவிட்டன.

இம் மூவிடப் பெயர்களைக்கொண்டு உறவுப் பெயர்களைத் தமிழில் வழங்குகின்றனர். தம்பி, நம்பி, உம்பி, எம்பி என்ற சொற்கள் இவ்வாறு அமைந்தவையாம். இதன் அழகைக் கம்பர் தக்க இடத்தில் அமைத்து இவற்றின் நுட்ப அழகில் ஈடுபட்டவர்போலத் தருகின்றார்.

**தம்பி** என நினைந்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்
**நம்பி** இவன் தனைக் காணிற்கொல்லும் இறைநல்கானல்
**உம்பி**யைத்தான் உன்னைத்தான் அநுமனைத்தான்
ஒருபொழுதும்
**எம்பி** பிரியானைக அருளிதியான் வேண்டினேன்.
(கும்பகருணன் வதைப்படலம்)

# 10. சுட்டு விளுப்பெயர்கள்

சுட்டு அடிச்சொற்கள் அவ், இவ். உவ் என்பன. இவற்ரேடு பால் விகுதிகள் சேர்ந்து அவன் இவன் உவன் முதலிய பால் உணர்த்தும் சொற்கள் அமைந்துவிட்டன. அவ் சேய்மைச் சுட்டையும் இவ் அண்மைச் சுட்டையும் உவ் இடைநிலைச் சுட்டையும் உணர்த்தி வந்தன. இப்பொழுது உவ் வழக்கிழந்து விட்டது.

தொல்காப்பியர் காலத்தில் அ, இ, உ என மூன்றும் சுட்டு அடிச் சொற்களாகக் கருதப்பட்டன. இவற்ரேடு அவ், இவ், உவ் என்பனவும் வழக்கில் இருந்து வந்தன. இவ் விருவகை வடிவங்களும் மொழியில் இடப்பெற்றன. எது முந்திய வடிவம் என ஆராய்வது வரலாற்றியலாகும். அதற்குத் தக்க சான்றுகள் கிடைத்திலது.

அவ், இவ், உவ் என்ற சுட்டுக்களிலிருந்து பல சுட்டு அடைகள் மொழியில் இடம் பெற்றுள்ளன. அந்த, இந்த, இன்னே, இங்கு, இவண் முதலிய பலசொற்கள் அமைந்திருக்கின்றன.

## நெடில் வடிவங்கள் :

அ, இ, உ இவற்றை முதலாகக் கொண்டு அமைந்த குறில் வடிவங்களேயன்றி ஆ, ஈ என நெடில் வடிவங்களும் மொழியில் வழங்கி இருக்கின்றன.

ஆன், ஈன் என்ற சுட்டுக்களும் வழங்கி இருக்கின்றன.

இது—ஈது, இங்கு—ஈங்கு, அங்கு—ஆங்கு என நெடில் வடிவங்கள் வழங்கியுள்ளன.

பிற திராவிட மொழிகளிலும் நெடில் வடிவங்கள் சுட்டுக்களாய் வழங்குகின்றன. எவை முதன்மைய என்று கூறுவது எளிதல்ல.

குறில் வடிவங்களோடு ஆ, ஈ, ஊ ஆகிய இவற்றையும் சுட்டு அடிச்சொற்கள் என்று கூறல் பொருந்தும். எனவே எண்ணுப் பெயர் மூவிடப் பெயர்களில் காணப்படுவதைப் போலவே சுட்டுப் பெயர்களும் குறில் நெடில் ஆகிய இரு வகை வடிவங்கள் தாங்கிஇருக்கின்றன என்பதைஅறிகிறோம்.

## வினா :

யா; எவ்; எ என்பன மாற்று வடிவங்களாம். இவற்றை அடிச் சொல்லாகக் கொண்டு யாவன்; எது; எவை முதலிய வினாப் பெயர்கள் அமையக் காண்கிறோம். ஏனைய திராவிட மொழிகளும் இவற்றோடு தொடர்புடைய அடிச்சொற்களை வினா அடிச் சொற்களாகத் தாங்கியுள்ளன.

எகர அடிச் சொல்லைக் கொண்டு 'எவன்' என்ற வழக்கு அஃறிணை ஒருமையில் பழங்காலத்தில் வழங்கியுள்ளது; என்ன என்னும் பொருளினது.

## சுட்டு வினா ஒப்பியல் :

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| அது | அதி | அது | அது |
| அவன் | வாடு | அவம் | அவன் |
| அவள் | அதி | அவள் | அவள் |
| அவர் | வாரு | அவரு | அவர் |
| இவர் | வீரு | இவரு | இவர் |
| யாவன் | எவடு | ஆவரு | யாவன் |
| யாவர் | எவரு | ஆவர் | யாவர் |
| யார் | ஏரு | ஆர் | யார் |

# 11. வினைச்சொற்கள்

## சிறப்பியல்புகள் :

*(1) திராவிட அடிச் சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேர்ந்தால் பெயராகவும் காலக்கிளவிகள் சேர்ந்தால் வினையாகவும் அமைகின்றன. வேற்றுமை உருபுகள் ஏற்காமல் எழுவாயாக அமைவனவும் பெயர்ச் சொற்களாம்.*

*(2) பகுதி எப்பொழுதும் அடிச்சொற்களே என்று கூற இயலாது. ஆக்க விகுதிகள் (ஐ, கு, சு, று முதலியன அடிச் சொற்களோடு சேர்வதால் பகுதிகள் அமைகின்றன.)*

பெரு + கு — பெருகு.

நில் + ஐ — நிலை.

*(3) திராவிட வினைகள் ஒட்டு நிலையைச் சார்ந்தவை. அடிச் சொற்களில் எந்த மாற்றமும் விளைவிக்காமல் இலக்கண விகுதிகளைச்சேர்க்கலாம். எளிதில் பிரித்துக்காட்டலாம்.*

*(4) ஏவலில் வரும் பகுதிகள் பால் காலம் உணர்த்தும் விகுதிகள் பெறுவது இல்லை.*

நீ செல்,

*(5) காலங்கள் மூன்று எனப்பிரித்து அறியப்பட்டாலும் நிகழ்காலம் என ஒன்று தனியாக இருந்திருக்க முடியாது என்றும் இறப்பு (past), அஃதுஅல்லாத காலம் என்று இரண்டு பிரிவுகளே இருந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றன.*

*(6) வினைகள் எச்சமும் முற்றும் என இருவகைப்படுத்தி உணரப்படுகின்றன.*

செய்யும் என்பது முற்றாகவும் எச்சமாகவும் வந்தன.

அவன் செய்யும்

செய்யும் அவன்.

*(7)* குறிப்பு வினைகள் பெயர் வடிவம்பெற்று விளங்கின. **அவன் கரியன்** அதேபோல எதிர்மறை வினைகளும் ஒரு சில பெயரைப்போல் காலக்கிளவி இன்றி இயங்கும்.

அவன் வாரான்.

*(8)* வினைகள் பால்விகுதி பெற்றும் பெறாமலும் இயங்கின.

யான் செய்கு; யான் செய்வேன்.

அவன் செய்யும், அவன் செய்வான்.

*(9)* கால இடைநிலை பழந்தமிழில் தெளிவாகப் பிரித்து அறியக்கூடிய நிலையில் இல்லை. சங்க காலத்தில் 'த'கரமும் 'இ'கரமும் இறந்த காலத்தையும் 'க' கரம் நிகழ்வையும் எதிர்வையும் உணர்த்தின எனத்தெரிகிறது.

**(10) கால இடைநிலைகளோடு சாரியைகள்.**

கால இடைநிலைகளோடு சாரியைகளும் வினைச்சொல்லில் இடம் பெற்றன.

வந்தனன் — அன்.

செய்கின்றனன் — அன்.

**(11) நிகழ்கால இடைநிலைகள்.**

சங்ககாலத்தில் நிகழ்கால இடைநிலை என்று தனியாக இல்லை; செய்யும் என்ற வாய்பாடு நிகழ்காலத்தை உணர்த்தியது என்பர். கிறு, கின்று, ஆநின்று பிற்காலத்து வழக்குகளாம்.

*(12)* எதிர்கால இடைநிலைகள் வ, ப, க என்பனவாம். அவற்றுள் 'க'கரம் காலத்தால் முந்தியது.

(13) **இறந்த காலம் :** த் என்பதும் அதன் மாற்று வடிவமாகிய ட் ற் என்பனவும் இகர விகுதியும் இறந்த காலம் காட்டியிருக்கின்றன.

(14) **இயக்கு வினைகள் :** வி, பி சேர்ந்து இயக்கு வினைகள் அமைகின்றன. சேர்கிறேன்—தன்வினை. சேர்க்கிறேன்—பிறவினை. சேர்ப்பிக்கிறேன்—இயக்கு வினையாகும்.

## பாலும் காலமும் :

தன்மை ஒருமையில் வெறும் ஆக்க விகுதிகளே காலம் காட்டின.

செய்கு, உண்டு, சேறு முதலியன.

செய்வேன், உண்பேன். உண்டேன் பால் விகுதி சேர்ந்த வடிவங்களாம். இவ்வாறே மூவிடப் பெயர்களின் திரிந்த வடிவங்களும் ஈற்று நிலைகளும் வினையின் பால் விகுதிகளாக அமைந்துள்ளன. ன்—ஆண்பால், ள்—பெண்பால் (தெலுங்கில் இ) ரகரம் பொதுப் பலர்பால்—என உயர்திணையில் அமைந்துள்ளன. இவ்வாறே அஃறிணையில் 'து' (தமிழ்), 'தி' (தெலுங்கு)—ஒருமையிலும், அகர விகுதி பன்மையிலும் விகுதிகளாக அமைந்துள்ளன.

## காலம் உணர்த்தல் :

**பெயரெச்சம் :** ஆங்கிலத்தில் இணைப்பு இடப்பெயருக்கு மாறாகப் பெயரெச்சத் தொடர் இடம்பெறும். செயலடியாகப் பிறக்கும் எச்சத்தைத் தெரிநிலைப் பெயரெச்சம் என்றும் பண்பு அடியாகப் பிறக்கும் பெயரெச்சத்தைக் குறிப்புப் பெயரெச்சம் என்றும் வழங்குவர்.

The man who came — ஆங்கிலத் தொடர்.

வந்த மனிதன் — தமிழ்த் தொடர்.

செய்த பையன் — தெரிநிலைப் பெயரெச்சம்.

நல்ல பையன் — குறிப்புப் பெயரெச்சம்.

**தெரிநிலை வினை :** மூன்று காலத்தையும் காட்டும்' செய்த, செய்கிற, செய்யும் என்பன முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு இவற்றைக் காட்டும். செய்யும் என்பது நிகழ்வையும் உணர்த்தும்.

. **வினையெச்சம்** : குறிப்பு வினையெச்சம் என்ற பகுப்பு இல்லவே இல்லை. காலம் உணர்த்தும் செய்வினையே எச்சமாக நின்று வினையைக் கொண்டு முடியும்.

நன்ருகச் செய்தான். ஆக என்ற துணைவினை சேர்ந்தே பண்புச் சொல்வினைச் சொல்லோடு சேர்கிறது.

செய்து வந்தான் — செய்து (இறப்பு).
செய்ய வந்தான் — செய்ய (நிகழ்வு).
செய்வான் வந்தான் — செய்வான் (எதிர்வு).

வேறுசில வாய்பாடுகளும் இம் முக்காலம் உணர்த்தும். எச்சவினைகள் பால் ஈறுகள் பெறு.

## வினைச் சொற்கள் காலம் உணர்த்தல்

தமிழ் வினைகள் பொதுவாக இறப்பு இறப்பில் காலம் என இரண்டே உணர்த்துகின்றன எனலாம். நிகழ்வு வடிவங்களும் எதிர்வை உணர்த்தாமல் இல்லை. எதிர்வும் நிகழ்வை உணர்த்தாமல் இல்லை.

நான் வருகிறேன் (நிகழ்வு)
நாளை வருகிறேன் (எதிர்வு)

அதேபோலச் செய்யும் என்னும் வாய்பாடும் நிகழ்காலத்துக்கு உரியது என்று தொல்காப்பியர் சுட்டிக் கூறுவர். 'நிகழும் காலத்துச் செய்யும் என் கிளவி' என்பர். எனினும் அது எதிர்காலம் உணர்த்தாமல் இல்லை.

வரும் பையன் — நிகழ்வு
நாளைக்கு வரும் பையன் — எதிர்வு
செல்லும் யானை — நிகழ்வு
நாளைக்குச் செல்லும் யானை — எதிர்வு

எனினும் மிகுதி பற்றி இவற்றைக் குறிப்பிட்ட காலங் கட்கு உரிமைப்படுத்தி உணர்வர்.

## நிகழ்காலம் :

தமிழ் — கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகளாம்.

**மலையாளம் :** உன்னு அல்லது நின்னு என்பன நிகழ்கால இடைநிலைகளாம். இவை இன்று என்பதன் திரிபாகக் கருதுவர்.

**தெலுங்கு :** சு அல்லது து.

**கன்னடம் :** உத் அல்லது உதெ.

தெலுங்கு கன்னட உருபுகளாகிய சு, து, உத், உதெ முதலியன தமிழ் உருபுகளோடு வேறுபட்டவை என்று கருதுவர் அறிஞர் கால்டுவெல்.

கிறு, கின்று என்பவற்றின் தோற்றத்தை உணர்ந்தால் இவற்றில் உள்ள தொடர்பு புலப்படும்.

கின்று என்பது ஆகின்று (ஆகியது) என்னும் நிகழ்காலத்துக்கு உரியதாகிவிட்டது. ஆகு + இன் + து; என்பதுவே ஆகின்றது — கின்று என்பதாம். எனவே கிறு, கின்று என்பவற்றுள் உள்ள 'று', 'து' விகுதியின் மாற்றமே யாகும். எனவே, தெலுங்கு, கன்னட விகுதிகளோடு தமிழ் விகுதி தொடர்பு பெற்றிருக்கிறது என்று புலப்படுகிறது.

## இறந்தகாலம் :

**தமிழ் :** (1) 'த்' என்ற இடைநிலைதமிழில் இறந்தகாலம் காட்டும். செய்து — செய்தான் — த்.

(2) ட், ற் என்பன 'த'கரத்தின் மாற்று வடிவங்களாம். 'ண'கரத்து முன் 'ட'கரமும், 'ன'கரத்து முன் 'ற'கரமும் வருதல் காண்க.

உண் + த் + ஆன் — உண்டான்

தின் + த் + ஆன் — தின்றன்

(3) வினைவடிவங்கள் பகுதிகள் சில இரட்டிப்பைப் பெறுகின்றன. அவையும் 'த'கரத்தின் திரிபு என்பது உணரப்படும்

நக் + த் + ஆன் — நக்கான்

விட் + த் + ஆன் — விட்டான்

உற் + த் + ஆன் — உற்றன்

இவற்றைப் பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது என்பர்.

(4) 'இ'கரம் தமிழில் இறந்த கால விகுதியாகும்.

ஆடி — ஆடினன்; ஓடி — ஓடினன்

போய் (போ இ)! ஆகி (ஆக்கி)

நசைஇ; அசைஇ.

எனவே, தமிழில் 'த'கரம் அல்லது 'இகரம்' இறந்த காலம் உணர்த்துகிறது.

**மலையாளம் :** தமிழ் வடிவமே திரிந்து இறந்தகாலம் காட்டுகிறது.

நடந்து (தமிழ்) நடந்நு (மலையாளம்)

அவன் பாடி (தமிழ்) அவன்பாடி (மலையாளம்)

அது பாடி (தமிழ்) அதுபாடி (மலையாளம்)

'த'கரமும் 'இ'கரமும் மலையாளத்தில் இறந்தகால இடைநிலைகளாகும்.

**தெலுங்கு :** இகரமே இறந்தகால விகுதியாகும்.
சேஸிதினி (இகரம்); செய்தேன்.
பாடிதினி, ஆடிதினி, செப்பிதினி
(பாடினேன், ஆடினேன், சொன்னேன்)

சில இடங்களில் இகரம் கெடுதலும் உண்டு.
தின்னினுனு — தின்னுனு — தின்றேன்
வச்சினுனு — வச்சானு — வந்தேன்

**கன்னடம் :** 'த'கரம் இறந்தகாலம் காட்டியது.
இளிது (கன்னடம்) — இழிந்து (தமிழ்) — எச்சம்.
இளிதேனு (கன்னடம்) — இழிந்தேன் (தமிழ்) —முற்று.

'த'கரம் இறந்தகாலம் காட்டியது.

**'இ'கரம் இறந்தகாலம் காட்டல் :**
மாடிதெனு — செய்தேன் — இ
பாளிதனு — வாழ்ந்தான்.

எனவே திராவிட மொழிகளில் த், இ என்பன இறந்த கால இடைநிலை எனலாம்.

## எதிர்காலம் :

**தமிழ் :** உகரமும், ககரமும்.

தமிழில் செய்கு, செய்கும் என்பன எதிர்காலம் காட்டின. செய்கு - ஒருமை; செய்கும் - பன்மை. 'செய்குன்' என்ற வடிவமே செய்கு என மாறி இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதேபோலச் செய்யுன் செய்யும் என இரு வடிவங்கள் இருந்திருக்கவேண்டும், 'உன்' ஒருமையையும், உம் பன்மையையும் காட்டியிருக்க வேண்டும். ன கரம் ஒருமைக்கும், ம கரம் பன்மைக்கும் என ஒதுக்கிவிட்டால் உகரமே எதிர்கால இடைநிலை எனலாம்.

தெளிந்த பால் விகுதிகளாகிய 'ஏன்', 'ஏம்' என்பன சேர்ந்தும் 'செய்கேன்', 'செய்கேம்' என முற்றுக்கள் அமைந்தன. இவற்றைப் பிரித்தால் செய்கு+ஏன், செய்கு+ஏம் என அமைகின்றன. இவற்றைக்கொண்டு க கரம் எதிர்காலத்தை உணர்த்தியது என்று கூறும் நிலையில் உள்ளது. செய்கு, செய்கும் என்பவற்றையும் கொண்டு 'க'கரம் எதிர்காலம் உணர்த்தியது என்றும் கூற முடிகிறது.

செய்யும் என் எச்சமும் முற்றும் நிகழ்வையும் எதிர்வையும் உணர்த்தின. இதில் உகரமே எதிர்காலத்தை உணர்த்தியது.

**வ. ப:** செய்வான், உண்பான் என்னும் முற்றுக்களும் அவை எச்ச வடிவமாக இடம்பெறும்பொழுதும் 'வ'கரமும், 'ப'கரமும் எதிர்வு இடைநிலைகளாக அமைகின்றன.

செய்வான் — அவன் செய்வான் என்னும் பொருளில் வந்தது.

செய்வான் வந்தான் — செய்ய வந்தான் என்னும் பொருளினது.

உண்பான் வந்தான் — உண்ண வந்தான் என்னும் பொருளினது.

இரண்டாவது 'ஆன்' தன் பால் விகுதிப் பொருளை எச்ச வினையில் இழந்து நிற்கிறது.

வகரமும், பகரமும் மாற்று வடிவங்களாம். முன்வரும் ஒலிக்கேற்ப அவை மாறி அமையும்.

எனவே, தமிழில் வ, ப, க, உ என்பன எதிர்காலம் உணர்த்தும் இடைநிலைகள் எனலாம்.

**மலையாளம் :**

ஞான் எழுதும் (நான் எழுதுவேன்)
நீ எழுதும் (நீ எழுதுவாய்)
யான் வருகு (நான் வருவேன்)

உகரமே ஈண்டு எதிர்காலம் காட்டுகிறது. பால் ஈறு பெருத எச்ச வடிவே ஈண்டு முற்ருக அமைகிறது.

**தெலுங்கு** : உகரமே எதிர்காலம் காட்டும். ஒருமையில் உனு என்பதும், பன்மையில் 'உமு' என்பதும் விகுதிகளாக அமைகின்றன.

சேஸ்தனு — ஒருமை (செய்வேன்)
சேஸ்தமு — பன்மை (செய்வோம்)
சேஸ்துரு — பன்மை (செய்வார்)
சேசுனு — படர்க்கை ஒருமை (அது, அவள்)

எனவே உன், உம் எதிர்கால விகுதிகளாம். னகரமும் மகரமும் ஒருமை பன்மை விகுதிகளாகக் கொண்டால் உகரமே எதிர்காலம் காட்டியவாரும்.

**கன்னடம்**: வகரமே எதிர்காலத்தைக் காட்டும். இம் மொழியில் வகரம் நிலேபெற்றுள்ளது. அது பகரம் ஆவது இல்லே.

இருவது (கன்னடம்) — இருக்கும் (தமிழ்)
பாளுவ (கன்னடம்) — வாழும் (தமிழ்)

எனவே, திராவிட மொழிகளில் வகரம் அல்லது உகரம் எதிர்கால இடைநிலே எனக் கூறலாம்.

**அ இ உ** : செய என்னும் எச்சம் நிகழ்காலம் உணர்த்தும் என்பர். இவற்றை ஒப்ப நோக்கிஞல் அகரம் நிகழ்வையும், இகரம் இறப்பையும், உகரம் எதிர்வையும் உணர்த்தும் நுட்பம் அமைந்துள்ளது தெரிய வருகிறது.

**கூட்டு அமைப்பு** : ஒன்றுக்கு மேற்பட்ட காலம் சேர்ந்து கலவைக்காலம் உணர்த்தும் வினேகள் அவற்றிற்கு ஏற்ற வகையில் வினேயெச்ச வடிவங்களே முன்னும் இரு, நில், வரு, கொள் முதலிய பகுதியை உடைய வினேமுற்று வடிவங்களேப் பின்னும் அமைத்துக் கொள்கின்றன.

செய்திட்டான்; வந்திருந்தான்;
வாரா நின்ருன்; செய்துகொண்டிருப்பான்.

# 12. வினைவகைகள்

## தன்வினை பிறவினைகள்

தன் வினை என்பது தான் தனக்கே செய்துகொள்ளும் வினையாகும்.

எழுதுவேன் — தன்வினை.

மற்ருெருவனைக் கொண்டு செய்தால் அது பிறவினை ஆகும்.

எழுதுவிப்பேன் — பிறவினை.

### 1. பகுதி இரட்டிப்பதால் பிற வினையாதல் :

அடங்கு (தன்வினை) — அடக்கு (பிறவினை)

மடங்கு (தன்வினை) — மடக்கு (பிறவினை)

எனவே மெல்லிய வடிவம் தன் வினையாகவும் வல்லிய வடிவம் பிறவினையாகவும் அமைகின்றன. இது பகுதி. இரட்டிப்பு.

### 2. இடைநிலை இரட்டிப்பதால் பிறவினையாதல்:

சேர்ந்தான் — சேர்த்தான் (இறப்பு)

சேர்கிறுன் — சேர்க்கிறுன் (நிகழ்வு)

சேர்வான் — சேர்ப்பான் (எதிர்வு)

### 3. வி, பி சேர்தல் :

பகுதியோடு வி அல்லது பி ; அல்லது வி, பி இரண்டும் சேர்ந்து பிறவினை ஆகின்றன.

அறி, அறிவி ; உண்பி — உண்பிப்பாய்.

அறிவிப்பி

இந்த இகரம் வி எனவும் பி எனவும் இடம் நோக்கி மாறியுள்ளது.

கன்னடத்திலும் தெலுங்கிலும் முறையே இசு, இஞ்சு என்னும் பிறவினை விகுதிகள் உள்ளன. வி. பி. என்பதிலும் இகரம் அடிப்படை எனத் தெரிகிறது. எனவே இகரம் பிற வினைக்கும் இயக் வினைக்கும் துணை செய்யும் விகுதி எனலாம்.

**தன் வினை — பிறவினை**

செய் — சேயிஞ்சு — சேயிபிஞ்சு.

பண், செய், சொல் முதலிய துணைவினைகள் சேர்ந்து பிறவினைகளும் இயக்கு வினைகளும் அமையும்,

உறங்கச்செய் ; செய்யச் சொல் ; உறங்கப் பண்ணு.

## வினைப் பொருள்கள் : (moods)

வினைகளை அவை உணர்த்தும்பொருளுக் கேற்ப அவற்றை வகைப்படுத்திக் காண்பர். ஏவல், வியங்கோள், நிபந்தனைப் பொருள் முதலிய பொருளமைப்புகளைப் பெற்று வரும். அப் பொருள்களுக்கேற்ப வினை வடிவத்திலும் சிற்சில மாறுதல் களைப் பெறும்.

(1) **வினை நிலையுரைத்தல்** (Indicative mood). செயல் இன்னது என்று தெரிவிப்பது. ஆ **உண்டு** ; அவன் **கரியன்** முதலியன.

(2) **ஏவற்பொருள்** : (Imperative mood) நட, வா, மடி, சீ முதலியன ஏவல் வினைகளாம். ஆய், இ, ஐ முதலிய விகுதிகளும் சேர்தல் உண்டு.

கேளாய் தோழி (ஆய்)

போதி (இ)

வந்தை (ஐ)

## வியங்கோட் பொருள் : (optative mood)

நீ செய்க ; நீ வாழ்க ; வாழிய ; இய, இயர், க. முதலிய விகுதிகள் சேர்ந்து அமைவது; தற்காலத்தில் இது எல்லா இடங்களுக்கும் வரும்.

## நிபந்தனை வினை : (Conditional mood)

வந்தால் தருவேன்.

வரின் தருவேன்.

ஆல் இன் முதலியவை நிபந்தனைப் பொருளைத் தருகின்றன.

## செயல் எஞ்சுவினை : (The infinitive mood)

வரச் சொன்னான் ; போகச் சொன்னான் இவ்வாறு மற்றொரு வினையைக் கொண்டு முடிவன இவ்வகையைச் சாரும்.

மழை பெய்ய நெல் விளையும்

நெல் விளைய மழை பெய்யும்

கோழி கூவப் பொழுது விடிந்தது

முதலியன இவ்வகையைச் சாரும்.

## குறிப்பு வினையும் தெரிநிலை வினையும் :

பண்பு அடிச் சொல்லாகவும் பெயர் அடிச் சொல்லாகவும் நின்று பால் ஈறுகள் பெற்ற வடிவங்கள் தொடர்நிலையில் பயனிலையாக வருகின்றன. இவற்றைக் குறிப்பு வினை என்பர். செயல் வினைப் பகுதியினின்று தோன்றும் காலம் தெளிவாகக் காட்டும் வடிவங்களைத் தெரிநிலை வினை என்பர்.

## குறிப்பு வினை :

அவன் கரியன் (பண்பு அடி).

அவன் மலையன் (பெயர் அடி).

## தெரிநிலை வினை :

அவன் வருகிறான் (சொல் அடி).

## எதிர்மறை வினை :

அ, ஆ, அல், இல்

இவ் உருபுகள் இடையில் புகுந்து எதிர்மறையைத் தருகின்றன. அல், இல் என்பன அன்மைச் சொற்களின் பகுதிகளாம்.

வாரான் — ஆ
செய்யலன் — அல்
வந்திலன் — இல்

வாரான் — வார் + அ + அன் எனப் பிரிக்கலாம். தெலுங்கிலும் அகரம் எதிர்மறை உணர்த்தல் காண்க.

சேயனு — சே + அ + அனு (தெலுங்கு)
செய்யேன் — செய் + யேன் + யேன் (தமிழ்)
செயலேது — செய + லேது + (செய்யவில்லை)

## செயப்பாட்டு வினை :

(1) ஆயிற்று, போயிற்று முதலிய துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகள் அமைகின்றன.

வேலை வந்து ஆயிற்று ; வீடு கட்டி ஆயிற்று.

(2) அது என்னால் உடைந்தது. ஆல் உருபு சேர்ந்து செயப்பாட்டு அமைப்பு உண்டாகின்றது. இது மிகவும் அருகிய வழக்காகும்.

(3) கொலையுண்டான், அடியுண்டான், அடிபட்டான், உதைப்பட்டான்.

உண்டு, படு முதலிய துணை உருபுகள் சேர்வதால் செயப்பாட்டு வினை அமைக்க முடிகிறது.

(4) பொதுவாகச் செயப்பாட்டு வினைகளை விலக்கி அமைத்தல் தமிழ் வாக்கிய மரபாகும்.

எழுதின நூல் வேண்டும்.
(எழுதப்பட்ட என்று வரவில்லை).

இது நான் எழுதியது.
(என்றால் எழுதப்பட்டது)

நான் இதைப் படித்தேன்.
(என்றால் இது படிக்கப்பட்டது).

இதைப் போன்ற தொடர்கள் அவ்வளவாக வருவதில்லை.

## இரட்டைக் கிளவி :

ஓசை பற்றியும் குறிப்புப் பற்றியும் பண்பு பற்றியும் தோன்றும் - அடிச்சொற்கள் சேர்ந்து இணைவதால் புதுப் பகுதி உண்டாகி இரட்டைக் கிளவி என அமைகிறது.

சல சலப்பு — ஓசைபற்றி அமைதல்.
பரபரப்பு — குறிப்புப் பற்றி அமைதல்.
பசபசப்பு — பண்பு பற்றியது.

## வினையடியாகப் பிறக்கும் பெயர்கள் :

(1) **தொழிற் பெயர் :** பகுதியோடு அல், தல், கை மை முதலிய விகுதிகள் சேர்ந்து தமிழில் தொழிற் பெயர் அமைகிறது.

(2) **வினையாலணையும்** பெயர் : தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் வேற்றுமை உருபு ஏற்றும் எழுவாயாக வந்தும் பெயர்த் தன்மையைப் பெறும். இதனை வினையாலணையும் பெயர் என்பர்.

(3) **வினையடிக் காரணப் பெயர் :** இகர விகுதி சேர்ந்து வினையடியாகக் காரணம் பற்றிச் சில பெயர்கள் அமைகின்றன.

மண் வெட்டி

மீன் கொத்தி

நகரம் அல்லது ஞகரம் இடைநிலையாக அமைந்து சில பெயர்கள் அமையும்.

பொருநன் ; ஓட்டுநர் ; அறிஞர் ; வறிஞர்.

(4) **வினையடி ஆக்கப் பெயர்கள் :** வினையடிகள் வல்லொலி இரட்டிப்பதாலும் முதல் நீள்வதாலும் ஆக்க விகுதிகள் சேர்வதால் ஆக்கப் பெயர்கள் அமைகின்றன.

எழுது — எழுத்து

மின் — மீன்

பண் — பாண் ;

இரு+பு — இருப்பு ;

அறி+வு — அறிவு,

# 13. தொடரியல்

திராவிட மொழிகள் வடமொழிகளோடு தொடர்நிலையில் பெரிதும் வேறுபட்டு உள்ளது. திராவிட மொழிகளின் வாக்கிய நிலை அடிப்படையில் வேறுபடுகின்றது.

(1) எழுவாய், செயப்படு பொருள், பயனிலை - இது தமிழ் வாக்கியம்; முதலில் எழுவாயும் அடுத்துச் செயப்படு பொருளும். இறுதியில் பயனிலையும் கொள்கிறது.

பொன்னன் மாடு வாங்கினான்.

ஆங்கில வாக்கியம் செயப்படுபொருள் இறுதியில் கொள்ளும். வடமொழியும் இதே அமைப்பைக் கொண்டதாகும்.

Ponnan bought a cow.

செய்யுளில் முறை மாறி வருதலும் உண்டு.

கண்டனன் கற்பினுக்கு அணியை.

(2) அடைக்கும் பெயருக்கும் வடமொழியில் பால், எண், இயைபு எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்தி வாக்கியத்தில் காணப்படும்.

அச்சா லட்கா — நல்ல பையன்.

அச்சி லட்கி — நல்ல பெண்.

அச்சே லட்கே — நல்ல பையன்கள்.

பெயர் அடைக்கும் பெயருக்கும் பால் ஈறுகள் ஒத்து இயங்குகின்றன.

தமிழ் வாக்கியத்தில் இந்நிலை இல்லை.

நல்ல பையன், நல்ல பெண், நல்ல மாடு.

(3) ஆங்கில மொழியில் படர்க்கை ஆண்பாலில் மட்டும் பால் இயைபு எதிர்பார்க்கப்படுகிறது.

**He comes.**

ஏனைய இடங்களில் எழுவாயும் பயனிலையும் ஒரே பால் முடிபு பெறவேண்டும் என்ற நியதி இல்லை. பழங்காலத்தில் இந்நியதி இருந்திருக்கலாம் என்பர்.

**Thou comest, He comes.** போன்ற தொடர்கள் அறிவிக்கின்றன.

முன்னிலையில் பெயரிலும் ஒருமை பன்மை வேறுபாடு ஆங்கிலத்தில் மறைந்துவிட்டது. 'you' என்பதே ஒருமைக்கும் பன்மைக்கும் வழங்குகிறது.

தமிழில் வேறு இல்லை. உண்டு, அல்ல என்பன பால், எண், வேறுபாடு கடந்த நிலையில் எல்லாப் பெயர்களுக்கும் பயனிலையாக வழங்குகிறது.

(4) பழந்தமிழில் வினை முன்னும் பெயர் பின்னும் வழங்கப்பட்டன என்று கருதப்படுகிறது.

செய்யும் பொன்னன்—இது முற்று வாக்கியமாக இருந்திருக்க வேண்டும்.

வந்து பொன்னன்.

செய்கு யான்.

'வந்து அவன்'

என்பது 'வந்தான்' என்று ஆகி மீண்டும் ஒரு எழுவாயைப் பெற்று 'அவன் வந்தான்' என்ற புதிய வாக்கியம் மொழியில் இடம் பெறலாயிற்று.

(5) மலையாளத்தில் அவன் வந்நு (வந்து) என்பதே முற்று வாக்கியம். பால் ஈறு பெறாத வினைமுற்றுக்களே மலையாளத்தில் வழங்குகின்றன.

(6) வினையெச்சங்கள் என்று கூறப்படுபவை ஒருகாலத்தில் முற்றுகளாக இருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

**வந்து** செய்தான் — எச்சம்.

(7) செய்யும் பொன்னன் என்னும் முற்றுத் தொடர் 'செய்யும் பொன்னன் வந்தான்' என்று மீண்டும் மற்றொரு வினையைக் கொண்டு முடியும்பொழுது அது பெயரெச்சம் என்ற நிலையைப் பெற்றுவிட்டது.

(8) **வான், பான்** என்ற வடிவங்கள் முற்றுக்களாக இருந்தவை எச்சங்களாக மாறியிருக்க வேண்டும்.

அவன் செய்வான் — முற்று.

செய்வான் வந்தான் — எச்சம்.

எச்ச வடிவம் பால்திணை காட்டாது.

(9) அடை, சினை, முதல் என்ற முறையே தமிழ்ப்பண்பு கொள் பெயரில் தொடர்நிலை அமைப்பாகும்.

செங்கால் நாரை.

கருங்கைக் கொல்லன்.

செய்யுளில் முறை மாறலும் உண்டு.

கால் செந்நாரை.

(10) சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வழங்கல் தமிழ் மரபாகும்.

ஆசிரியர் சாத்தனார்.

(11) தமிழ் வாக்கியங்களில் பால் எண் திணை எழுவாய்க்கும் பயனிலைக்கும் இயைபு (concord) பெரிதும் வேண்டப்படுகிறது.

அவன் வந்தான்.

அவள் வந்தாள்.

அது வந்தது.

(12) தமிழ்த் தொடர்கள் வேற்றுமை அவ்வழி என்ற அடிப்படையில் இயங்குவனவாகும். வேற்றுமை* உருபுகள் வெளிப்பட்டு நிற்கும் இரண்டு முதல் ஏழு வேற்றுமைகளை வேற்றுமைத் தொடர் என்பர். ஏனைய பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத் தொகை, உவமத் தொகை முதலியவற்றை அன்மொழித் தொடர் என்பர்.

(13) ஒரு சொல் மற்றொரு சொல்லைத் தழுவி நிற்கும். அவ்வாறு தழுவும் நிலையில் பெயரெச்சம் பெயரையும் வினையெச்சம் வினையையும் தழுவி நிற்கும். முற்றுக்களும் சில சமயம் எச்சங்களாக மாறி அடுத்த வினையைத் தழுவி நிற்கும்.

(14) ஒரே சொல் மீண்டும் விரைவுபற்றியும் உணர்ச்சி பற்றியும் வந்தால் அதனை அடுக்குத் தொடர் என்பர்.

பாம்பு பாம்பு, தீ தீ, ஓடினாள் ஓடினாள்.

(15) வடமொழியில் முந்து நிலைகள் (Prepositions) வரும், திராவிட மொழிகளில் பிந்துநிலைகள் (Post positions) சொற்களைச் சிறப்பித்து இலக்கணப் பொருள் தரும்.

on the table —ஆங்கில வாக்கியம்.

மேசையின் மேல் —தமிழ் வாக்கியம்.

இது திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும்.

(16) ஆங்கிலத்தில் இணைப்பு இடப்பெயர் வந்து இரண்டு வாக்கியங்களை இணைக்கும்.

This is the man who came.

பெயரெச்சத் தொடரும் வினையாலணையும் பெயரும் அமைதல் தமிழ்த் தொடரியல்பாகும்.

வந்த மனிதன் போனான்.

வந்தவன் போனான்.

(17) ஆங்கிலத்தில் and என்னும் இணைப்பு விகுதி சேர்த்து இரண்டு வாக்கியங்கள் இணைக்கப்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் வினையெச்ச முடிபுகளால் ஒன்றை ஒன்று தொடர்கின்றன.

அவன் கண்டு, பார்த்து, ஓடிவந்தான் —
இது தமிழ் வாக்கியம்.

(18) தெரிநிலைவினை, குறிப்பு வினை என்ற பாகுபாடு திராவிட மொழியின் சிறப்பியல்பாகும். செயல்வினைப் பகுதியினின்று தெரிநிலை வினையும் பண்பு பெயர்க்குறிப்பு ஆகிய பகுதிகளினின்று குறிப்பு வினையும் அமைகின்றன. இந்த இலக்கணம் ஐரோப்பிய மொழிகளில் இல்லை.

(19) பயனிலையாக வினைமட்டும் வரும் என்ற நியதி தமிழில் இல்லை. எது வேண்டுமாயினும் பயனிலையாக அமையலாம்.

அது வீடு (பெயர்)
அவன் நல்லவன் (குறிப்பு வினை)
அவன் வந்தான் (தெரிநிலை வினை)
அவன் யார் (வினா).

(20) ஐய முடிபுகளில் விரவுச் செய்திகளும் முடிபுகளும் பொதுமையும் மிகுதியும் கொண்ட வினை அமைகின்றன;

ஆணோ பெண்ணோ வருபவர்.
குற்றியோ மகனோ தோன்றும் உருவம்.
சோறும் கறியும் அயின்றார்.
உடையும் வளையலும் முடியும் அணிந்தாள்.

(21) வாக்கியங்கள் செப்பு, வினா என இருவகைப்படும். யார்? எது; முதலிய வினாப்பெயர்களும் ஆ, ஓ முதலிய

ஈற்று இடைநிலைகளும் அமைவதால் வினை வாக்கியம் அமைகிறது.

(22) ஐய வாக்கியங்கள் இடைச்சொற்கள் பெற்று அமைகின்றன.

அணங்கு கொல் ஆய்மயில் கொல்

அவனோ இவனோ தெரியவில்லை.

(23) 'அல்லது' என்று அமையும் தொடர் ஆங்கிலத்தை ஒட்டி அமைந்த தொடராகும்.

சோறோ கறியோ உண்டான் என்பது பழைய வாக்கியம்.

சோறு அல்லது கறி உண்டான் என்பது புதிய தொடர்.

(24) வடமொழி அமைப்பு நேரே பலவாறாக வடமொழிக் கவிதைகளைப் பின்பற்றி அமைந்த தமிழ்க் காப்பியங்கள் வழியாகப் புகுந்திருக்கின்றன. ஆங்கிலத் தொடர்பாலும் பல வடமொழி அமைப்பு மொழியில் இடம் பெற்றுள்ளது.

பரக்கழி இதுநீ பூண்டால் புகழையார்
பரிக்கற் பாலர்—கம்பர்-கிட்கிந்தை வாலிவதை 79.

இது வடமொழி வாக்கியம். செயப்படுபொருள் முதல் நிலையில் வந்துள்ளது.

''இச் சூத்திரம் எழுத்தினது இலக்கணம் சொல்லுதல் நுதலிற்று என்ற வாறும்''

''முதல் இடைகடை நிலை எழுத்துக்கள் சிறப்பியல்பு கொண்டவையாம் என்க. இவையெல்லாம் தமிழ் முடிபுகள் என்று கூறுவதற்கு இல்லை. வடமொழி ஒட்டி அமைந்த முடிபுகள் எனத்தகும்.''

எவன் படிக்கிறானோ அவன் வெற்றியடைவான்.
—இது வடமொழி அமைப்பு.

குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இச் செயப்பாட்டு வாக்கியம் வடமொழி அமைப்பை உடையது. ஆங்கில வழியமைப்பாக இது உள்ளது.

(25) இடைச் சொற்கள் தேற்றம், பிரிநிலை, முற்று, எச்சம், ஒழிபிசை முதலிய பொருள்களைத் தொடர்நிலையில் உண்டாக்குகின்றன.

யானே கள்வன் —பிரிநிலை.

அதுவே உண்மை —தேற்றம்.

மூவரும் வந்தார் —முற்று.

சாப்பிடவும் செய்தான்.

பேசவும் செய்தான் —ஒழியிசை.

அமைச்சரும் வந்தார்.—ஒழியிசை.

ஏனையோரும் வந்தார் என்னும் பொருள் தருகின்றது.

(26) **ஆற்றொழுக்கும் கொண்டுகூட்டும் :** ஆற்றொழுக்காகப் பொருள் கூட்டி முடித்தல் தமிழ் வாக்கியத் தொடர் அமைப்பு நிலையாகும். இங்கு இடம் நோக்கியே எழுவாய் பயனிலை செயப்படு பொருள் மற்றும் எச்சங்கள் உணரப் படும். வடமொழியில் உருபுகள் நோக்கியே இவை உணரப் படும். அதனால் அவை எங்கு இருந்தாலும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளப்படும். இது வடமொழியின் நியதி யாகும்.

சுரை ஆழ அம்மி மிதப்ப — மொழிமாற்று.

சுரை மிதப்ப அம்மி ஆழ — ஆற்றொழுக்கு.

பொதுவாகக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் வடமொழியில் மிகுதி என்பர்.

# 14. பின்னிணைப்பு

## வரலாற்று இயல் கட்டுரைகள்

## 1. மொழியின் வரலாறு—அறிமுகம் :

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாகும். திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையும், இலக்கிய வளமும், சொல் வளமும், இலக்கண வளமும் பெற்ற மொழி தமிழ் மொழியாகும்.

இந்த நாட்டு மக்கள் தமிழைத் தவிர வேறு மொழியைப் பேசியது இல்லை. எனவே, தமிழ் மக்கள் பேசத் தொடங்கியது முதல் இந்த மொழியைத்தான் பேசியிருக்க வேண்டும். ஆனால், இதே வடிவத்தில் அப்பண்டைய மொழி இருந்திருக்க முடியும் என்று கூற இயலாது. தமிழ் மக்களின் வரலாறு ஒரு குறிப்பிட்ட காலம் முதலே அறியப்படுமாறுபோல மொழி வரலாறும் ஒரு குறிப்பிட்ட காலம் முதலே அறியப் படுகிறது. காலந்தோறும் புதிய மாறுதல்களைப் பெற்று மொழி வளர்ச்சி பெற்று வருகிறது. அம்மாறுதல்களையும், வளர்ச்சியையும் அறிவதே மொழி வரலாறு ஆகும்.

தமிழ்மொழி தனித்து இயங்கிப் பிறமொழித் தாக்குதல் கள் மிகுதியாகப் பெறுமல் இயங்கி வந்துள்ளது. ஏனைய திராவிட மொழிகள் மிக வேகமாக வடமொழியோடு இணைந்து மாறிவிட்டன. மலையாளம் தமிழ்ப் பேச்சு மொழியையே இலக்கிய மொழியாக்கிக் கொண்டது. அது அந்த அளவில் தனித்துப் பிரிந்ததும் அதுவும் வடமொழி யோடு தொடர்பு கொண்டு புதிய போக்கில் இயங்கிவிட்டது.

தமிழ் ஒன்று மட்டும் இலக்கிய வளமும், தனித்து வளரும் போக்கும் உடைமையால் தன்னியல்பால் தனிச்செம் மொழியாக வளர்ந்து தனக்கு என ஒரு தனி வரலாற்றைத் தேடிக்கொண்டது.

இக்கருத்து பற்றி வி. கோ. சூரியநாராயண சாத்திரியர் தரும் செய்திகள் பின்வருமாறு:

''இவ்வழி மொழிகளிலே தெலுங்குதான் வட மொழியோடு மிகவும் கலந்து விசேடமான திருத்தப்பாடடைந்தது. தனது நெடுங்கணக்கையே திருத்தி விரித்துக்கொண்டது. பல்லாயிரஞ் சொற்களையும் மேற்கொண்டது. வடசொல் இலக்கணத்தையும் மிகத் தழுவிக்கொண்டது. தெலுங்கிலக்கணமெல்லாம் தமிழ்ப் போக்கில் இயங்க வேண்டியிருக்க அதைவிடுத்து வடமொழிப் போக்கை அனுசரிக்கப் புகுந்தன. புகுதலும் வடமொழியிலே தெலுங்கிலக்கணம் அமைவதாயிற்று. இஃது இடைக்காலத்திலிருந்த நன்னயப் பட்டராதிய பிராமண வையாகரணர்கள் செய்த தவறு.''

''இவ்வாறே கன்னடமும் தெலுங்கையொட்டிப் பெரிதும் இயங்கினமையால் அதுபோலவே பல்லாற்றானும் தன்னைச் சீர்படுத்திக்கொண்டது. இதனாலன்றோ 'பழங் கன்னடம்' என்றும், 'புதுக் கன்னடம்' என்றும் அ...து இருவேறு பிரிவினதாகி இயங்குகின்றது. பழங்கன்னடத்தைத் தமிழினின்றும் பிறந்ததெனக் கூறும் கன்னடப் புலவர் இன்றுமுளர்.''

''இனி மலையாளமோ வெகுநாள் காறும் திருந்தா திருந்தது. இறுதியில் ஏறக்குறைய முன்னூற்றியாண்டுகட்கு முன்னர் 'எழுத்தச்சன்' என்பானொருவனால் மிக்க திருத்தப் பாடு அடைந்தது. உடனே வடமொழிச் சொற்றொடர்களையும், சந்திகளையும், முடிபுகளையும் மலையாளம் மேற் கொண்டது.

எனவே, வி. கோ. சூ. அவர்களின் கருத்துக்கள் தமிழின் தனிப் போக்கையும், வடமொழிகளின் இலக்கணத்தைத் தழுவி மாறிய ஏனைய மொழிகளின் நிலையையும் நன்கு வற்புறுத்திக் கூறுகின்றன. எனினும், தமிழ் மொழியிலும் வடமொழித் தாக்குதலும், பிறமொழித் தாக்குதலும் ஓரளவு புகாமல் இல்லை எனலாம். வடமொழிக்கலப்பு தமிழ்மொழியின் வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

ஒரு மொழியின் வரலாறு என்று எடுத்துக்கொண்டால் பிறமொழிக் கலப்பு ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது என்பது கூறத் தேவையில்லை. ஒரு மொழியின் மாறுதல்கள் என்று எடுத்துக்கொண்டால் காலந்தோறும் ஏற்பட்ட ஒலி மாறுதல்கள்; சொல்லிலக்கண மாறுதல்கள்; தொடரியல் மாறுதல்கள்; சொற்பொருள் உணர்த்தலில் மாறுதல்கள்; பிறமொழிக் கலப்பு, சொல் வடிவ மாறுதல்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

தமிழைப் பொறுத்தவரையில் தொல்காப்பியம் பழந் தமிழின் அமைப்பை அறியப் பெரிதும் உதவுகின்றது. நன்னூல் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டுகின்றது. சங்க இலக்கியம் தொல்காப்பிய நியதிகளைப் பின்பற்றின எனினும் ஓரளவு சில மாறுதல்களைப் பெற்றுள்ளன என்பது அறியப்படுகிறது.

மிகப் பிற்காலத்தில் பிறமொழிச் சொற்களாகிய இந்துஸ்தானியும், ஆங்கிலமும் மொழியில் மிகுதியாகப் புகத் தொடங்கி மொழி எல்லாத் துறைகளுக்கும் தன்னைத் தகுதிப்படுத்திக்கொண்டு வருகிறது. எனவே, பிறமொழிக் கலப்பு மொழி வரலாற்றில் முக்கியமான இடம் பெறுகிறது.

மொழிகளுக்கு ஓர் வரலாறு உண்டு என்பதுபோலவே அதற்கு என்று ஓர் தனி அமைப்பும் உண்டு. அதன்போக்கும் ஒரு குறிப்பிட்ட அமைப்பை உடையதாக விளங்குகிறது. இவையும் வரலாற்றில் இடம் பெறுகிறது.

# 2. தமிழ்ச் சொல்லமைப்பு

மொழியினங்கள் அவற்றின் தோற்றத்தால் உறவு உடையது என்று கூற முடிவதில்லை. முக்கியமான உறவு அதன் அமைப்பு வகையை (type) ஒட்டியதாகும். இதனை அமைப்பு ஒட்டிய பிரிவு (typological classification) என்பர். இந்தப் பிரிவின்படி மொழிகளைத் தனிநிலை மொழி, பிணைப்பு நிலைமொழி, ஒட்டுநிலை மொழி எனப் பிரிப்பர்.

திராவிட மொழிகள் ஒட்டு நிலையைச் சார்ந்தவை. அடிச் சொற்கள் எளிதில் பிரித்து அறியக்கூடிய வகையில் விகுதிகளும், இலக்கணச் சொற்களும் அவற்றோடு பிணை கின்றன.

போகிறான் — போ + கிறு + ஆன்

நிழல் — நிழ் + அல்

நிலை -- நில் + ஐ

என்வே, தமிழ்மொழி தொல்நெடுங்காலமாகவே ஒட்டு நிலையில் இருந்து வருகிறது. மொழியின் வளர்ச்சி என்னும் கட்டுரையில் ஆட்டோ யெஸ்பெர்சன் மொழி தொகு நிலையில் இருந்து (Synthetic stage) பிரிநிலைக்கு (Analytical stage) இயங்கிச் செல்கிறது என்பர். வளர்ச்சி என்பது இவ்வாறு பிரித்தும் பிரிக்கப்படும் கூறுகள் மற்றவற்றோடு இணைத்தும் புதிய புதிய வடிவங்களை அமைப்பதற்குத் தகுதி பெறுவது என்பர். தமிழ் இடைச் சொற்கள் என்று கருதப் படும் சேர்க்கை இலக்கணக் கூறுகள் எந்த அடிச் சொல் லோடும் சேர்ந்து புதிய புதிய இலக்கண அமைப்புகளையும் ஆக்கச் சொற்களையும் தருகின்றன.

மேலும், தமிழ் இப்பொழுது பிரித்து எழுதப்பட்டு வருவது தெரிந்த செய்தியாகும். பிரிப்பது என்ருல் சொற்களே பிரிந்து இயங்கும் என்பதும், விகுதிகள் அடிச் சொற்களை விட்டுப் பிரிந்து இயங்கா என்பதும் உணர வேண்டிய செய்தியாகும்.

இரு ந்த் ஆன்

மாடு கள் ஐ; வாங் கு இன் ஆன் எனப் பிரித்து இயங்கா. தமிழில் உருபுகள் சொற்களோடு இணைந்தே நிற்கும்.

மேசைமேல்; வீட்டுக்கு.

ஆங்கிலத்தில் உருபுகள் பிரிந்து இயங்கும் இயல்பின.

on the table; to the house. ஆங்கே சொல்லுருபுகளாக அமைந்துள்ளன.

உருபுகள் சேர்ந்து இணைதலும், சொற்கள் சேர்ந்து இசைதலும் வேறு. பழங்காலத்தில் சொற்கள் சேர்த்து இசைக்கப்பட்டன. இவற்றைத் தொகுநிலை என்பர்.

கல் + தூண் — கற்றூண்
நல் + தாய் — நற்ருய்.
மண் + நன்று — மண்ணன்று
நல் + சேர்க்கை — நற்சேர்க்கை
நல் + நாள் — நன்ஞள்.

இவ்வாறு மாறுவதை ஓரினமாதல் (Assimilation) என்பர். நிலைமொழி நோக்கி வருமொழி மாறுதலும், வருமொழி நோக்கி நிலைமொழி மாறுதலும், இரண்டு மொழி ஒலிகளும் ஒன்றை நோக்கி ஒன்று மாறுதலும் என இம் மாறுதல் மூவகைப்படும். தமிழ்ச் சொற்கள் இவ்வாறு சேர்ந்தே இசைத்தன என்பது இம்மாறுதல்களால் தெரி

கின்றன. அதனால் சொற்கள் மூன்று வடிவங்களைப் பெற்றிருந்தன.

**நல், நன், நற் :** எனவே, லகரமும், னகரமும், றகரமும் இடம் நோக்கி மாறி வந்தன எனத் தெரிகிறது. தனித்து வரும்பொழுது ஒருசில சொற்கள் லகரத்தில் முடிந்தும், ஒருசில னகரத்தில் முடிந்தும் இயங்கின.

பொன் — னகர இறுதிச் சொல்
கல் — லகர இறுதிச் சொல்.

வேற்றுமை உருபு ஏற்கும்பொழுது தனித்த வடிவம் புலனாகின்றது.

கல்லை; பொன்னை.

**'எண்' என் உணவுப் பெயர்** என்று 'எள்'ளைக் குறிப்பர் தொல்காப்பியனார். எனவே, 'எள்' என்று வழங்கும் இப்போதைய சொல் 'எண்' எனவே வழங்கியது என்பது தெரிகிறது. ணகர ஈற்றுச் சொல் முந்தியதா லகர, ளகர ஈற்றுச் சொல் முந்தியதா என்று கூற முடியாத நிலையில் இருக்கிறோம்.

கற்றூண் என்பது பழைய வழக்கு. கல் தூண் என்பது புதிய வழக்கு; நற்றாய் என்பது பழைய வழக்கு; நல் தாய் நல்ல தாய் என்பது புதிய வழக்கு. எனவே, சொற்களைப் பொறுத்தவரையில் தமிழில் சொற்கள் பிரிநிலையை நோக்கி இயங்குகின்றன எனக் கூறலாம். உருபுகளைப் பொறுத்த வரை தொகுநிலையிலேயே உள்ளனஎன்பது உணரப்படுகிறது. 'கல்லை, வீட்டை'—இவை சேர்ந்தே இயங்குகின்றன.

ஒரு மொழியின் உயர்வும் வளர்ச்சியும் அது பிரிநிலை நோக்கிச் செல்வதாலேயே அமையும் என்பர்—அறிஞர் ஆட்டோ எஸ்பர்சன். இரண்டு நிலைகளிலும் நன்மையும் தீமையும் உள்ளன. பொருள் நோக்கிப் பிரிக்கும்பொழுது நல் தாய் என்பதும், இயல்பாக ஒலிநோக்கி இசைக்கும்

பொழுது நற்றுய் என்று அமைவதும் இயற்கை நியதியாகும். எனவே, இவ்வமைப்புகளில் உயர்வு தாழ்வுகள் கற்பிப்பது தேவையில்லை. தொகுநிலை மொழிகளும் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளது என்னும் கருத்தை மொழியியல் அறிஞர் ஹாக்கெட் தம் நூலில் குறிப்பிடுவர்.

மற்ருெரு சிறப்பியல்பு தமிழ்ச் சொல்லமைப்பில் உள்ளது. தமிழ் அடிச் சொற்கள் ஓரசைச் சொற்களாம். (Mono syllabic roots). எந்த அடிச் சொல்லேயும் ஆக்க விகுதிகளை நீக்கி எஞ்சிய நிலையில் கண்டால் நேர் நிரை என்ற அள வுக்குக் கொண்டுவரலாம். ஒட்டுநிலை மொழியாக இருப்ப தால்தான் இவ்வாறு எளிதில் பிரித்து அடிச் சொல்லின் பழமையைப் போற்ற முடிகிறது.

இவ்வடிச் சொல்லின் தோற்றத்தை உணர்த்திய பெருமை தொல்காப்பியனுரையே சாரும். இசையிலும், பண்பிலும், குறிப்பிலும் தமிழ் அடிச் சொற்கள் தோன்றும் என்பது அவர் உரிச் சொற்களுக்குக் கூறிய இலக்கணத் தினின்று புலனுகின்றது. பொருளுக்கு உரிய பகுதிகளையே தொல்காப்பியனுர் உரிச் சொல் என்பர். அவையே சொற் களின் முதல்நிலையாகிய அடிச் சொற்களாம்.

எனவே, சொல்லமைப்பு ஒட்டிப் பார்க்கும்பொழுது தமிழ் ஒட்டு நிலையைச் சார்ந்தது என்பதும் உருபுகளைப் பொறுத்தவரை தொகுநிலையில் உள்ளது என்பதும், சொற்கள் பிரித்து இயங்கும் போக்கைப் பின்பற்றி அந்த வகையில் பிரிநிலையில் இயங்குகிறது என்பதும் உணரப்படு கின்றன.

வடசொற்களையும், தமிழ்ச் சொற்களையும் இந்த வகை எளிதில் பிரித்து உணர முடியும்.

சாமர்த்தியம்—இதைப் பிரித்து அடிச் சொல்லைக் காண முடியாது. அப்படி அடிச் சொல் கிடைத்தாலும் ஓரசையாக அது அமையாது.

'சாப்பிடு' என்ற சொல்லின் அடிச் சொல்லும் இவ்வாறு புலப்படாமல் இருக்கிறது. இது வேற்று மொழிச் சொல்லாகவோ பேச்சுத் திரிபு சொல்லாகவோ இருக்கலாம். தமிழ்ச் சொற்களாக இருந்தால் அதன் அடிச் சொல்லும் அதன் பொருளும் புலப்பட்டு இருக்கும்.

சங்ககாலத் தமிழ்ச் சொற்கள் மிகச் சிறிய வடிவினவாக இருப்பது அவற்றின் சிறப்பியல்பாம். விகுதிகளும் மிகுதியாகச் சேர்க்காமல் சொற்களை அமைப்பது பழைய வழக்காகத் தெரிகிறது.

துய்+இல் – துயில் (பழந்தமிழ்).

துய்+தூய்+கு+அம் – தூக்கம் (புதிய வழக்கு).

குழு – பழந்தமிழ்

குழு – கூழ்+து+கூடு+அம் – கூட்டம் (புதிய வழக்கு).

ஆடு+அல் – ஆடல் (பழந்தமிழ்).

ஆடு+அம் – ஆட்டம் (புதிய தமிழ்).

**சொல்லமைப்பில் இடநியதி :**

சொல்லில் உருபுகள் இடநியதி பெற்றிருத்தல் இன்றியமையாதது. அதுவும் அந்த வகையில் தொகு நிலையில் இயங்குகிறது. ஆங்கிலத்தில் ஒருசில இடங்களில் பிரிநிலையாகவும் இயங்குகிறது.

**He came** (தொகுநிலை).

He did come (பிரிநிலை).

வினவில் பிரிநிலை அமைப்பே காணப்படுகிறது.

**Did he come ?**

**How did he come ?**

தமிழில் காலம் காட்டும் இடைநிலைகள் சொல்லில் உறுப்பாகப் பிணைந்து நிற்கிறது.

அவன் செய்தான்; செய்+த்+ஆன்.

எனவே தமிழ்ச் சொல்லமைப்பில் இடநியதி மாறாமல் தொகுநிலையிலேயே இயங்குகிறது.

வாக்கியங்களில் பிரிநிலை அமைப்பும் இடநியதி வரையறை இன்மையும் காணப்படுகின்றன.

அவன் மரம் வெட்டினான்.

மரம் அவன் வெட்டினான்.

வெட்டினான் அவன் மரம்.

# 3. ஒலிநிலையில் மாறுதல்கள்

தமிழில் பழைய ஒலிகளாக உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாக இருந்தன. குறில் நெடில் உயிர்களுக்குள் வேறுபாடு இருந்தன. பொருள் வேறுபாட்டுக்கு இக்குறில் நெடில்கள் தேவைப் பட்டன.

கல் – கால்; கண் – காண்.

எ, ஒ என்ற ஒலிகள் தமிழுக்கு இன்றியமையாதன. வட மொழியில் எ, ஒ என்ற குறில் வடிவங்கள் இல்லை.

ஆய்தம் தமிழில் ல, ள, வ இவற்றின் திரிபாகக் கொள் ளப்படுகிறது. கல் + தீது – கஃறீது, அவ் + கடிய – அஃகடிய; முள் + தீது – முஃடீது.

பிற்காலத்தில் அது ஒரு தனி எழுத்தாகக் கொள்ளப் பட்டது.

பழங் காலத்தில் க, ச, ட, த, ப, ற ஆகிய இவை k, c, t, t, p என ஒலிப்பில் ஒலிகளாகவே (voiceless stop) (வல் லொலிகளாகவே) ஒலித்தன. g, j, d, d, b என ஒலிக்கப் பெறவில்லை.

**வல்லொலிகள் இரட்டித்தல் :**

விகுதிகள் சேர்ந்து சொற்கள் ஆகும் பொழுது வல்லொலி இரட்டிப்பைப் பெறுகின்றன. இந்த இரட்டிப்புக்குக் காரணம் ய, ர, ல, வ, ழ இவற்றின் திரிபே எனத் திரு. வேங் கடராசலு ரெட்டியார் காட்டுவர். வல்லொலி அடுத்து வரும் மெல்லொலிகளும் இவற்றின் திரிபு எனக்கருதுவர்.

துய் (துயில்)—தூய்கு—தூங்கு

தூய்கு—தூக்கு

உய்+கு—ஊங்கு—ஊக்கு

சார்து—சாத்து;

கொழு+பு—கொம்பு

கள்(து)—(களை+து)—கட்டு

தகரமும் ஏனைய வல்லொலிகளாக மாறுதல் உண்டு.

புகு+த்+உ — புக்கு

விள்+து — விட்டு

பாண்+து — பாட்டு

கல்+த்+ஆர் — கற்றார்.

மகரமும் னகரமும் ஒருசில இடங்களில் மாறி வந்தன.

அறம் — அறன்

குளம் — குளன்

மரம் — மரன்.

இப்பொழுது மகரமாகவே இச் சொற்கள் வழங்குகின்றன.

பழங்காலத்தில் சொற்கள் அளபெடுத்தன. இசை பற்றியும் இலக்கணம் பற்றியும் இரண்டு உயிர்கள் உடன் நின்று அளபெடையாக ஒலித்தன.

நசைஇ — நசைஇ இலக்கணம் பற்றியது.

யாஅதும் — இசைபற்றியது.

இக்கால நடையில் அளபெடைகள் மறைந்து விட்டன.

குற்றியல் உகரம், குற்றியல் இகரம் ஆய்தம் என நுட்ப மான ஒலிகள் வேறுபடுத்தி அறியப்பட்டன. நுந்தை என்ற சொல்லில் உகரம் குற்றியல் உகரம் எனக் கூறினர். வல்லொலி யில் சொற்கள் இறுவது இல்லை. அவற்றிற்குத் துணையாகக் குற்றியல் உகரம் நின்றது. யகரம் முன்னால் திரிந்தோ இயல் பாகவோ அமைந்த இகரம் குறில் இகரமாகக் கருதப்பட்டது. இவ்வேறுபாடுகளோடு இப்பொழுது சொற்கள் ஒலிப்பது இல்லை. ஏனைய சொற்களும் ஒலித்துணையாக உகரம் பெறு கிறது.

கேள்—கேளு; பார்—பாரு

கண் —கண்ணு; மண்ணு.

ஆய்தம் இப்பொழுது மறைந்துவிட்டது எனலாம். புலவர்கள் எழுத்தில் பழைய மரபைப் போற்றும் கருத்தில் ஒரு சிலரால் ஆளப்படுகிறது.

ககரமே சகரத்தை நோக்கப் பழையது. ககரத்தில் தொடங்கும் சொற்கள் பல சகரம் ஆகியுள்ளன.

கெய்—செய் (செயல்) என்பதன் பகுதி

கெவி—செவி (கெவி—பழைய வடிவம்).

சங்க காலத்தில் சகரக் கிளவியோடு தொடங்கும் சொற் கள் பல மொழிக்கு முதலில் சகரம் மறைந்து அகரமாக நின்றுள்ளன.

சான்றோர் — ஆன்றோர்

சாய் — ஆய்

சுலவு — உலவு

சுருள் — உருள்.

ஒலித்துணையாக யகரம் பல சொற்களில் மொழிக்கு முதலில் நின்றுள்ளது.

ஆறு — யாறு
ஆனை — யானை
ஆண்டு — யாண்டு.

இப்பொழுது இருவழக்குகளும் மொழியில் வழங்குகின்றன.

மரீஇ—என்பது உடம்படுமெய் பெறாத வடிவம். மருவி என்பது உடம்படுமெய் பெற்ற வடிவம். மரீஇ என்பது மறைந்து மருவி என்பது நிலைபெறலாயிற்று. சங்க காலத்தில் இது நிலைபெற ஆரம்பித்தது.

ச, ஞ, ய தொல்காப்பியர் காலத்தில் மொழிக்கு முதலில் வருவது இல்லை. சங்க காலத்தில் இந்நிலை மாறி விட்டது. சகரம் மொழிக்கு முதலில் வரத் தொடங்கியது என்பது இச் சொற்கள் காட்டுகின்றன என்பர்.

சமம், ஞமலி, யவனர் இவை பேச்சுச் சொற்களாகவும் பிறமொழிச் சொற்களாகவும் இருத்தல் வேண்டும் என்று கருதுவர்.*

சகரம் பழங் காலத்தில் வல்லொலியாக ஒலிக்கப்பட்டது. சாறு—(charu). இப்பொழுது தனித்து வரும்பொழுது சகரம் உரசு ஒலியாக ஒலிக்கப் பெறுகிறது. பச்சை என இரட்டித்து வருமிடத்திலேயே இதன் பழைய ஒலி உள்ளது.

தகர ஒலிகள் சகரமாகப் பேச்சு மொழியில் மாறி வருகின்றன.

பெரிது — பெரிசு
சிறியது — சிறுசு
புலைத்தி — புலைச்சி
வயது — வயசு.

---

* A History of the Tamil Language Page 108.

முன்ஒலி இகரமாகவோ யகரமாகவோ இருந்தால் தகரம் சகரமாக மாறுகிறது. இதற்கு அண்ணமெய்யாதல் **(palatalisation)** என்பர்.

உகரம் பேச்சு மொழியில் ஒகரமாக மாறுகிறது.

உலகம் — ஒலகம்

உரல் — ஒரலு

உயர்த்தி— ஒசத்தி, ஒஸ்த்தி.

பழங்காலத்தில் இணைப்பொலிகள் (clusters) மொழியில் வழங்கப் பெறவில்லை. போன்ம், மருண்ம் என ஒரு சில இடங்களிலேயே வழங்கப்பட்டன. இப்பொழுது பேச்சு மொழியில் இவ்விணைப்பு ஒலிகள் மிகுதியாக வழங்கப்படுகின்றன.

சட்னி: இட்லி,

ட்ன், ட்ல்—வெட்ருன், கட்ருன், திட்ருன்

வடசொற்கள் தமிழில் வழங்கும் பொழுது அ, இ, உ ஒலித்துணையாக நன்னூலார் காலத்தில் இயங்கின.

அரங்கன், இலக்குவன், உலோகம்.

இப்பொழுது பிறமொழிச் சொற்கள் இவ்வொலித்துணை இன்றியே எழுதப்படுகின்றன.

ரயில், லட்டு, ரப்பர், ரூபாய்.

மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் குறிப்பிட்ட எழுத்துக்கள் தாம் வரும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். நன்னூலார் காலத்திலேயே இந்நிலைமை மாறிவிட்டது.

தமிழ் ஒலிகள் மிக்கும் மாறியும் காலந்தோறும் வேறுபட்டுப் பிற மொழிகளின் தாக்குதலால் புதிய ஒலிகளை ஏற்றும் வருகின்றன.

**இலக்கண மாறுதல்கள் :**

த்—சவாகமாறல்—காய்ச்சினான்

ந்த்—ஞ்ச

குறில் நெடிலாதல்—பெய்தது—பேஞ்சது; செய்தான்—சேஞ்சான்.

முதல் நீளல்—இருக்கிறது—இருக்குது—**கீது**.

**சாரியை கெடல் :**

| | | | | |
|---|---|---|---|---|
| இருக்கின்றான் | — | இருக்கிறான் | — | இருக்கறான் |
| செய்கின்றான் | — | செய்கிறான் | — | செய்யறான் |
| போகின்றது | — | போகிறது | — | போறது |
| வருகின்றான் | — | வருகிறான் | — | வர்ரான். |

**வாய்பாடுகள் மாறுதல் :** பழைய வினையெச்ச வாய்பாடுகள் அனைத்தும் மொழி வழக்கில் இல்லை. பெரும்பாலும் மறைந்துவிட்டன.

**சிறப்புச் சொற்கள் மறைதல் :** சிறப்புச் சொற்கள் இருந்த இடத்தில் பொதுச் சொற்கள் நிலை பெற்றுவிட்டன. களிறு, பிடி மறைந்து யானை என்பதும் மரபுப் பெயர்கள் மறைந்து பொதுப் பெயர்களும் இடம் பெற்றுவிட்டன.

## மரூஉ முடிபுகள் :

சொற்கள் காலந்தோறும் சிதைந்து வழங்குதல் உண்டு. சொல்லின் தேவையான அசைகள் நிலை பெற்று ஏனைய உதிர்ந்து விடுகின்றன. இவற்றை இலக்கண நூல்கள் மரூஉ முடிபு என்ப. 'அருமருந்தன்ன பிள்ளை' என்பது 'அருமருந்த பிள்ளை' எனவும் 'ஆயிற்று' என்பது 'ஆச்சு' எனவும் இருக்கிறது என்பது 'இருக்குது', 'கீது' எனவும் மருவி வழங்குகின்றன.

றகரத்தில் வழங்கும் பல சொற்கள் பேச்சு வழக்கில் தகரமாகத் திரிந்துள்ளன. 'பற்று வரவு' என்பது 'பத்து வரவு' எனவும் நேற்று, அற்று, கற்று, விற்று என்பன முறையே நேத்து, அத்து, கத்து, வித்து எனவும் மாறி வழங்கு கின்றன.

தகரம் சகரமாக மாறி வழங்குதல் தமிழ் மொழி பேச்சில் பெரும்பான்மை எனக் கூறலாம். இதனை அண்ண மெய்யாதல் (Palatalisation) என்று மொழியியல் விளக்கும். மைத்துனன் மச்சான்; வைத்தான், வச்சான், தைத்து, தச்சு, பெரிது, பெரிசு, வயது, வயசு, முதலியன இதற்கு எடுத்துக் காட்டுகளாம். இறந்தகால இடை நிலையாகிய தகரம் பேச்சு மொழியில் சகரமாக வழங்குகிறது. செய்தான் செஞ்சான்; பெய்தது - பேஞ்சது முதலாயின காண்க.

இம் மரூஉ மொழிகளின் திரிபுகளை ஆசிரியர் வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் ஐந்து வகைப்படுத்திக் காட்டுவர். அவை தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலை மாறுதல் என்பனவாம். யாது என்பது யாவது என ஆயினமை தோன்றலுக்கு எடுத்துக் காட்டாகத் தருவர். புலைத்தி—புலைச்சி—திரிதலுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இருக்கிறது—இருக்குது கெடுதல், பெயர்—பேர், பேர்த்தி, பேரன் முதலியன நீளல் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாம். நிலைமாறல் (Metathesis) மரநுனி, நுனி மரம் வாய்க்கால் கால்வாய் என்பன கூறலாம். தப்பை, பத்தை முதலியனவும் இத் திரிபேயாம்.

போலி என்று சொல்லப்படும் நகர ஞகரத் திரிபுகளும் மரூஉ முடிபு என்றே காட்டுவர். ஐந்து—அஞ்சு; உய்ந்தனன்—உய்ஞ்சனன் முதலியன இதற்கு எடுத்துக் காட்டுகளாம்.

தமிழ்ச் சொற்கள் சிதைந்தும் பிறமொழிச் சொற்கள் புக இடம் கொடுத்தும் மொழி மாறிக்கொண்டே, இயங்கு கின்றது. ழகர ளகர வேறுபாடு பேச்சு மொழியில் ஒரு சில இடங்களில் அற்று விட்டது. சிறப்பாக ஈழத்தில் ழகரம் ளகரமாகவே உச்சரிக்கப் படுகிறது. ரகர றகர வேறுபாடு களும் ஒலி யமைப்பில் மெல்ல மறைந்துகொண்டு வருகிறது. ழகர ளகர வேறுபாட்டை நீக்கும் வகையில் வீர சோழியமும் ளகரத்திற்குக் கூறும் விதியை ழகரத்திற்கும் கூறியுள்ளது எனக் காட்டுவர் அறிஞர் வி. கோ. சூ. புகழ்+தீபம்—புக ழ்டீபம் என ஆயிற்று எனக் காட்டுவர்.

# 4. சொற்பொருள் மாற்றம்

சொற்கள் தன்னையும் பொருளையும் உணர்த்தும் என்பர் தொல்காப்பியர்.

> ''சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்
> சொல்லின் ஆகும்.''

சொல் தன்மையாவது பெயர் வினை இடை உரி ஆகிய இவை எனலாம். பொருள் தன்மையாவது அஃது உணர்த்தும் பொருளாகும். பொருள் பருப்பொருள் எனவும் நுண் பொருள் எனவும் இருவகைப்படும். அப் பொருளை உணர்த்தச் சொற்கள் கருவியாகின்றன.

சொற்கள் பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாக வும் உணர்த்தும். பழகிப்போய் அனைவருக்கும் தெரிந்த சொல் வழக்குகள் வெளிப்படை உணர்த்தலாம். சூழ்நிலை அறிந்து நுட்பமாக உணரப்படும் பொருள் உணர்ச்சி குறிப் பாக உணர்த்தலாம். ஆகுபெயர், அன்மொழித் தொகை, சிலேடை, உருவகம், குழூஉக்குறி, மங்கலம், இடக்கரடக்கல், எண்ணுத் தொகைப் பெயர் முதலியவை குறிப்பின் உணர்த் தலாம்.

சொற்கள் சில சூழ்நிலையாலேயே பொருள்உணரப்படும். சிறப்பாக இடைச் சொற்கள் தில், மன், கொல், உம், ஏ என்பனவும் இலக்கணப் பொருள் உணர்த்தும் கால இடை நிலை,விகுதி,வேற்றுமைஉருபு முதலியனவும் சூழ்நிலை ஒட்டியே பொருள் உணர்வு பெறுகிறது. தனித்து நின்றால் அவற்றிற் குப் பொருள் அமைவு இல்லை எனலாம். உரிச் சொற்கள் தனித்து நின்றாலும் பொருள் விளக்கம் ஓரளவு பெறுகிறது. இஃது உரிச் சொல்லுக்கும் இடைச் சொல்லுக்கும் உள்ள

அடிப்படை வேறுபாடாம். அடிச்சொற்கள் தாமாகப் பொருள் உணர்த்தும் இயல்பின. ஏனைய விகுதிகள் சூழ்நிலை ஒட்டியே பொருள் உணர்ச்சி பெறுகின்றன.

**இடுகுறி காரணம்** : சொற்களுக்கு இடுகுறி பற்றியும் பொருள் உணர்ச்சி உண்டாகின்றன என்பர். ஒரு சில சொற்களுக்குக் காரணம் விளங்குகின்றன. காரணம் விளங்காவிட்டால் அவற்றை இடுகுறி என்று கூறிவிடுகிறோம். பொதுவாகச் சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா' என்பர் தொல்காப்பியனார்.

எனினும் சொற்கள் இசையினும், பண்பினும், குறிப்பினும் தோன்றும் என்பது தொல்காப்பியர் விளக்கம். சொற்கள் ஏதோ சில குறிப்புக்களாலும் தொடர்புகளாலும் ஒலி நயத்தாலும் தோன்றுகின்றன எனலாம். இரட்டைக் கிளவி ஒலிக்குறிப்பால் (இசையால்) பொருள் விளக்குகிறது.

**மரபுப் பொருளும் ஆக்கப் பொருளும்** : சொற்கள் தொன்று தொட்டுப் பயின்று குறிப்பிட்ட பொருளை உணர்த்தும். இவற்றை மரபுப் பெயர் என்றும் அப்படிப் பழகிய சொற்கள் இல்லை என்றால் புதிய சொற்கள் படைக்கப் படுகின்றன. அவற்றை ஆக்கப் பெயர் என்பர். இவ்வாறு சொற்கள் மரபுபற்றியும் ஆக்கம் பற்றியும் பொருளை உணர்த்தும்.

**ஒரு பொருளும் பல பொருளும்** : ஒரு சொல்லுக்கு ஒரு பொருளேயன்றிப் பல பொருளும் அமைதல் உண்டு. பல சொற்களுக்கு ஒரு பொருள் அமைதலும் உண்டு. பல திசை வழக்குகள் மொழியில் இடம் பெறுவதால் இவ்வாறு பொருட் பெருக்கும் சொற் பெருக்கும் மொழியில் மேவுதல் இயல்பு.

**பல்பொருள் உணர்த்தும் சொல் விளக்கம் பெறல்** : மாக்கொணர்ந்தான் என்றால் மா என்பது விலங்கைக் குறிக்கும்.

மா பூத்தது என்றால் மரத்தைக் குறிக்கும்—வினை பற்றி விளக்கம் பெறுகின்றது.

பாய் மா என்பது குதிரையை உணர்த்தும். அடை பற்றி அறியப்படுகிறது.

மாவும் மருதும் ஓங்கின. இஃது இனம் பற்றி மரம் என அறியப்படுகிறது.

**சொல்லும் பொருளும் மாறுபடுதல்:** இடந்தோறும் காலந்தோறும் சொல்லும் பொருளும் மாறுபடல் உண்டு.

**இடந்தோறும் வேறுபடல்:** உவன், உது, உவ்விடம் ஆகிய இவ்வழக்குகள் ஈழநாட்டில் வழங்குகின்றன. அவை தமிழ் நாட்டில் வழக்கிழந்து விட்டன.

சென்னையில் 'கொசுறு' என்ற சொல் கூடக் கொடுத்தல் என்னும் பொருளில் வழங்குகிறது. இது பிற பகுதிகளில் வழங்குவது இல்லை. கொட்டாங்குச்சி என்ற வழக்கு வட ஆற்காடு என்ற பகுதியில் தேங்காய்மேல் ஓட்டைக் குறிக்கும். கோவையில் இதனைத் 'தொட்டி' என வழங்குவர்.

ஈழத்தில் கொசுவைக் குறிக்க 'நுளம்பு' என்ற சொல் வழங்குகிறது. அது தமிழகத்தில் வழங்கவில்லை.

புத்தகத்தின் அட்டையை மட்டை என்பர் ஈழ நாட்டில்; அவதானித்தல், கதைத்தல் முதலியன ஈழநாட்டுத் தனி வழக்குகளாம்.

**காலந்தோறும் வேறுபடல்;**

இடந்தோறும் வேறுபடல் மிக அருகிய வழக்காகும். 'காலந்தோறும் வேறுபடல் மிகுவழக்காகும்.

**சிறப்புப் பொருட்பேறு;** பல பொருள்களுக்கும் பொதுவாக வழங்கும் ஒரு சொல் ஒரு பொருளையே குறித்தலைச் சிறப்புப் பொருட் பேறு என்பர். பொன், இழவு, புல், நெய் என்பவை பல பொருளுக்குப் பொதுவாக வழங்கி ஒரு பொருளுக்கே உரிமையாகிவிட்டன.

**பொதுப் பொருட்பேறு :** சிறப்புச் சொற்கள் பொதுப் பொருளை உணர்த்தத் தொடங்கிவிட்டன.

எண்ணெய், மரம், மரக்கால், கறி என்பன பொதுப் பொருள் உணர்த்தும் சொற்களாகிவிட்டன.

எள்நெய் எல்லா நெய்களையும் (oil) உணர்த்துகின்றன. அகக்காழ் உடையன மரம் என்பர் தொல்காப்பியனார். புறக் காழ் உடையன புல் என்பர். இப்பொழுது மரம் என்பது தென்னை, பனை முதலியவற்றையும் குறிக்கும். கறி என்பது மிளகை உணர்த்தி நின்று மிளகு போடாத கறிக்கும் அப் பெயர் அமைந்துள்ளது. மரக்கால் அளவுப் பெயராகி விட்டது.

**உயர் பொருட் பேறு :**

**பிள்ளை, பார்ப்பு, களிப்பு :** கிரிப்பிள்ளை, அணிற்பிள்ளை என்பன பழைய வழக்குகள். பிள்ளை என்பது மனிதர்களுக்கு வழங்கி வரும் உயர்நிலை பெற்றுவிட்டது. சாதிப் பெயருக்கு இப்பொழுது அஃது உயர்த்தப்பட்டுள்ளது.

பார்ப்பு என்பது பறவைக் குஞ்சுகளை உணர்த்தியது. பாப்பா என்பது குழந்தைகளை உணர்த்துகிறது. சிலர் இயற் பெயராகவும் அது வழங்குகிறது.

களிப்பு—கள்ளுண்டு களித்தலுக்கு வழங்கும் அஃது உவகை நிலையை உணர்த்துகிறது,

**இழி பொருட் பேறு :** நாற்றம், குப்பை முதலியன இழி பொருட் பேறுகிவிட்டன.

**நுண் பொருட் பேறு :** தலை, அரை, கால், நோக்கம், சூழ்ச்சி, பார்வை முதலிய பருமை உணர்த்தும் சொற்கள் நுண் கருத்துக்களை உணர்த்துகின்றன.

**பருப்பொருட் பேறு :** அகம், புறம், விருந்து. வறுவல், முறுக்கு, பகை முதலியன நுண் பொருட் சொற்கள். அவை பருப்பொருளை உணர்த்துகின்றன.

> ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல
> கால வகையினானே'' என்பர் நன்னூலார்.

# 5. சொல் இலக்கண மாற்றம்

காலந்தோறும் சொற்களும் அவற்றின் வடிவங்களும் புதிய இலக்கண உருபுகளும் மாறுதல் உண்டு. தொல்காப்பியர் காலத்திற்கும் நன்னூலுக்கும் ஒரு சில இடங்களில் இம் மாறுதல் காணப்படுகின்றன. இவ்விரண்டு நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்வதால் இவ்விலக்கண மாற்றம் புலனாகும்.

தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்கும் உள்ள வேறுபாடுகள்.

(1) முதல் சார்பு என்பவற்றில் நன்னூலுக்கும் தொல்காப்பியத்திற்கும் வேறுபாடு உளது. குறில் உ; குறில் இ; ஆய்தம் இம் மூன்றை மட்டும் சார்பு எழுத்துக்கள் எனத் தொல்காப்பியம் கூறும். முதல் எழுத்துக்களின் திரிபுகளை எல்லாம் சார்பு எழுத்துக்கள் என நன்னூல் கூறும்.

(2) மொழி முதல் எழுத்துக்கள் ஈற்றுநிலை எழுத்துக்கள் இவற்றில் இரண்டும் மாறுபடுகின்றன.

(3) பிறப்பு முயற்சியல் பொதுவாக வேறுபாடு இல்லை; தொல்காப்பியத்தை ஒட்டி நன்னூல் சூத்திரங்களை அமைத்துள்ளது. உயிர் எழுத்துக்கும் இடையெழுத்துக்கும் இடம் மிடறு என்றும் மெல்லினம் மூக்கு வழி வளியால் பிறக்கும் என்றும் தொல்காப்பியம் கூறும். நன்னூல் ஏனைய இடையெழுத்துக்களும் வல்லெழுத்துக்களும், ஆய்தமும் முறையே மிடற்றையும், உரத்தையும், தலையையும் பொருந்தும் எனச் சேர்த்துக் கூறுகிறது.

(4) பதவியில் என்பதும், சிறப்பாகப் பண்புச் சொற்களுக்கு மாற்று வடிவங்களும் ஒலித்திரிபுகளும் கூறுவதும் நன்னூலில் மட்டும் காணப்படுகின்றன.

(5) தொல்காப்பியம் தனித்தனியேகூறும் பல புணர்ச்சி விதிகளை நன்னூல் தொகுத்துக் கூறுகின்றது.

(6) கள் என்னும் ஈறு அஃறிணைக்கே உரியது என்பர் தொல்காப்பியனார். உயர்திணைக்கும் உரியது என்பர் நன்னூலார்.

(7) மூவிடப் பெயரில் நான் என்ற புது வடிவம் நன்னூல் கூறுகின்றது. தொல்காப்பியத்தில் யான் ஒன்று மட்டும் உள்ளது.

(8) வேற்றுமை உருபுகளில் மூன்றுவது உருபாக 'ஒடு' என்பதைக் குறிப்பர் தொல்காப்பியனார். ஆல், ஆன், ஓடு, ஒடு உடன் எனப் பெருக்கிக் காட்டுவர் நன்னூலார். ஐந்தன் உருபு இன் என்பர் தொல்காப்பியனார். இல்லும் இன்னும் ஐந்தன் உருபு என நன்னூல் கூறும். ஆறன் உருபு அது என்று தொல் காப்பியமும் ஒருமைக்கு அதுவும், ஆதுவும் பன்மைக்கு 'அ' வும் உருபுகள் என்று நன்னூலும் கூறும். ஏழன் உருபு கண் எனத் தொல்காப்பியம் உணர்த்திக் கால் புறம் அகம் முதலியவற்றை அண்மைச் சொற்களாக அந்நூல் குறிப்பிடும். நன்னூல் இவற்றை உருபுகள் என்றே கூறுவதோடு வேறு சிலவற்றைக் கூட்டியும் குறைத்துக் காட்டும்.

(9) நன்னூல் சொல்லிலக்கணத்திற்குச் சிறப்பிடம் தந்து பெயர் வினை இடை உரி என இயல்கள் வைத்திருக் கின்றது. பெயரியலில் வேற்றுமையை அடக்கிக் கூறுகிறது. தொல்காப்பியம் தொடரியலுக்குச் சிறப்புத் தந்து கிளவி யாக்கம் வேற்றுமையியல் என அல்வழி வேற்றுமைத்தொடர் களை ஆராய்கின்றது. எச்சவியலும் தொடரிலக்கணத்தை விரிவுபடக் கூறுகிறது.

(10) தன்மைப் பன்மை வினைகள் உயர்திணைக்கே உரி யன என்பர் தொல்காப்பியனார். இருதிணைக்கும் உரியன என்பர் நன்னூலார்.

(11) வியங்கோள் வினை எல்லா இடத்திற்கும் உரியது என்பர் நன்னூலார். படர்க்கைக்கு மட்டும் உரியது என்பர் தொல்காப்பியனார்.

(12) வியங்கோள் வினை விகுதிகளைத் தொல்காப்பியம் கூறவில்லை. நன்னூல் சிறப்பித்துக் கூறுகின்றது.

(13) பெயரெச்ச வாய்பாடுகளில் செய்த செய்யும் என்பவை மட்டும் தொல்காப்பியம் கூறும்; செய்கிற என்பதையும் சேர்த்து நன்னூல் கூறும்.

(14) வினையெச்ச வாய்பாடுகளில் செய்யா, செய்வான், செய்பான், செய்பாக்கு என்பன நன்னூல் புதிதாகச் சேர்ப்பன.

(15) வேறு இல்லை உண்டு என்பன பொது வினைகள் என நன்னூல் குறிக்கிறது. இது தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை.

(16) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செய்யின், செய, செயற்கு இவை ஒன்பதும் வினையெச்ச வாய்பாடுகளாகத் தொல்காப்பியம் கூறும்.

செயற்கு என்னும் வினையெச்ச வாய்பாடு நன்னூலில் இடம்பெறவில்லை.

(17) பின் முன் கால் கடை வழி இடத்து முதலியகாலம் கண்ணிய வினையெச்சக் கிளவிகள் தொல்காப்பியத்தில் கூறப்படுகின்றன. நன்னூல் இந் நுட்பத்தைக் காட்டவில்லை.

(18) நன்னூல் காலக்கிளவிகளைத் தெளிவாகக் கூறுகின்றது. தொல்காப்பியம் வாய்பாடுகள் கொண்டு குறிப்பாக உணர்த்துகின்றது. செய்து, செய்யும் என்பவை மட்டும் முறையே இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் காட்டும் எனக் குறிப்பிடுகின்றது.

(19) தொகைநிலைத் தொடர்களில் அன்மொழித் தொகையானது பண்பு, உம்மை, வேற்றுமை ஆகிய மூன்று தொகை நிலைத் தொடர்களைச் சார்ந்து வரும் எனத் தொல்காப்பியம் கூறும். நன்னூல் உவமம் வினைத்தொகை இவ்விரண்டையும் சேர்த்து ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி எனக் கூறும்.

# 6. மொழிக் கலப்பு

வடமொழி தமிழகத்தில் கால் ஊன்றிய போதினும் அது தமிழில் முற்றும் கலந்து அதனை மாற்றும் ஆற்றலை இழந்துவிட்டது. புலவர்கள் வடசொற்களைப் புகுத்த முற்பட்டபோதும் அதற்கு எப்பொழுதும் எதிர்ப்புத் தோன்றிக் கொண்டே இருந்துள்ளது.

பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஏற்கும்பொழுது அதன் ஒலியியல்பைத் தமிழுக்கு ஏற்றவாறு மாற்றியே ஏற்றுக் கொண்டனர். 'வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ தமிழொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்பது தொல்காப்பியர் உணர்த்தும் நெறியாம். வடசொற்கள் புகுந்தன எனினும் அதன் ஒலிகள் தமிழில் இடம் பெறவில்லை. ஒரு சில ஒலிகளை எழுதிக்காட்ட வேண்டிய நியதியும் ஏற்பட்டதால் ஹ, ஷ, ஸ முதலிய ஒலிகளையும் எழுத்துக்களையும் ஏற்று உள்ளனர்.

தொல்காப்பியர் காலத்தில் ஒரு சில சொற்களே மொழியில் இடம் பெற்றன. 'காலம் உலகம்' என்பன வடசொல் என்பாரும் உளர்; அவை தமிழ்ச் சொற்களே என்னும் கருத்தும் உளது;

சங்ககாலத்தில் ஒரு சில இடப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இமயம், கங்கை, வாரணவாசி, பாடலிபுத்திரம் முதலிய ஊர்ப் பெயர்கள் வந்துள்ளன. இவையேயன்றி 'யவனர்' என்ற புதிய சொல்லும் வந்துள்ளது. மற்றும் புறநானூற்றிலும் ஒருசில வட சொற்கள் வந்துள்ளன.

சங்க இலக்கியத்தில் காலத்தால் பிற்பட்ட நூல்களாகிய கலித்தொகையிலும் பரிபாடலிலும் வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. திருக்குறள் மணிமேகலை சிலப்பதிகாரத்தில் மிக்க அளவு வடசொற்கள் கலந்து நிற்கின்றன. எனினும் அவை தமிழ் ஒலிகளைப் பெற்றுத் தமிழ்ச் சொற்களாக இசைந்து இயைந்து விட்டன. சமய ஞானம் தத்துவ விசாரணைகளும் பெருகிய காரணத்தால் வடசொற்கள் மிகுதியாக இந்நூல்களில் இடம் பெற்றன.

இடைக் காலத்தில் 14, 15 நூற்றுண்டுகளில் மணிப்பிரவாள நடை ஒன்று எழுந்தது. தமிழ் வாக்கிய அமைப்பும், வடமொழியும் தமிழும் சரிக்குச் சரி கலந்த சொற் கலப்பும் கொண்ட நடை இதுவாகும். மணியும் பவளமும் கலந்த மாலை அழகு தருவதுபோல இஃது அழகு பயப்பதாகக் கருதினர். 'ஸ்ரீ புராணம்' என்னும் சைன நூல் இக் கலப்பு நடையில் எழுதப்பட்டது.

இவ்வாறே வைணவ உரையாசிரியர்களும் இம் மணிப்பிரவாள நடையைக் கையாண்டு உரை நடையில் வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கலப்பாராயினர். சங்க காலத்தில் வலிய வடமொழி நூல்களைக் கற்றதால் தமிழ்ச் சொற்களில் வடசொற்கள் கலந்தன என்று கூறமுடியாது. பேச்சு வழக்காகிய பிராகிருத மொழிகளின் வழியாகவே சொற்கள் கலந்தன.

பல்லவர் காலத்தும் சோழர் காலத்தும் வடநூற் பயிற்சி மிக்கு எழுந்தது. தென்னகம் வடமொழிக்கும் வடநூல்களுக்கும் ஆக்கம் அளித்தது.

நேரே வடமொழியினின்று புகுந்த சொற்களும் உள்ளன. அவற்றின் சிதைவுமொழிகளாகிய பிராகிருத பேச்சு மொழியினின்று திரிந்து பல சொற்கள் தமிழில் புகுந்துள்ளன. பல்லவர் காலத்தில் இவ்வாறு பிராகிருதமொழி வாயிலாகப் பல சொற்கள் புகுந்தன என்பர்.

விஞ்ஞாபனம் என்பது நேரே புகுந்த சொல்• என்றும் ஆசிரியர் வி. கோ. சூ. காட்டுவர். பல்லவர் காலத்தில் புகுந்த ஒரு சில சொற்களாக பருப்பதம் , பரமேச்சுரன், நட்டம், விண்ணப்பம் முதலிய சொற்கள் காட்டப்படுகின்றன.*

சோழரது ஆட்சிக் காலத்தில் வடமொழி இலக்கியங்கள் மிகுதியாகப் பயிலப்பட்டன. அதனால் நேரே இலக்கியச் சொற்கள் தமிழில் புகுந்தன. ஒரு சில சொற்கள் தமிழ் மொழிக்கு ஏற்பத் திரிபு பெறுமலேயே புகுந்துள்ளன. அரசர்களின் பெயர்கள் வட சொற்களாகவே இருந்துள்ளன. இராசராசன், குலோத்துங்கன், விசயாலயன் முதலிய பெயர்கள் வட சொற்களே.

**வடமொழி வழக்காறுகள் :** வட சொல்லும் எழுத்தும் கலந்ததோடு இலக்கிய இலக்கண வழக்காறுகளும் ஒரு சில புகுந்து விட்டன. தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த சேனவரையர் வடமொழிப் போக்கை ஒட்டி உரை வகுத்தார். நன்னூல், பதவியல் என்ற ஒரு தனியியலை வடமொழி இலக்கணத்தை ஒட்டிப் புகுத்தியுள்ளது. பரிமேலழகர் திருக்குறளுக்குத் தந்த உரையில் பல வடமொழி வழக்குகளைப் புகுத்தியுள்ளார்; தண்டியலங்காரம் என்னும் அணி நூல் வடமொழிப் போக்கைத் தழுவி அணி வகைகளை விரிவு படுத்தியுள்ளது.

| **தமிழ்** | | **வடமொழி** |
|---|---|---|
| பழம் | — | Phala |
| மயில் | — | மயூர |
| களம் | — | Khala |
| வல் (வன்மை) | — | பல |
| கைதை | — | கைதகா |
| ஏலம் | — | ஏலா |
| பல்லி | — | பல்லீ |
| புற்று | — | புத்திகா. |

*கலைக் களஞ்சியம் பக். 469- தமிழ்

இவை வேத காலத்திலேயே வடமொழியில் அமைந்து விட்ட சொற்கள் என்பர்.*[1]

**இந்துஸ்தானி சொற்கள் :** 'சலாம்' 'சபாசு' என்ற சொற்கள் முறையே குமரகுருபரர் பிரபந்தத்திலும் திருப்புகழிலும் கலந்துள்ளமையை வி.கே.சூ. எடுத்துக் காட்டுவர்.

இவை அராபியச் சொற்களும் பாரசீகச் சொற்களும் ஆம். சிறப்பாக அரசாங்கம் குறித்த சொற்கள் மிகுதியாகத் தமிழில் புகுந்துள்ளன. இலாக்கா, சுபேதார் சைத்தான், சேப்பு (ஜேபி) இவை அராபியச் சொற்கள் என்பர்.*[2]

பாரசீகச் சொற்களே மிகுதியாகப் புகுந்துள்ளன. தபேதார், திவான், ராஸ்தா, ஜாமீன், ஜாகீர், சர்க்கார், சர்தார், ஹவால்தார், தயார், சுமார் முதலியவை பாரசீகச் சொற்கள் எனக் காட்டுவர்.*[3]

பழங்காலத்தில் வட சொற்களும் இடைக் காலத்தில் இந்துஸ்தானி சொற்களும் புகுந்தமை போலத் தற்காலத்தில் கற்றோர் பேச்சிலும் கலை விஞ்ஞானக் கருத்துக்களிலும் மிகுதியாக ஆங்கிலச் சொற்கள் கலந்துள்ளன. மேல் நாட்டு நாகரிகமும் விஞ்ஞானப் பொருள்களும் சிந்தனையும் பெருகி விட்ட காரணத்தால் தவிர்க்க முடியாத நிலையில் பல சொற்கள் புகுந்து வருகின்றன. பாமர மக்கள் பேச்சிலும் ஒரு சில ஆங்கிலத் திரிபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் உரை நடையே ஆங்கிலப் போக்கை ஒட்டி வளர்ந்துள்ளது எனில் மிகை இல்லை. உரைநடை வளர்ச்சிக்கு ஆங்கில மொழி மிக்க உதவியுள்ளது. ஆங்கிலம் படித்தவர்கள் தமிழில் எழுதும் பொழுது அவர்கள் சிந்தனை ஆங்கில அடிப்படையைக் கொண்டு விளங்குவதால் அச் சாயல் தமிழ் நடையில் படிந்து விட்டது. இது நீக்க முடியாத ஒன்று ஆகும்.

---

*[1] A History of the Tamil Language Page 159.
*[2] ,, 182.
*[3] ,, 182.

# 7. எழுத்துக்களின் வரலாறு

## எழுத்துக்கள்

**1. ஓவிய வடிவங்கள் :** ஓவிய வடிவங்களே எழுத்துக் களுக்கு முன்னோடியாக அமைந்திருக்க வேண்டும். கிறுக்கல் களாக ஒரு சில கருத்துக்களை அறிவிக்க முடிந்தது. கருத்தின் அறிகுறிகளாக இருந்த ஓவியங்கள் மெல்ல மெல்ல ஒலிகளின் அறிகுறிகளாக மாறியிருக்க வேண்டும். ஓவியங்கள் ஒலிகளின் அறிகுறிகள் ஆயின என்பதை விட அவ் ஓவியச் சிதைவுகளே இவ்வாறு ஆயின என்பது பொருந்தும்.

**2. உலக எழுத்துக்கள் மூன்று :** எழுத்துக்களின் தோற்றம் மூன்று மூலங்களினின்றே அமைந்திருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அந்த மூன்று இடத்தி லிருந்தே உலகத்துப் பல மொழிகளின் எழுத்துக்கள் உருவாகி யிருக்க வேண்டும் என்பர். எகிப்து; சுமேரியா, சீனு ஆகிய மூன்று எழுத்துக்களே எல்லா எழுத்துக்களுக்கும் வழிவகுத் தன என்பர்.

**3. எகிப்திய எழுத்துக்கள் :** கிரேக்கர்களே முதன் முதலில் எகிப்து எழுத்து முறையை மாற்றி அமைத்துக் கொண்டனர். இவ் வெழுத்துக்களிலிருந்தே கிரீக்கம், லத்தீன் முதலிய இந்தோ ஐரோப்பிய மொழிகள் எழுத்துக்களை அமைத்துக் கொண்டன. இவர்கள் எழுத்து வடிவத்தை ஓவிய எழுத்துக்கள் என்று வழங்கி வந்தனர். சுமார் ஐந்நூறு ஓவிய வடிவங்களைக் கொண்டு சொற்களை அறிவுறுத்தினர். இவ்வடிவுகள் முதன் முதலில் பருப்பொருளை உணர்த்தி மெல்ல நுண்பொருளையும் உணர்த்தி வந்தன.

காலஞ் செல்லச் செல்ல அவ்வடிவங்கள் தனி எழுத்துக்களைச் சுட்டத் தொடங்கின.

இந்த ஓவியங்கள் எழுதும் கருவிக்கும் வேகத்திற்கும் ஏற்ப மங்கி வளைந்து கொடுத்துத் தம் ஓவிய இயல்பு மறைந்து எழுத்து வடிவங்களாக நின்று விட்டன. இவ்வாறு அமைந்த எழுத்து வடிவங்களை ஒவ்வொரு மொழியும் தம் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாற்றிக் கொண்டன.

போனிஷியர்கள் (Phoenicians) இந்த எழுத்தை எகிப்தி லிருந்து கிரேக்க நாட்டுக்குக் கொணர்ந்து அதை மாற்றி அமைத்துக் கொண்டார்கள் என்று கூறப்படுகிறது. எகிப்து எழுத்துக்களை நேரே அப்படியே ஏற்றுக் கொண்டவர்கள் 'செமிடிக்' இனத்தவர். ஏனைய போனிஷிய எழுத்துக்களை ஏற்றுக் கொண்டவர்கள் கிரேக்கர்கள்.

இந்த செமிடிக் மொழியின் வாயிலாக அதன் ஒரு பிரிவு இந்திய நாட்டு **பிராமி** எழுத்தாக அமைந்தது. இந்த பிராமி எழுத்திலிருந்தே '**தேவநாகரி**' என்னும் எழுத்து அமைந்தது என்பர்.

ஓவிய வடிவம் எழுத்து வடிவமாக மாறியது. அவ்வாறு மாறிய எழுத்துக்களை மூவகைப்படுத்திக் காணமுடியும்.

(1) கருத்து வடிவ எழுத்துக்கள் (logographic); வடிவம் கருத்தை உணர்த்தல் (பழைய எழுத்துக்கள்).

(2) அசையெழுத்துக்கள் (logosyllabic) தேவநாகரி.

(3) ஒலியெழுத்துக்கள் (alphabetic) கிரேக்கம்.

**சுமேரிய எழுத்துக்கள்:** களிமண்ணில் இவ்வெழுத்துக் கள் எழுதப் பெற்றவை ஆதலின் இவை நேர்க்கோடுகள் நிரம்பியவையாக இருந்தன. இவற்றை வெட்டு எழுத்துக்கள் (cuneiform) என்பர். இது பாரசீக மொழிகளில் மேற் கொள்ளப்பட்டு மெல்ல மெல்ல இக் கருத்து எழுத்துக்கள்

அசை யெழுத்துக்களாகி ஒலியெழுத்துக்களாக மருவின என்பர். பெலுசிஸ்தானத்தில் உள்ள பிராஹீ மொழியும் இவ்வெழுத்து முறையைக் கொண்டது என்பர். இந்த நேர்க்கோடு எழுத்துக்கள் கிழக்கு ஆசியாவில் பாரசீக மொழிகளில் இடம் பெற்றன. முதன் முதலில் இது கருத்து எழுத்தும் அசை எழுத்தும் கலந்த நிலையில் இருந்தன. பாரசீக மொழியில் ஒலி எழுத்துக்களாக முற்றிலும் மாற்றப்பட்டன என்பர்.

**சீன எழுத்துக்கள் :** சீன எழுத்துக்கள் கருத்து எழுத்துக்களாகவே நின்று விட்டன. சீனச் சொற்கள் ஓரசைச் சொற்களாக இருத்தலின் அவற்றிற்குப் பொருந்திய நிலையில் இவ்வடிவங்கள் அமைந்துவிட்டன. புதிய புதிய கருத்துக்கள் கூட்டு வடிவங்களால் அமைக்கப்படுகின்றன. அழுகையைக் காட்ட 'மனிதனும் இருதயமும்' எழுத்தாக அமைகிறது. உணர்ச்சியைக் காட்ட 'மனிதனும் கையும்' அமைகிறது.

அடிப்படை வடிவமும் துணைக் கோடுகளும் கருத்து நுட்பங்களை விளக்குகின்றன.

எகிப்திய எழுத்துக்களும் சுமேரிய எழுத்துக்களும் சீன எழுத்துக்களும் தோற்றத்தில் ஓவியத்தில் தொடங்கிக் கருத்து எழுத்துக்களாகவும் அசை எழுத்துக்களாகவும் ஒலி எழுத்துக்களாகவும் மாறிவிட்டன. இப்பொழுது சீனமொழி தவிர எல்லா மொழிகளும் ஒலி எழுத்துக்களையே (alphabetic) உலக முழுவதும் மேற்கொண்டுள்ளன.

தமிழ் எழுத்துக்கள் இப்பொழுது வழங்கி வருவன தேவநாகரியை ஒட்டி அமைந்தவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அசோகர் கல்வெட்டிலிருக்கும் எழுத்துக்களும் இவ்வெழுத்துக்களும் மிக்க தொடர்புடையனவாக விளங்குகின்றன.

(1) பழங்காலத்தில் தமிழர்கள் தமக்கெனத் தனி எழுத்து முறை பெற்றிருக்க வேண்டும் என்றும் அது தன்னியல்பால் அமைந்தது என்றும் கருதுவர்.

(2) சுமேரிய எழுத்துக்களோடு திராவிட எழுத்து அமைப்புமிக்க தொடர்புடையது என்ற கருத்து இப்பொழுது நிலவி வருகிறது. இதுவரையிலும் தேவநாகரி எழுத்தை ஒட்டியே தமிழ் எழுத்துக்கள் பழங்காலத்திலும் அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்துப் பரவி இருந்தது. தமிழ் ஒலி அமைப்பு ஒழுங்கு முறைக்கும் தேவநாகரி முறைக்கும் முற்றிலும் ஒற்றுமை உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே தமிழ் எழுத்துக்களைப் பற்றி இம் மூவகைக் கருத்துக்கள் நிலவுகின்றன எனக் கூறலாம்.

(1) எகிப்திய வழிவந்த செமிடிக் இனத்தைச் சார்ந்த தேவநாகரி எழுத்தைப் பின் பற்றி அமைந்தவை என்பது.

(2) சுமேரிய எழுத்தைப் பின்பற்றி அமைந்தவை தமிழ் எழுத்துக்கள் என்பது.

(3) தன்னியல்பால் தனக்கென ஓர் எழுத்து முறை அமைந்திருக்க வேண்டும் என்பது.

மத்திய ஆசியாவில் உள்ள பிராஹுய் மொழியோடும் சித்திய இனத்தோடும் தொடர்பு படுத்தப்படும் திராவிட இனம் சுமேரிய எழுத்து வரலாற்றோடு தொடர்பு படுத்திக் காணல் பொருத்தம் எனக் கூறி வருகின்றனர்.